# SELECTION[illegible] TAMIL

## Poetry and Pro[illegible]

# இலக்கியத் திரட்டு

REVISED BY

Pandit T. S. SEETHARAMA AIYER
TINNEVELLY

819

TB
R31 L1M
N32
183933

[illegible]BLISHING HOUSE,
Trivandram.
1932

# SELECTIONS IN TAMIL
## POETRY AND PROSE

# இலக்கியத்திரட்டு

ஸ்ரீ வாணிவிலாச பப்ளிஷிங் ஹவுஸ்,

கரமனை, திருவனந்தபுரம்.

பதிவு செய்தது] 1932 [விலை 14 அணா.

# பொருளடக்கம்


| எண். | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்குறள் ... | 1 |
| 2. | நாலடியார் ... | 3 |
| 3. | நளவெண்பா (சுயம்வரகாண்டம்) ... | 4 |
| 4. | குங்கிலியக்கலய நாயனார் புராணம் ... | 9 |
| 5. | அரிச்சந்திர புராணம் ... | 14 |
| 6. | குசேலோபாக்கியானம் ... | 18 |
| 7. | கபிலர் அகவல் ... | 20 |
| 8. | சீறாப் புராணம் ... | 22 |
| 9. | தண்டலையார்சதகம் ... | 26 |
| 10. | மனோன்மணீயம் ... | 28 |
| 11. | புத்தர் மகனை இழந்ததாயின் மனந்தேறச் செய்தல் ... | 29 |
| | **வசனம்.** | |
| 1. | சந்திவிக்கிரகம் — வித்துவான் தாண்டவராய முதலியார் ... | 39 |
| 2. | அச்சுவித்தையின் வரலாறு — எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.எ., பி.எல். ... | 75 |
| 3. | கோவலன் (சிலம்பால் விளைந்த கதை) ... | 83 |

# I. திருக்குறள்

கற்றதனால் ஆயபயன் என் கொல்? வால் அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 1.

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2.

அந்தணர் என்போர் அறவோர்; மற்றெவ் வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 3.

தெய்வந் தொழாஅள், கொழுநற் றொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை. 4.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. 5.

மகன் தந்தைக் காற்றும் உதவி 'இவன் தநதை
என்நோற்றான் கொல்?' எனுஞ் சொல். 6.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 7.

இனிய உளவாக, இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 8.

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். 9.

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்;
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 10.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 11.

அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீஉழி உயத்து விடும். 12.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். 13.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல். 14.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேர்அறி வாளன் திரு. 15.

ஒப்புரவி னல்வருங் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 16.

நல்லா றெனினுங் கொளல்தீது ; மேல் உலகம்
இல்எனினும் ஈதலே நன்று. 17.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 18.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 19.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 20.

பொய்மையும் வாய்மை இடத்த; புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 21.

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 22.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். 23.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 24.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 25.

---

## II. நாலடியார்

எறிஎன் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள், அரும்பிணி;—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. 1.

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்கு
எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும். 2.

சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும். 3.

பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்—அச்சீர்
பெருமை உடைத்தக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும். 4.

கற்றனவுங் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந்—தானுரைப்பின்

மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தன்என் றெள்ளப் படும். 5.

பெருங்கடல் ஆடிய சென்றார், 'ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும்'—என்றற்றால்
இற்செய் குறைவினை நீக்கி, அறவினை
இற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு. 6.

இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். 7.

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி, மற்று
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்? என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன். 8.

---

## III. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றாதோட விட்டு. 1.

கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை யேரடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனாட னூர்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து. 2.

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்,
பெருவானிற் றேவர் பெரிது. 3.

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து. 4.

செங்கண் மதயானைத் தேர்வேந்தே, தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றானத் தோகையைத்தன் னாகத்தாற்
கோதாக வென்றானக் கோ. 5.

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்—யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணாறுந் தாரானைப் பார்த்து. 6.

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது. 7.

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ
உள்ளவா சொல்லென்று ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு. 8.

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை

சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லாம் உரைத்து. 9.

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய்! தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்றாள் எடுத்து. 10.

விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. 11.

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றா யெனவருண னாகண் டலன்றருமன்
மற்றோனு மீந்தார் வரம். 12.

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு. 13.

மன்னர் விழித்தா மரைப்பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 14.

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 15.

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணுநின்று
ஊசலா டுற்றாள் உளம். 16.

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. 17.

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 18.

கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை யாங்கு. 19.

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 20.

மல்லன் மறுகின் மடநா குடனாகச்
செல்லு மழைவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன். 21.

வேலை பெறுவமுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெறுதகலும் வானாடர்—வேலை

பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கும்
இருங்கலியைக் கண்டா ரெதிர். 22.

ஈங்குவர வென்னென் றிமையவர்தங் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினான்—நீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான். 23.

மன்னவரில் வைவே னளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்—உன்னுடைய
உள்ளக் கருத்தை யொழித்தே குதியென்றான்
வெள்ளைத் தனியானை வேந்து. 24.

விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றே னென்றான் கொதித்து. 25.

வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கண்
தூய்மையு மற்றவன் றோள்வலியும்—பூமான்
நெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடுங்கொற்ற வச்சிரத்தா னங்கு. 26.

செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன் கூட
இருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க
உடனாக வென்றா னுடனே பிறந்த
விடநாக மன்னன் வெகுண்டு. 27.

வெங்கதிரோன் றானும் விதர்ப்பன் றிருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போல்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்சில்
தீயடங்க வேறினான் றேர். 28.

இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல்—மென்மலரும்
சூட்டினார் சூட்டித் துடிசே ரிடையாளைப்
பூட்டினார் மின்னிமைக்கும் பூண். 29.

கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்
அணிமொழிக்கு மண்ண லவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றேவ ரொவ்வார் மகிழ்ந்து. 30.

---

## IV குங்கிலியக்கலய நாயனார் புராணம்

வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டில்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற்பதி, எறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி யிருப்பது கடவூ ராகும். 1.

வயலெலாம் விளைசெஞ் சாலி; வரம்பெலாம் வளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை; அணையெலாங் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கமுகின் காடப் புறமெலாம் அதன்சீர் போற்றல்;
செயலெலாந் தொழில்க ளாறே செழுந்திருக் கடவூ ரென்றும்.

குடங்கையின் அகன்ற உண்கட் கடைசியர் குழுமி யாடும்
இடம்படு பண்ணை தோறும் எழுவன மருதம் பாடல்;
வடம்புரி முந்நூன் மார்பின் வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை இடங்க டோறும் எழுவன சாமம் பாடல். 3.

துங்கநீண் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமுந் தீம்பால் நாறும்
மங்குல்தோய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கும் மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பால் நாறும். 4.

மருவிய திருவின் மிக்க வளம்பதி அதனில் வாழ்வார்;
அருமறை முந்நூன் மார்பின் அந்தணர் கலயர் என்பார்;
பெருநதி அணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார்; ஒழுக்கம் மிக்கார். 5.

பாலனும் மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளும் ஆற்றான்
மாலும்நான் முகனுங் காணா வடிவுகொண் டெதிரே வந்து
காலனா ருயிர்செற் றார்க்குக் கமழ்ந்தகுங் குலியத் தூபஞ்
சாலவே நிறைந்து விம்ம விடும்பணி தலைநின் றுள்ளார். 6.

கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதல் எம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல
அங்கவர் அருளி னாலே வறுமைவந் தடைந்த பின்னுந்
தங்கணா யகர்க்குத் தாமுன் செய்பணி தவாமை உய்த்தார்.

இந்நெறி ஒழுகும் நாளில் இலம்பாடு நீடு செல்ல,
நன்னிலம் முற்றும் விற்றும் நாடிய அடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கள் மாளப், பயில்மனை வாழ்க்கை தன்னின்
மன்னிய சுற்றத்தோடு மக்களும் வருந்தி னார்கள். 8.

யாதொன்று மில்லை யாகி யிருபகல் உணவும் மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங் கணவனார் கலய னார்கைக்
கோதில்மங் கலநூற் றாலிகொடுத்து 'நெற்கொள்ளும்' என்றார்.
அப்பொழு ததனைக் கொண்டு நெற்கொள்வான் அவரும் போக,
ஒப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனும் எதிர்வந் துற்றான்
'இப்பொதி என்கொல்?' என்றார் உள்ளவா றியம்பக் கேட்டு,
முப்புரி முந்நூன் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னார்.
'ஆறுசெஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம் ஈதேல், நானின்று பெற்றேன் நல்ல

பேறுமற் றிதன்மே லுண்டோ? பெறும்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வதென் னென்றுரைத்தெழும் விருப்பின் மிக்கார்.

'பொன்தரத் தாரும்' என்று புகன்றிட வணிகன் தானும்
என்றர இசைந்த தென்னத் தாலியைக் கலயர் ஈந்தார்
அன்றவன் அதனை வாங்கி, அப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார் நிறைந்தெழு களிப்பினோடும்.

விடையவர் வீரட் டானம் விரைந்துசென் றெய்தி, என்னை
உடையவர் எம்மை யாளும் ஒருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற ஒடுக்கி யெல்லாம் அயர்த்தெழு அன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி இருந்தனர் தமக்கொப்பில்லார்.

அன்பரங் கிருப்ப நம்பர் அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத் தரணிமேல் நெருங்க வெங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும் பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெருஞ் செல்வ மாக்கி வைத்தனன் மனையில் நீட. 14.

மற்றவர் மனைவி யாரும், மக்களும் பசியால் வாடி,
அற்றைநாள் இரவு தன்னில் அயர்வுறத் துயிலும் போதில்,
நற்றவக் கொடிய னார்க்குக் கனவிடை நாதன் நல்கத்
தெற்றென வுணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார்.

கொம்பனார் இல்ல மெங்குங் குறைவிலா நிறைவிற் காணும்
அம்பொனின் குவையும் நெல்லும் அரிசியு முதலா யுள்ள
எம்பிரான் அருளாம் என்றே யிருகரங் குவித்துப் போற்றித்
தம்பெருங் கணவ னார்க்குத் திருவமு தமைக்கச் சார்ந்தார்.

காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலய னாராம்
ஆலும்அன் புடைய சிந்தை அடியவர் அறியும் ஆற்றால்,
'சாலநீ பசித்தாய்; உன்றன் தடநெடு மனையில் நண்ணிப்
பாலின்இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக' என்றார். 17.

கலையனார் அதனைக் கேளாக் கைதொழு திறைஞ்சிக் கங்கை
அலைபுனற் சென்னி யார்தம் அருண்மறுத் திருக்க அஞ்சித்
தலைமிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயி னின்று
மலைநிகர் மாட வீதி மருங்குதம் மனையைச் சார்ந்தார். 18.

இல்லத்திற் சென்று புக்கார் இருநிதிக் குவைக ளார்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி,
"வில்லொத்த நுதலாய், இந்த விளைவெலாம் என்கொல்?" என்ன,
'அல்லொத்த கண்டன் எவமான் அருடர வந்த' தென்றார்.

மின்னிடை மடவார் கூற மிக்க சீர்க் கலய னார்தாம்
மன்னிய பெருஞ்செல் வத்து வளமலி சிறப்பை நோக்கி
'என்னையு மாளுந் தன்மைத் தெந்தையெம் பெருமான் ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம் என்றுகை தலைமேற் கொண்டார்

பதுமநற் றிருவின் மிக்கார் பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவனாரைக் கண்ணுதற் கன்ப ரோடும்
விதிமுறை தீப மேந்தி மேவுமின் அடிசில் ஊட்ட
அதுநுகர்ந் தின்பம் ஆர்ந்தார் அருமறைக் கலய னார்தாம்.

ஊர்தொறும் பலிகொண் டுய்க்கும் ஒருவன தருளி னாலே
பாரினில் ஆர்ந்த செல்வ முடையராய் பண்பின் நீடிச்
சீருடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர்நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர அடியவர்க் குதவும் நாளில். 22.

செங்கண்வெள் ளேற்றின் பாகன் திருப்பனந் தாளின் மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழ மெல்லாம் பூட்டவும் நேர்நில் லாமைக்
கங்குலும் பகலுந் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல. (23)

மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தாம் நாதனை நேரே காணும்

அந்நெறி தலைநின் ருனென் றரசனை விரும்பித் தாமும்
மின்னெறித் தனைய வேணிவிகிர்தனை வணங்க வந்தார். 24.

மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று
தொழுதுபோந் தன்பி னோடுந் தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற, மூன்றெரி புரப்போர் வாழுஞ்
செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார்.

காதலால் அரசன் உற்ற வருத்தமுங் களிற்றி னோடு,
தீதில்வான் சேனை செய்யுந் திருப்பணி நேர் படாமை
மேதினி மிசையே யெய்த்து வீழ்ந்திளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்த மெய்தி. 26.

சேனையும் ஆனை பூண்ட திரளும்எய்த் தெழாமை நோக்கி,
''யானும்இவ் விளைப்புற் றெய்க்கும் இதுபெற வேண்டு' மென்று,
தேனலர் கொன்றை யார்தந் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினுல் வருந்த லுற்ருர். 27.

நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ?'கலய னுர்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்ருர் ; அமரரும் விசும்பில் ஆர்த்தார்.

பார்மிசை நெருங்க வெங்கும் பரப்பினர் பயில்பூ மாரி;
தேர்மலி தானை மன்னன் சேனையுங் களிறும் எல்லாங்
கார்பெறு கானம் போலக் களித்தன; கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன், தொண்டர் மலரடி தலைமேல் வைத்து ;
விண்பயில் புரங்கள் வேவ, வைதிகத் தேரின் மேருத்
திண்சிலை குனிய நின்ருர் செந்நிலை காணச் செய்தீர் ;
மண்பகிர்ந் தவனுங் காணு மலரடி இரண்டும் யாரே
பண்புடை அடியார் அல்லாற் பரிந்துநேர் காண வல்லார்?''

என்றுமெய்த் தொண்டர் தம்மை யேத்தி, யங் கெம்பி ரானுக்கு
ஒன்றிய பணிகள் மற்றும் உள்ளன பலவுஞ் செய்து
நின்றவெண் கவிகை மன்னன் நீங்கவும் நிகரில் அன்பர்
மன்றிடை யாடல் செய்யும் மலர்க்கழல் வாழ்த்தி வைகி; 31.

சிலபகல் கழிந்த பின்பு திருக்கட வூரில் நண்ணி
நிலவுதம் பணியிற் றங்கி நிகழும்நாள், நிகரில் காழித்
தலைவராம் பிள்ளையாருந், தாண்டகச் சதுர ராகும்
அலர்புகழ் அரசுங் கூட அங்கெழுந் தருளக் கண்டு; 32.

மாறிலா மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க் கின்னமு தேற்கு மாற்றால்,
ஆறுநற் சுவைகள் ஒங்க அமைத்தவர் அருளே யன்றி
நாறுபூங் கொன்றை வேணி நம்பர்தம் அருளும் பெற்றார்.

கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேன் மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார். 34.

---

## V. அரிச்சந்திர புராணம்

### தேவதாசன் இறத்தல்.

வல்லியு மகனும் அந்த மறையவன் மனையிற் சேர்ந்து
சொல்லிய பணிக ளெல்லாஞ் சோர்வறச் செய்து பின்னும்
எல்லியோர் சாம மென்ன எழுந்திருந் தேவல் முற்றி
அல்லிரு சாமஞ் சென்றால் அளித்தகூ ழுண்டு றங்கி, 1.

கையினில் உலக்கை பற்றிக் காந்தளின் உதிரம் பாய
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினில் அருவி பாய

நெய்யினின் முடித்த கூந்தல் நெற்குத்துங் கொடுமை காணு
கையினிற் றிகழ்வேற் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்.

புன்கணுற் றரம்பை மாதர் வருந்தவும் புந்தி செய்யா
வன்கணன், இரக்க மில்லான், மடித்தவாய்வெடித்த சொல்லான்,
தன்கணன் பில்லான், பொல்லான், தறுகணன் விலைகொண்
[டாள்வோன்
இன்கணில் லாதான் பாரி யிவனிலுங் கொடிய பாவி. 3.

அடியினால் அஞ்சி மைந்தன் அனந்தலைப் பயமு ணர்த்த
விடியுமுன் எழுந்தி ருந்து விளைபுனங் களைப றித்துக்
கடிவனத் தடகு கொய்து காட்டமுஞ் சமிதை யும்பொன்
முடிபுனை தலையில் வைத்து முறைமுறை வருமந் நாளில், 4.

மைந்தனும் சிறுரோ டேகி வனந்தனில் விறகு கட்டித்
தந்திடு வழியின் ஓர்பால் தருப்பைகண்டு, 'இதுவிட் டேகில்
அந்தணன் முனிவான்' என்று அஞ்சி, ஓர் வடத்தின் நீழல்
இந்தனம் இறக்கி, அப்புல் இருந்திடும் புதர்க்கண் சென்றான்.

பறித்தனன் குசையைப் பற்றிப் பறித்தலும் முனிவன் ஏவக்
குறித்துவந் ததனுள் தங்கும் கோள் அராச் சீறி ஓங்கித்
தெறித்தழல் விழியால் சிந்தத் தீண்டிற்று ; தீண்ட லோடும்
வெறுத்தெழுந் தலறி யோடி வெருவியே தரையில் வீழ்ந்தான்.

வடத்தின்கீ ழிருந்த தோழர் மறுகிப்போய் வள்ளல் வீழ்ந்த
இடத்தினை யணுகி, 'ஐயோ! என்னுற்ற துரையாய்?' என்னப்
'படத்தினால் பெரிய நாகம் கடித்தது பாரும்' என்று
விடத்தினால் அறிவு சோர்ந்தான் விட்டுயிர் அடங்கிற் றன்றே.

ஆவிபோய் அகன்ற பின்னை அனைவரும் புரட்டிப் பார்த்துப்
'பாவியூழ் என்னே! இந்தப் பாலகன் இறந்தான் என்று

மேவிஅவ் வடத்தின் கீழ்வந் தவரவர் விறகு கொண்டு
காவியங் கழனி சூழும் காசியம் பதியிற் புக்கார். 8.

சந்திரமதி வருந்தல்.

பாலர்வந் தூரிற் புக்கார் ; பானுவுங் கடலிற் புக்கான் ;
மாலைவந் திறுத்த பின்னர் வழியினை நோக்கி அன்னை
பாலன்வந் திலனென் றேங்கிப் பரதவித் திருகண் தாரை
பால, நொந் துருகி வாயிற் கடைத்தலை வந்து பார்த்தாள் 9.

வணங்கிய கரத்தாள் சால வாடிய மனத்தாள் மக்காள்,
இணங்கியும் முடனே வந்த என்மகன் எங்கே? என்றாள் ;
மணங்கமழ் குழலாய், உன்றன் மைந்தனை அரவு தீண்ட
உணங்கியே யிறந்தா னென்றார்; உயிர்த்திலள் மறுகி வீழ்ந்தாள்.

மடத்தகை வல்லி பின்னு மைந்தரை நோக்கி, 'எந்த
இடத்திலே யிறந்தா' னென்ன 'யாம்வரும் வழியி னிற்கும்
வடத்தினுக் கயலே சற்றே வடக்கினிற் குசைப டர்ந்த
தடத்தினில் தெற்கே' யென்று சாற்றியே யவர்கள் போனார்.

அறிதியி தென்று சால அறிவழிந் துருகி வீழ்ந்து
மறுகினு ளுடையயோற் கஞ்சி வாய்திறந் தரற்றாள்; மாழ்கிச்
சிறுதொழில் முழுதும் செய்து தீர்ந்தபின் தேடிச் சேறல்
உறுதியென் றுளத்தி னுள்ளே யொடுக்கிவந் தகத்திற் புக்காள்.

முறைமுறை பணிக ளெல்லாஞ் செய்தற முடித்துப் பின்னர்
மறையவன் றன்னை யேத்தி வாய்புதைத் தழுது விம்மி
'இறைவ, கே ளரவந் தீண்டி யென்மகன் இறந்தான் ; அந்தச்
சிறையிலே சேறற் குன்றன் திருவுளம் அறியேன்' என்றான்.
சினக்கடுஞ் சொல்லாற் சீறித் திடுக்கிட வுரப்பி, 'வீணி,
எனக்குறு குறையே யன்றி யென்பொருட் கழிவு வந்தால்

உனக்கிறு குறைதான் உண்டோ? உறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயு முண்டோ? தவிர்கநீ போவ' தென்றான்.
'அடிமையே யெனினும் ஐயா, அந்தரத் திறந்தானென்றால்
கொடியனேன் தனக்குப் பெற்ற வயிறுதான் கொதித்தி டாதோ?
படியின்மே லிறந்தான் தன்னைப் பார்த்தெடுத் தடக்கிக் கங்குல்
விடியுமுன் வருவேன் நல்கு விடையெனத் தொழுது வீழ்ந்தாள்

மாலையங் குழலாள் கூற மறையவன் மனம்பொ ருந்தி
வேலைகள் மிகவு முண்டு ; விடியுமுன் வருவா யாகில்
நீலவேல் விழியாய், ஏகு நீயென ஒருகாற் சொன்ன
காலையே யெழுந்தி ருந்து கடிநகர் கடந்து போனாள். 16.

'பாவியேன் மகனே' யென்பள் ; பதைப்பள் ; யென் முகத்தின் மோதித்
தாவியே விழுவள் நின்று தயங்கியே மயங்கி வீழ்வள் ;
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள் ; பதறி யேங்கி
ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடலம் ஒத்தாள். 17.

ஆறெலாம் அடிகள் வைத்த அடியெலாம் விழிநீர் நின்ற
தூறெலாம் அரிவை சென்ற சுவடெலாங் கருதித் தொட்ட
மாறெலாங் கூந்தல் துன்று வனமெலாந் துணிகள் யார்க்கும்
தேறலாந் தகைமைத் தன்றிச் செடியெலாந் தேடிச் சென்றாள்.

ஓடினாள் ; உள்ள மெல்லாம் உருகினாள் ; கருகி மேனி
வாடினாள் ; விறகு வைத்த வடத்தினுக் கருகே வந்தாள் ;
நாடினாள் ; கழுகும் பேயும் நரிகளுங் குறளுந் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண் குமரனைச் சென்று கண்டாள்.

கண்டனள் ; கதறி வீழ்ந்தாள் ; கழுகெலா மிரியல் போகக்
கொண்டதோர் மகவி னாசை யாவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தா லேந்தி முருகனை மடிமேல் வைத்தே
அண்டரும் மறுகி யேங்க வாய்திறந் தரற்ற லுற்றாள். 20.

# VI. குசேலோபாக்கியானம்

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைந்நீட்டும்; முந்திமேல் வீழ்ந்து
இருமகவுங் கைந்நீட்டும்; மும்மகவுங்
கைந்நீட்டும், என்செய் வாளால்?
பொருமியொரு மகவழும்; கண்பிசைந் தழுமற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழும்மற் றொருமகவு; எங்
ஙனஞ்சகிப்பாள்? பெரிதும் பாவம்! 1.

'அந்தோ! என் வயிற்றெழுந்த பசியடங்கிற்
றில்லை' யென அழுமால் ஓர்சேய்;
'சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்கு அன்
னாய்!' எனப் பொய் செப்பும் ஓர்சேய்;
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ
தினில்ஒருசேய் முடுகி யீர்ப்ப;
நந்தாமற் றச்சேயும் எதிர்ஈர்ப்பச்,
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய். 2.

இவ்வண்ணங் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி ஏங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்தும், மடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்தும்,
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்தும், முகம்
வெரிந் புறந் தைவந்தும், ஆம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டும், நயத்
தோர்விதத்தில் ஆற்றல் செய்வாள். 3.

அடுத்தமனைச் சிறுன் ஒருவன் ‘இன்றுநம
தகங்கறிஎன் அட்டார்’ என்று
தொடுத்துவினு யினுல் ‘அச் சொற்பொருள் யாது?
அதுதான் எச்சுவைத்து? அன்னுய் நீ
எடுத்துரை’என் றிடுமகவுக் குரைக்கில், அது
செய்யெனில்,என் செய்வோம்! என்று
மடுத்தவஃ தறிந்திலே னெனமற்றுென்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள். 4.

வேறுமனைச் சிறுன் அயின்ற பக்கணங்கண்டு
ஓடிவந்து; விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்து, இன்
ஞன் இன்ன தின்ருன் என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி;
எனஉடுத்த உடைதொட் டீர்க்குந்
தேறுதலில் சிறுமகவை எடுத்துமார்
பிடைஅணைத்துச் சிந்தை நோவாள். 5.

‘குண்டலமோ திரங்கடகஞ் சுட்டிஅயல்
மனையார்தங் குழவிக் கிட்டார்;
புண்டரீகக் கண்அன்னுய்’ எனக்கு நீ
இடாதிருக்கும் பொருமை என்னே!
கண்டெடுத்திப் போதிடு’ எனக் கரைமதலைக்
கில்லாதான் கடன்தந் தானுக்கு
எண்பதச்சொல் வார்த்தையென நாளைக்கு
நாளைக்கென் றியம்பிச் சோர்வாள். 6.

# VII. கபிலர் அகவல்

உலகத்தீரே, உலகத் தீரே,
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின், சாற்றக் கேண்மின் :
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை ;
ஐம்பது இரவில் அகலும் துயிலினால் ;
ஒட்டிய இளமையால் ஓரைந்து நீங்கும் ;
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும் ;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.

அவற்றுள்,

இன்புறு நாளும் சிலவே, அதாஅன்று,
துன்புறு நாளும் சிலவே. ஆதலால்,
பெருக்காறு ஒத்தது செல்வம் ; பெருக்காற்(று)
இடிகரை ஒத்த(து) இளமை ; இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள். ஆதலால்,
ஒன்றே செய்யவும் வேண்டும் , ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் ; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் ; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் ; இன்னும்
'நாளை, நாளை' என்பீர் ஆகில்,
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர் ;
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர் ;
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்.
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான், பொருளொடும் போகான் ;
சாற்றவும் போகான் ; தமரொடும் போகான் ;

நல்லார் என்னுன் ; நல்குரவு அறியான் ;
தீயார் என்னுன் ; செல்வரென்(று) உன்னுன் ;
தரியான் ஒருகணம் தறுக ணுளன்.
உயிர் கொடு போவான் உடல்கொடு போகான்.

ஏதுக் கழுவீர் ? ஏழை மாந்தர்காள்,
உயிரினை இழந்தோ, உடலினை இழந்தோ ?
"உயிரிழந்(து) அழுதும்" என்(று) ஓதுவீ ராகில்,
உயிரினை அன்றலா(து) இன்றும் காண்கிலீர்.
உயிரினை இழந்த உடலது தன்னைக்,
களவு கொண்ட கள்வனைப் போலக்,
காலும் ஆர்த்துக், கையும் ஆர்த்துக்,
கூறை களைந்து, கோவணங் கொளுவி,
ஈமத் தீயை எரியெழ மூட்டிப்,
பொடிபடச் சுட்டுப், புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ? சதுரெனப் படுமோ ?
மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டேன் என்னுமோ ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ ?
திருவும் வருமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.

குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே

வழிபடு தெய்வமும் ஒன்றே ; ஆதலால்
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது ;
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே !

---

## VIII. சீறாப்புராணம்

### நபியவதாரப் படலம்.

பெருகிய கோடிசந் திரப்பிர காசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணிணைத்
திருநபி வருமவ தாரஞ் செப்புவாம். 1.

கடியி ருந்தெழு கற்பக முஞ்சுடர்
வடிவி ருந்த மணியும் வசனமும்
படியுங் கார்முகி லேழும் பழித்துவிண்
குடியி ருத்துங் கொழுந்தடக் கையினர். 2.

கொன்னுனை வெண்ணிறக் கோட்டு வாரணச்
செந்நிறக் குருதியிற் றிமிர்ந்து வாய்கழீஇ
மின்னவிர் கணமணி விளங்கு மாமுடி
யொன்னல ருயிரைமேய்ந் துறங்கும் வேலினர். 3.

வரபதி யுலகெலாம் வாழ்த்து மக்கா
புரபதிக் கதிபதி யென்னும் பூபதி
பரபதி யரசர்கள் பணிந்தி றைஞ்சிய
நரபதி யப்துல்லா வென்னு நாமத்தார். 4.

செழுமழை முகிலென வமுதஞ் சிந்திட
வழிகதிர் நபியென வகுத்த பேரொளி
பொழிகரத் தப்துல்லா விடத்திற் பொங்கியே
யெழிறரு திருநுத லிடத்தி லங்குமே. 5.

அயிலுறை செழுங்கரத் தப்துல் லாவெனும்
பெயரிய களிறுக்கோர் பிடியும் போலவே
ருயிரென விருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனு மாமினு வென்னு மங்கையே. 6.

இற்புகுந் தெழுமதி யிலங்கு மாமணி
விற்புரு வக்கடை மின்க ணுயகம்
பொற்பெலாம் பொதிந்தபொற் கொடிநற் பூவையர்
கற்பெலாந் திரண்டுருக் கொண்ட கன்னியே. 7.

அறத்தினுக் கில்லிட மருட்கோர் தாயகம்
பொறுத்திடும் பொறுமையிற் பூமிக் கெண்மடங்
குறைப்பெருங் குலத்தினுக் கொப்பி லாமணி
சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே. 8.

இத்தகைக் குலமயி லாமி னுவெனு
முத்தவெண் ணகைக்கனி மொழியு மோகனச்
சித்திர அப்துல்லா வென்னுஞ் செம்மனு
மொத்தினி தமுதமுண் டுறையு நாளினில். 9.

திங்க ளாமிற ஜபுமுதற் றேதிவெள் ளியிராத்
துங்க வார்கழன் முகம்மது பேரொளி துலங்கி
யெங்க ளுபக ரப்துல்லா நுதலிடத் திருந்து
மங்கை யாமினு வயிற்றினிற் றரித்தது வன்றே. 10.

திருத்தும் பொன்னக ரமரரே திரண்டவா னவரே
கருத்தி னுண்மகிழ்ந் தெவ்வையு மலங்கரித் திடுமின்
வருத்த மொன்றிலா முகம்மதை யாமினு வயிற்றி
லிருத்தி னேனென வுரைத்தன னியாவர்க்கு மிறையோன்

பரந்த வாய்க்கொடும் பாந்தளும் விடங்கொள் பஞ்சரமும்
கரிந்து பொங்கிய குழிகளுங் கனற்பொறி கதுவ
வெரிந்து செங்நெருப் பொழுகிய நரகங்க ளேழும்
விரைந்த வித்தடைத் திடுகவென் றனன்முதல் வேந்தன்.

அந்தண் கொன்னக ரடங்கலு மலங்கரித் ததுவும்
வெந்த பாழ்நர கங்களை யடைத்தபல் விதமுஞ்
சந்த திண்புய முகம்மது நபிதரித் ததுவு
மிந்த வாறுக ளனைத்தையு மறிந்திபு லீசு. 13.

கிரைவ னேங்குவன் மலங்குவன் கலங்குவன் கதறி [பன்
யிரைவன்கன்னத்திற் கையைவைத் திருந்தெழுந்திருப்
தரையின் மேல்விழுந் தெனக்கிலை யினிச்சிங்கா சனமென்
றுரைம றந்திடக் கிடந்தன னிருகணீ ரொழுக.

அறிவ ழிந்தமன் னவன்றனை மக்கள்வந் தடைந்து 14.
குறியுந் துன்பமும் வந்தவா றேதெனக் கூறி
நிறையு மக்களோ டுறும்வர லாறெலா நிகழ்த்தி
யுறையு மில்லிட மிவணிலை நமக்கென வுரைத்தான். 15.

இந்த வாசகங் கேட்டலும் மக்களெல் லோருந்
தந்தை யேயிதற் கென்செய்வோ மெனத்தடு மாறிப்
புந்தி நொந்துநொந் தவரவர் திசைதிசை புகுந்தார்
சிந்தை நொந்திபு லீசுவுந் திகைத்திருந் திடைந்தான். 16.

கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி யேவல்செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி யாமினு வுதர
மனையிடத் திருந்துமா நிலத்தி
லாதரம் பெருக நல்வழிப் பொருளா
யகுமது தோன்றின ரன்றே. 17.

நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனும் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
மகம்மது நபிபிறந் தனரே. 18.

பானுவின் கதிரா விடருறுங் காலம்
படர்தரு தருநிழ லெனவா
யீனமுங் கொலையும் விளைத்திடும் பவநோ
யிடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைஷியின் றிலதமே யெனலாய்

மானிலங் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
மகம்மது நபிபிறந் தனரே. 19.

செங்கதிர் பரப்பி யுலகெலாம் விளக்கித்
திரிதின கரனும்வெள் ளமுதந்
தங்கிய கிரணச் சசியுமந் தரத்திற்
றவழ்தரு முடுக்குல மனைத்தும்
பொங்கொளி யெவையுஞ் சுவனநா டனைத்தும்
பூதலம் விசும்புமற் றனவு
மிங்கெழின் முகம்ம தொளிவினி லென்று
லிவர்க்கெவை யுவமைசொல் லுவதே. 20.

## IX. தண்டலையார் சதகம்

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலும்
குலமுழுது நன்மையுண்டாம்;
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறு பெற்றும் ஆவதுண்டோ?
மன்றில்நடம் புரிவாரே, தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன?
குஞ்சரமொன் றீன்றதனால் பயனுண்டாமே. 1.

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கனுல கிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்;
திங்களணி சடையாரே, தண்டலையாரே,
சொன்னேன் சிறிது காலம்

கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. 2.

ஓதரிய தண்டலையார் அடிபணிந்து
நல்லனென் றுலக மெல்லாம்
போதமிகும் பேருடனே புகழ்படைத்து
வாழ்பவனே புருடன் அல்லால்
ஈதலுடன் உறக்கமின்றிப் பொன்காத்த
பூதமென இருந்தா லென்ன?
காதவழி பேரில்லான் கழுதையோ
டொக்குமெனக் காண லாமே. 3.

கற்றவர்க்குக் கோபமில்லை; கடந்தவர்க்குச்
சாதியில்லை; கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை; நல்லவருக்
கொருகாலும் நரக மில்லை;
கொற்றவருக் கடிமையில்லை; தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்
பெற்றவர்க்குப் பிறப்பில்லை; பிச்சைச் சோற்
றினுக்கில்லை பேச்சுத் தானே. 4.

பணந்தானே யறிவாகும்; பணந்தானே
வித்தையுமாம்; பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்;
பணந்தானே பேசுவிக்கும்; தண்டலைநீள்
நெறியாரே, பார்மீ திற்றான்
பணந்தானே பந்தியிலே குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே. 5.

## X. மனோன்மணீயம்

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே. 1.

கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை உனக்குவமை சொல்லுவதும் புகழாமே. 2.

ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே. 3.

சதுமறைஆ ரியம்வருமுன் சகமுழூம் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பதுமே. 4.

வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே. 5.

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே. 6.

தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தஉன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே. 7.

வடமொழிதென் மொழியெனவே வந்தஇரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே. 8.

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டும் மொழியானல்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார். 9.

கலைகள்தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார். 10.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே. 11.

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறுநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி. 12.

மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ .13.

---

## XI. புத்தர் மகனை யிழந்த தாயின் மனந்தேறச் செய்தல்

மண்ணில் வாழ்வுறும் மக்கள் மடிவது
திண்ண மென்றுளந் தேறத் தெளிவுரை
அண்ண லன்றோ ரணங்கினுக் கோதிய
புண்ணி யம்பெறு காதை புகலுவாம்.

வேறு

மூடமான இளமறியை முதுகி லேந்தி
மூவுலகும் கருணையினல் வென்ற வீரன்
திடமாகப் பலவுயிரு மளிக்குஞ் சோணைத்
தெய்வநதிக் கரைவந்து சேர்ந்தபோது,

வேறு

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வ மெனத்தகும் சீருடையாள்
ஆறாகக் கண்ணீர் வடித்து நின்றாள்—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்தி நின்றாள்
தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றி நின்றாள்.

வேறு

சந்திர மதிபோல் நின்ற தையலை நோக்கி ஐயன்
வெந்துயர் விளைந்த தென்னை விளம்புக எனலு மன்னாள்
நைந்துநொந் துருகி உள்ளம் நயனத்தின் வழியா யோட
மைந்தனைக் காட்டி யிந்த மறுமொழி கூற லுற்றாள்.

வேறு

அத்திமா மோங்கியெழு மருஞ்சோலை யதனில்
அயலொருவர் துணையின்றி அடியாளு மன்பாய்ப்
புத்திரனைப் போற்றிவரும் பொறுமையினைக் கண்டு
புண்ணியநீ கொண்டபரி வளவுண்டோ ஐயா!
தலைநாளில் நீ கண்ட சிறுமகனு மின்று
தள்ளாடு முயிரோடு கிடக்கின்றா னையா
தொலையாத கொடும்பாவி யானுமினி யிந்தத்
தொல்லுலகில் வாழ்வதிலோர் பயனுண்டோ ஐயா!
சிரித்தமுக மெனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடுமவ் வேளை

விரித்தபட மெடுத்தரவொன் றடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந் ததுவே!
பால்மண மாருதசிறு பாலகனு மறியான்
படவரவை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டான்
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டா னையோ!
சிறுபொழுது சென்றிடஎன் செல்வமக னுடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட தையா!

விடமேறி மடிந்ததென விளம்புகின்றார் சிலரே
விதியாலே விளைந்ததென விரிக்கின்றார் சிலரே
தடையில்லை இதுமூடு சன்னியென்றார் சிலரே
சஞ்சீவி யளித்தாலும் சாமென்றார் சிலரே!
வயித்தியரைக் கண்டிந்த வரலாறு சொல்லி
மயக்கமிது நீங்கவொரு மருந்திலையோ என்றேன்
பயித்தியமோ இனியேனும் பயனில்லை என்றார்
பட்டமரம் தளிர்த்திடுமோ பாரிடத்தி லென்றார்.

அன்பாக ஆவிட்ட சிறுமுத்த மதனால்
ஆவிக்கு மிடையூறுண் டாமோ என் ஐயா
வன்பாரில் மகவிழந்து வாழ்வேனோ ஐயா
மலையேறிக் குதித்துயிரை மாய்ப்பேனே ஐயா!
கண்டாரில் மிக்கவுளக் கனிவுடையர் ஒருவர்
காரிகையே மலைமீது காவியுடை யணிந்து
முண்டிதமா யலையுமொரு முனிவரடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியுமென வுரைத்தார்.

### வேறு

காடு மலையும் கடந்து வந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்க வந்தேன்
வாடு மலர்ச்செண்டு போல் கிடக்கும்—இந்த
மைந்த னுயிரெழச் செய்யு மையா.

நெஞ்சிற் கிடத்தி வளர்த்த பிள்ளை—கண்ணில்
நித்திரை நீக்கியான் காத்த பிள்ளை
விஞ்சு தவத்தினில் பெற்ற பிள்ளை—என்னை
விட்டுப் பிரிந்தறியாத பிள்ளை,
பெற்ற வயிறு துடிக்குதையா—ஒரு
பிள்ளையும் வேறெனக் கில்லை ஐயா
உற்ற உறவினர் இல்லை ஐயா—என்மீ
துள்ள மிரங்கிட வேணுமையா!

### வேறு

வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா!
முகம் பார்த்துப் பேசாமல்
முலைப்பாலு முண்ணுமல்
மகன் கிடக்கும் கிடைகண்டு
மனம்பொறுக்கு தில்லை ஐயா!
நீடு மதியினைப்போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடி நிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா!

பின்னி முடிச்சிடம்மா
        பிச்சிப்பூச் சூட்டிடம்மா
என்னு மொழிகளினி
        எக்காலம் கேட்பனையா!
நெஞ்சிற் கவலையெலாம்
        நிறகாம லோட்டுமந்த
புஞ்சிரிப்பைக் காணுது
        புத்தித் தடுமாறுதையா!
இட்டளைந்து கூழை எனக்
        கின்னமுத மாக்கியகை
கட்டழிதல் கண்டுமனம்
        கறங்காய்ச் சுழலுதையா!
சோலைப் பசுங்கிளிகள்
        தோழனையும் காணுமல்
நாலு திசைகளிலும்
        நாடித் திரியாவோ?
அன்னப் பறவைகளென்
        அழகனைப் பார்க்கவந்தால்
என்னமொழி கூறஇனி
        என்ணு வெழுமையா?
துள்ளிவிளை யாடஎன்றன்
        சுந்தரனைத் தேடிவரும்
புள்ளிமான் கன்றினுக்கெப்
        பொய்சொல்லி நிற்பனையா!
சித்திரத் தேரும்
        சிறுபறையும் கூடியெனைப்
பித்தியிலும் பித்தி
        பெரும்பித்தி ஆக்குதையா!

குஞ்சை யிழந்தகுயில்
கூவியழக் கண்டகனை
நெஞ்சை யறுக்குதையா !
நினைப்பொழிய மாட்டாதையா.
கொம்படர்ந்த மாவின்
குலையடர்ந்த பூம்பிஞ்சு
வெம்பிவிழக் கண்டகனா
மெய்யாய் விடுமோ ஐயா.

கழுத்திற் கயிறிறுகிக்
கன்றுவிழக் கண்டகனா
பழுத்துப் பலித்திடுமோ
பலன்மாறி நின்றிடுமோ ?
தாயாகி உள்ளம்
தருக்கி யிருந்ததுபோய்ப்
பேயாகி யின்று
பிணந்தூக்கி நிற்பேனோ ?
இந்தப் பிறவில்யான்
எப்பிழையும் செய்தறியேன்
எந்தவிதம் என்வயிற்றில்
இவ்விடியும் வீழ்ந்ததையா !

வேறு

கன்றொ ழிந்தகா ராவின் கலக்கமொத்
தன்ற ரற்றி அழுத அரிவையை
என்றும் எங்கணும் எவ்வுயிருந் தொழ
நன்று கண்டமெய்ஞ் ஞானியும் நோக்கியே.

வேறு

தாயே நின் மனக்கவலை—ஒழிந்திடத்
　　தக்கநல் மருந்தளிப்பேன்
சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
　　திரியவும் செய்திடுவேன்.

நாவிய கடுகு வேண்டும்—அதுவுமோர்
　　நாவுரி தானும் வேண்டும்.

சாவினை அறியாத—வீட்டினில்
　　தந்ததா யிருக்கவேண்டும்
பக்கமாம் பதிகளிலே—சென்று நீ
　　பார்த்திது வாங்கி வந்தால்
துக்கமும் அகலுமம்மா—குழந்தையும்
　　சுகமாக வாழுமம்மா.

வேறு

என்றுரைத்த மொழிகேட்டவ் வேழை மார்பில்
　　ஏந்தி யணைந்திடு மகனை யூரிலெங்கும்
சென்றுகடு கிரந்துவெறுங் கைய ளாகித்
　　திரும்பிமுனி திருவடியைச் சிரமேற் கொண்டு,

வேறு

"புவியெலாம் நிறைந்த புகழோய்; புலவர்
கவியெலாம் நிறைந்த கருணையங் கடலே!
ஊரெலா மலைந்தேன் ஒவ்வொரு மனையும்
ஏறி யிறங்கினேன், என்குறை உரைத்தேன்
ஏழை ஒருமகள்—ஏழையலா தெவர்
ஏழைக் கிரங்குவர்?—என்கதை கேட்டு

மார்போ டணைத்த மதலையைக் கண்டு
மாறாக் கண்ணீர் வடிவதை நோக்கி
ஆறாத் துயரம் அடைந்தன ளிவளெனப்
பரிவு கொண்டேன் பக்கம் நின்று
நாவிக் கொழித்த நாவுரிக் கடுகையும்
அளந்தென் மடியில் அளித்திட வந்தனள்.

பிள்ளை யென்றிடில் பேயு மிரங்குமே
பெண்டிர் இரங்குதல் பேசவும் வேண்டுமோ?
யானும், இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்
தாயரே நீவிர் தங்கும் மனையிது
சாவறி யாத தனிமனை தானோ?
தந்தை தாயார் தமக்கை தங்கை
மைந்த ரெவரும் மரித்ததுமுண்டோ?
உரைத்திடுமென்றேன். உரைகேட்டவரும்
'வினவிய தென்னை? விரி நீருலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன்
மாலையில் தளர்ந்து மறைவது மிலையோ?
இம்மா நிலத்தில் இயற்கையின் குறிப்பெலாம்
அம்மா நீயும் ஆய்ந்திலை போலும்?
இவள், கணவனை யிழந்த கைம்பெண் ணம்மா
இவள், தந்தையை யிழந்த தமியளம்மா
இவள், மைந்தனை யிழந்த வறியவளம்மா
இவள், தமயனை யிழந்த தங்கையம்மா
இவள், மாமனை யிழந்த மருகி யம்மா
இவள், அன்னையை இழந்த அகதி யம்மா

இறந்தவரெண்ணிலர் இருப்பவர் சிலரே
பிறந்தவ ரிறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகி னியற்கை ; ஒழித்தலும் எளிதோ ?'
எனவாங்குத், தேறு மொழிகள் தெரிந்தவைகூறிக்
கண்முன் சான்றுகள் காட்டி நின்றனர்.
யானுமுன்,
கட்டளை யுணர்ந்து கவலை கைம்மிக
மற்றொரு வீட்டின் வாயிலிற் சென்றேன்.
அங்குளார்,
"கடுகினை யளந்து கட்டிவைத் தம்மா
உழுதவரிந் நாள் உலகி லில்லை
விதைத்தவர் அன்றே விண்ணுல கெய்தினர்
காத்தவர் காலமும் கழிந்து விட்டது
அடிமையு மிறந்துநா ளைந்தா றுகுது
காலனை எவரே கடக்க வல்லவர்''
என்று கூறினர் என்செய ஐயா ?

வேறு

ஐயமிடு மனைகளிலே மரணமென்றும்
அறியாத மனையேது மில்லை யில்லை
வையகத்தில் பிறப்புளதே லிறப்பு முண்டு
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்.
கையமர்ந்த மகவினையும் கானி லிட்டேன்
கண்விழியாப் பிணம் வைத்துக் காப்ப துண்டோ
செய்ய திருவடி பணிந்து போற்றி யிந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்'' என்றாள்.
மங்கைமனத் தெளிவை யெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினு லறிந்தவளை நோக்கி அம்மா

எங்குமிலாப் பொருள் தேடச் சென்று நீயும்
யான் நினைத்த பொருளினைப் பெற்றுவந்தாய்
தங்குமிந்த உலகியற்கை மாறு தம்மா
தனயனை நீ எண்ணிமனம் தளர வேண்டாம்
அங்கமெலாம் வாயாக அழுதிட்டாலும்
அவனெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ ?

வேறு

பசும்புல் லடர்ந்து பன்மலர் விரிந்து
விசும்பு மண்ணில் விழுந்ததோவெனக்
கண்டவர் ஐயுறு காட்சிய தாகி
மண்டல வளமெலாம் மலிந்து தங்குமிப்
புலத்தின் வழிமன் புரமது சென்று
கொலைக்கள வேள்விக் குண்டினுக் கிரையாய்
ஆவதை அறியும் அறிவிலா ஆட்டினைப்
பாவிக ளோட்டுமிப் பரிசு போல
ஆசையும்
இன்ப வழியில் இதமா யிழுத்துத்
துன்ப மென்னும் தொடக்கில்
மன்பதை யுலகை மாட்டிவிடுமே.

வேறு

இம்மா நிலத்தில் வுண்மை யெலாம்
யானும் அறியச் செல்கின்றேன்
அம்மா நீயும் உன் மகனை
அடக்கம் செய்போ வென்றுரைத்தான்
வெம்மா வினையின் வேரறுத்து
விளங்கும் ஞான ஒளிகண்டிங்
கெம்மா தவரும் தொழுதேத்த
எழிலார் கமலத் தெழுந்தோனே.

—எஸ். தேசிவிநாயகம் பிள்ளை.

# வசனம்.

## 1. சந்திவிக்கிரகம்

### அடுத்துக் கெடுத்தல்

"முன்னே பகையாளிகளா யிருந்தவர்களுடைய விசுவாசத்தில் நம்பிக்கை வைக்கலாகாது. நம்பினால், எப்படிக் காகம் கோட்டான்களின் குகையைக் கொளுத்தி நாசம் பண்ணினதோ அப்படி நேரிடும்" எனச் சோமசன்மா சொல்ல, ராஜகுமாரர்கள் "அஃது எப்படி?" என, அவன் சொல்லுவான்.

தென்தேசத்தில் மயிலை நகரத்தின் சமீபத்தில் ஒரு பெரிய ஆலமரத்தில் மேகவர்ண னென்னுங் காக ராஜன் தன் கூட்டங்களோடுகூட விருக்கையில், அங்கே அறிமர்த்தன னென்னும் ராஜகோட்டான் கூட்டத்தோடும் மலைக்குகையி லிருந்து வந்து ஆலமரத்தை வளைத்துக்கொண்டு இராத்திரியில் அகப்பட்ட காகத்தை யெல்லாங் கொன்றுவிட்டு நாடோறும் போய்க்கொண் டிருந்தது. அதனால் அவ்விடத்தை விட்டுவிடும்படி காக்கைகட்கு நேரிட்டது. ஆகையால், மேகவர்ணன் தன் மந்திரிகளை யழைத்து, 'நம் பகைவர் நாடோறும் இங்கு இராத்திரி வந்து காக்கைகளைக் கொல்லுகிறார்கள்; நமக்கோ இரவிற் கண் தெரிகிறதில்லை; மேலும் அவர்களிருப்பிடமு மறியோம், அறிந்தால் அங்கே போய் அவர்களைக் கொல்லலாம்; பகைவரை அசட்டை பண்ணினால் அது நோய் போற் பெருகிப் பொல்லாங்கு விளைக்கும், ஆதலால் இப்

போழ்து சந்திவிக்கிரகம், பேதம், கலக மென்னு மிவற்றுள் தக்கது இதுவென்று சொல்லுவீர்கள்' என, இதைக்கேட்டு மந்திரிகள், 'அரசன் கேட்பதற்கு முன்னேதானே பிரதானிகள் இதஞ் சொல்ல வேண்டும், இல்லாவிடிற் கேட்ட பிறகாயினும், விரைவாகச் சொல்லவேண்டும். அப்படிச் செய்யாமற் சும்மா இச்சகம் பேசுகிறவனை அரசனுக்குச் சத்துருவென்று நினைக்க வேண்டும்' என்றிவ்வாறு சொல்லி, பின்பு மந்திரிகள் ஐந்தும் என்ன செய்வோமென்று ஒன்றுக்கொன்று ஆலோசித்தன. பின்பு, முதல் மந்திரியாகிய

உத்தமசீவி: அரசனை நோக்கி, மகாராஜாவே! வலியவர்களுடனே பகை பண்ணலாகாது. சமாதானமே தகுந்தது; ஏனெனில், பகைவர்களை வணங்கிக் காலம் பார்த்து மோசம் பண்ணுகிறவர்கள் சுகமடைகிறார்கள். ஆற்றில் தண்ணீர் நிரம்பிப் பெருகி வருகையில் வணங்கிய செடி நாசமடையாமற் பின்பு முன்போல் நிமிர்ந்திருக்கிறதே. நெருக்கமான காலத்தில் துஷ்டர்களுடனே சமாதானம் பண்ணி உயிரைக் காப்பாற்றினாற் பின்பு எல்லாச் செல்வமுஞ் சம்பாதிக்கலாம். மேலும், தனக்குப் பலபேர் பகைவர்களிருந்தால் அவர்களில் ஒருவனோடு உறவு கொண்டு எல்லாரையுங் கெடுக்கவேண்டும். நிலமும் நட்பும் பொருளுமாகிய இவற்றின் இருப்பைத் தன்னிடத்திலும் மாற்றாரிடத்திலும் இவ்வளவென் றாராய்ந்துகொண்டு கூடுமானால் அவருடன் எதிர்க்க வேண்டும்: இல்லாவிடிற் கூர்ம விருத்தியை அநுசரித்துப் பின்பு தனக்குப் பலமுள்ள காலத்தில் கிருஷ்ண சர்ப்பத்தின் வியாபாரத்தை யநுசரிக்க வேண்டும். ஏனெனில், மாற்றாருடைய வலியும் வலியின்மையும் பார்த்து எது செய்யத்தக்கதோ அது செய்ய வேண்டும். அச்சமயத்திற்

கொக்குப் போல் உறங்கி யிருந்து சமயத்தில் அதன் குத்தைப்போ லிருக்க வென்று பெரியோருஞ் சொல்லி யிருக்கிறார்களே' என, இப்படி அதன் வாக்கியத்தைக் கேட்டு ராஜன் இரண்டாம் பிரதானியைப் பார்த்து, 'உன் கருத்தென்ன? சொல்' என,

இரண்டாம் மந்திரி: 'அவன் சொன்னவற்றிற் சிறிதும் நன்மையில்லை. பெரிய சங்கடம் நேரிட்டபோது பகைவருடனே சந்தி பண்ணலாகாது. நெருப்பினாற் காய்ச்சின நீர் அந்த நெருப்பை யவியாதா! நம்மைக் கோட்டான்கள் வருத்துகின்றன வென்று அவர்களோடு சந்தி பண்ணினால், அவர்கள் நம்மைக் கொல்லுதல் நிச்சயம்; விஷமச் சுரம் அப்பியங்கனத்தால் வளர்வது போலும், நெய்யினால் நெருப்பு விருத்தியாவது போலும் பொல்லாங்கு சம்பவிக்கும். சத்துரு வலியவன் நாம் எளியோ மென்பீரானால் அதற்குச் சிந்தையில்லை; யானை பெரிதா யிருந்தாலும் அதைச் சிங்கக்குட்டி கொல்லா நிற்கும். ஆதலால், மனோ பலத்தோடு பகைவரைக் கொல்ல வேண்டும். அரசனுடைய கொடுங் தண்டத்தைப் பார்த்து வைரிகள் இயல்பாய்ப் பயமடைகிறார்கள், எங்கும் பெயர் பெற்றிருக்கிற பராக்கிரமசாலியாயும், எல்லாராலும் அறியப்பட்டவனாயு மிருக்கிறவன் எவனோ அவனே பாக்கியவான்; இல்லாவிடின், தாயின் யௌவனத்தைக் கெடுத்துப் பயனென்ன? பராக்கிரமத்தால் உயிர்த்திருப்பவனே உயிருள்ளவன்; மற்றவர்கள் பிணத்துக்கு ஒப்பானவர்கள்' என்று இப்படிச் சொன்னவற்றை யெல்லாம் அரசன் கேட்டு, மூன்றாம் பிரதானியைப் பார்த்து, 'உன் கருத்தைச் சொல்வாய்' என,

மூன்றாம் மந்திரி: 'அரசனே! கேள். பகைவன் தன்னினும் வலியவனாயிருந்தால் அவனோடு பொருந்தலாவது பொரு

தலாவது ஒன்றுஞ் செய்யாமல் தன்னிடத்தைவிட்டு வேறிடத்திற்குப் போகவேண்டும்; இதுவே நல்லது. ஏனென்ருல், இவ்வேளை சண்டை செய்யலாகாதென்று வைரியின் பலத்தைப் பார்த்து எவன் தேசத்தைத் துறந்துபோகிருனே அவன் பாண்டவர்களைப்போற் சுகமடைகிருன்; இதைவிட்டு எவன் செருக்குடனே யுத்தஞ் செய்கிருனே அவன் குலமுதலறக் கெடுகிருன்' என, இதைக்கேட்டு அரசன் நாலாம் மந்திரியைக் கேட்க,

நாலாம் மந்திரி : 'தன் இடம்விட்டுப் பெயர்தல் தகுதியாகக் காணவில்லை. முதலை தன்னிடத்தி லிருந்தால் மலையொத்த யானையையும் இழுத்துக்கொண்டு போகிறது; அதுவே தன்னிடம் விட்டுப் பெயர்ந்தால், அதை நாய்களும் இழுத்துக்கொண்டு போகின்றன. ஆகையால், தன் இடத்தில் இருந்து நட்புள்ளவர்களை உதவிக்காக அழைப்பித்துக் கொண்டு பகைவர்களைக் கெடுக்க வேண்டும். எவன் சத்துரு வருகிருனென்று பயந்து தன்னிடம் விட்டுப் போகிருனே அதன் மறுபடி அவ்விடத்திற்கு வருகிறதில்லை. பற்பிடுங்கின பாம்பும், மதமில்லாத யானையும், இடம் விட்டுப் பெயர்ந்த அரசும் எல்லாராலும் அவமான மடைகின்றன. மேலும், தன்னிடத்தில் இருந்தால் ஒருவனே நூறு பெயருடன் யுத்தம் பண்ணுகிருன். ஆதலால் துர்க்கத்தையும் மதிலையும் ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் சார்பாற் பகைவருடனே யுத்தம் பண்ணவேண்டும்; அதனுல் வெற்றி பெற்ருல் லக்ஷ்மியைப் பெறலாம், செத்தாற் சொர்க்கம் பெறலாம். ஆகையால், அவ்விரண்டையுந் துறக்கலாகாது. நிலத்திற் சிக்கென ஊன்றிய வேரையுடைய மரம் காற்றினுல் விழாது; அந்த மரமே தன் இடத்திலிராவிட்டால், வாயு அதைத் தள்ளுகிறது. ஆகை

யால், ஏதொன்று செய்யத் தக்கதோ அதை இங்கேயிருந்து கொண்டே செய்யவேண்டும்' என, இப்படி அதன் கருத்தை அறிந்துகொண்டு, ஐந்தாம் மந்திரியை உன் அபிப்பிராய மெப்படி?' என,

ஐந்தாம் மந்திரி : 'சுவாமி! என் ஆலோசனையும் இப்படியே இருக்கிறது, சார்பைவிட்டாற் சமர்த்தர்களும் பராக்கிரமக் குறைவடைகிறார்கள்; ஆதலால் யாரையாயினும் உதவிக்குச் சேகரித்துக்கொள்ள வேண்டும்: அதுவும் இருப்பிடத்திலிருந்தே சம்பாதிக்க வேண்டும். உறைவிடம் விட்டுப் பிரிந்தவனுக்கு யாரும் வாய்ப்பேச்சினாற்கூடச் சகாயம் பண்ணார்கள். எப்போது அக்கினிக்குப் புல் சருகு முதலியவற்றின் சேர்க்கையாற் காட்டைக் கொளுத்த வலி யுண்டாகிறதோ அப்போது வாயு மித்திரத்தனமா யுதவிபண்ணுகிறது; அந்நெருப்பே விளக்கு வடிவாய் அந்தரமாக நிற்கும்போது காற்றே அதை அவிக்கிறது. மேலும், வலியவர்களுடைய சார்பிருந்தால் எல்லோர்க்கும் பெருமை யுண்டாகிறது; தாமரையிலையைச் சார்ந்த நீர்த்துளி முத்தினொளியை அடைகிறது. சார்பில்லாமல் யாதொரு காரியமு மாகிறதில்லையாகையால், மற்றொருவனை அனுசரிக்க வேண்டும். இதுவே என் கருத்து' என்றது.

பிறகு மேகவர்ணராஜன், பிதாவின் மந்திரியாகிய சிரஞ்சீவியைப் பார்த்துக் கும்பிட்டு, 'உம்முடைய சந்நிதியில் எல்லோரையுங் கேட்டு அவர்கள் சொன்ன உத்தரங்களையும் உம்மைக் கேட்பித்தேன், இவற்றில் எது தக்கதோ அதை நீர் சொல்லும்' என்றது.

கிழ மந்திரி : இப்படி ராஜா சொன்னதைக் கேட்டு, எல்லோரும் நூற்சார்பாலேயே சொன்னமையால் யோக்கிய

மாகவே இருக்கின்றன. ஆனால், சத்துரு பலவானாயிருந்தாலும் அவனுக்கு விசுவாசங் காண்பித்து அவனைக் கெடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் துர்க்க முதலியவற்றிலிருந்து தனக்குஞ் சத்துருவுக்கு மிருக்கிற பலாபலன்களை யறிந்து எது செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும். இது விகிதமாம். ஏனென்றால், மாதர்கள், முகநட்புள்ளவர்கள், பகைவர்கள், சூதாடுகிறவர்கள், இவர்களிடங்களிலே மெய் முன்னுக்கு வாராது; தெய்வம், குரு இவர்களிடத்தில் மெய்யாகவே நடக்கவேண்டும்' என, இப்படிப் பெரிய மந்திரியின் வசனங்களைக் கேட்டு,

மேகவர்ணன்: பிறனுடைய புரைசல்களை எப்படி அறியலாம்?' என,

சிரஞ்சீவி: 'மறைந்த பொருள்களைப் பிராமணர்கள் வேதத்தினாலேயும், பசு வாசனையினாலேயும். அரசன் வேவுகாரரை அனுப்பியும், மற்றவர்கள் தங்கள் கண்களாலும் இப்படிப் பலவிதமா யறிகிறார்கள்' என,

மேகவர்ணன்: அதைக் கேட்டு, 'நல்லது, இந்தப் பிரதானிகள் ஏன் பலபல விதமாய்ச் சொன்னார்கள்?' என,

சிரஞ்சீவி: 'நாரதர் தருமராஜனுக்குச் சொன்னதைக் கேள், அரசன் தனக்கு உபயோகமானவற்றைக் குறித்து, ஒரு நாழிகை விசாரியாவிட்டாலும் உடனே கெடுதி வரும். உடையவன் கண்ணோடாப் பயிர் அழியாதா. ஆதலால், மந்திரி முதலானவர்களுடைய சமாசாரங்களைக் கணந்தோறுந் தெரிந்து கொண்டு, எப்போதும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும்' என,

மேகவர்ணன்: அதைக் கேட்டு, 'காகங்களுக்குங் கோட்டான்களுக்கும் வைரம் எப்படி வந்தது? சொல்லும்' என காலங்கண்ட கிழமந்திரி சொல்லும்:

## கதை 1.

'ஒரு நாள் மயில் முதலாகிய பறவைகளெல்லாங் கூடி யிருந்து, நமக்கெல்லாம் கருடன் அரசனாயிருந்தும் நம்மைக் கொல்லுகிற வேடர்களினின்று நம்மைக் காப்பாற்றாமல் இதாஹிதமுந் தெரியாம லிருக்கிறான். இத்தன்மையுடைய இறைவனிருந்து பயனென்ன? நமக்கு அரசனே வேண்டா மென் போமானால், மீகாம மில்லாமற் கப்பல் கரைகாணாததுபோல், அரச னில்லாவிட்டால் நிலைகெட்டுப் போவோமாகையால், எல்லாப் பறவைகட்கும் அரசனாகக் கோட்டானை நியமிக்க வேண்டுமென நிச்சயித்து, ராஜ பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துப் பின்பு பல வாத்தியங்களை முழக்கிக் கோட்டானைச் சிங்காதனத்தின்மேல் உட்காருவிக்க வேண்டுமென் றிருக்கையில், ஒரு காகம் வந்து அவற்றைப் பார்த்து, "இதென்ன காரியம், இதென்ன காரியம்?" என, அப்போது எல்லாப் பறவைகளும், பறவைகளில் வஞ்சக முள்ள காகமும்; மனிதரில் நாவிதனும், விலங்குகளில் நரியும், மாதர்களிற் பணிப்பெண்ணும் சதுரர்களா யிருக்கிறார்கள்; ஆதலால் இச்செய்தியை இதற்குச் சொல்லி இதன் உடன்பாடும் பெறவேண்டு மென்று தீர்மானித்து, அதைப் பார்த்து, "எங்களுக்கு அரசனில்லாமையால் இக் கூகையை அரசனாக் கிக் கொள்ளுகிறோம், இதற்கு நீயும் உடன்படு" என, இதைக் கேட்டு அக் காகம் குலுக்கென்று நகைத்துச் சிரக்கம்பம் பண்ணி, "ஓ! ஓ! இது முழுதுங் கெட்ட காரியம். அழகும் வல்லமையுமுள்ள மயில் முதலாகிய அநேகம் பறவைகளிருக்கையில் இந்தப் பகற் குருடாகிய குரூபி அரசுக்குத் தக்கவனா? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளலாமா! தோலோ தோல்! இதற்கு நான் உடன்படேன். கருட ராஜ

னிருக்கையில், மிகவும் பயங்கர சுபாவமும் வலியின்மையு முள்ள இக் கூகையை அரசனுக்கி உங்கட்குப் பலனென்ன! ஒருவன் சுவாமியாயிருக்க வேருெருவன் குணசாலியாய் அகப்பட்டாலும் அவன் உபயோகி யாகான். பராக்கிரமமுங் குணமுமுள்ள அரசன் உலகத்தில் ஒருவனே போதும். பல பெயர் அரசர்களானுல் பிரஜைகள் துன்ப மடைகிருர்கள். கருடன் பெயரினுலேயே எல்லா வரங்களும் பெறும் நம்மி டத்தில் மனிதர்கள் மதிப்பு வைத்திருக்கிருர்கள். வலியவர் களுடைய பெயரினுலே எளியவர்களுக்குக் காரியமாகின்றது. முன் ஒரு முயல் சந்திர விம்பத்தைக் காட்டிச் சுகமடைந் ததை அறியீர்களா?'' என அதைக் கேட்ட பறவைகள், "முயல் எப்படிச் சுகமடைந்தது? அண்ணு! சொல்ல வேண் டும்'' என, காகஞ் சொல்லும்:—

## கதை 2.

" ஒரு காட்டில் சதுரதந்தனென்னும் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண் டிருக்கும்போது அங்கே மழை பெய்யாமையால், ஆறு, ஏரி, குளம், குட்டை, கசங்களெல் லாம் வற்றிப்போக, அப்போது யானைகளெல்லாந் தாகித்துச் சதுரதந்தனைப் பார்த்து, 'சுவாமி! நாங்களெல்லாந் தாகத்தி னுலே செத்தாற் போலானேம்; சிலர் தண்ணீர்க்காகச் செத் தார்கள். ஆகையால், மிகவுந் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானுல் எல்லாருஞ் சுகமடைவோம்' என, இவற்றின் பேச்சைக் கேட்டுத் தன் மனதில் யோசித்து, 'இதற்கு ஐந்து நாளைப் பயண தூரத்தில் ஒரு பெரிய மடு பாதாளகங்கையினுல் நிறைந்திருக்கிறது, அங்கே போனுல் எல்லோர்க்கும் மிகவும் தண்ணீர் கிடைக்கும்' என்றிப்படி

அது உறுதி சொல்ல, அப்படியே எல்லாம் அங்கே போய்த் தெளிந்த நீரைக் கண்டு, அந்திவரைக்குஞ் சலக்கிரீடை செய்து கொண்டிருந்து பின் கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம் பண்ணிக்கொண்டிருந்த பல முயல்களிற் சில யானைகளின் காலின்கீழ் அகப்பட்டிறந்தன; சிற்சில முயல் களுக்குக் கால் கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின. சிற்சிலவற்றிற்குக் குடல்கள் சரிந்தன; சிலச் சில இரத்தத்தால் நிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே சில முயல்கள் ஒன்றாய்க்கூடி, 'இன்றைக்கு யானைக்கூட்டம் வந்து நம்மை அழித்தது. இப்படியே தினமு மிருக்கும். ஏனெனில், இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை. இதனால் நமக்கு மீளாச் சங்கடம் நேரிட்டது. யானை தொட் டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச் சனன் மரியாதை பண்ணினாலும் உயிர்ச்சேதம் வரும். ஆத லால், இதற்கு ஏதாவது உபாயம் யோசிக்கவேண்டும்' என, அப்போது சில முயல்கள், 'உயிரைக் காப்பாற்றும் பொருட் டுப் பூமியை விட்டுவிடலாமென் றிருக்கிறதினால் இவ்விடத் தை விட்டுவிட வேண்டும்' என, இதைக்கேட்டு வேறு சில முயல்கள் 'நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தை விட்டு வேறிடத்திற்குப் போகாமல் யானைகள் அஞ்சத்தக்க தந்திரமெடுக்க வேண்டும். நஞ்சில்லாப் பாம்பும் படமெடுத் தால், அதற்கு நஞ்சில்லா திருந்தும் பயங்கரமாயிருக்கிற படத்தின் வடிவைப் பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்கள்' என, அதைக் கேட்டு ஒரு முயல், 'யானைகள் பயப்படும்படி ஓர் உபாயஞ் சொல்லுகிறேன்; என்னென்றால், விசயதந்த னென்னும் நம்முடைய சுவாமி சந்திர மண்டலத்தி லிருக் கிறான்; அவன் தூதனுப்பினான் என்று ஒரு நிமித்தம் வைத்து

ஒரு பொய்த் தூதனை அவர்களிடத்துக் கனுப்பினுல் நம் காரியம் ஆகும்' என, இதைக் கேட்டவுடனே எல்லாம் அப் படியே நிச்சயித்து, நெட்டைக் காதனைப் பார்த்து, 'நீ சாது ரியவான், எதிரிகளைச் சமாதானம் பண்ணுகிறவன்; ஆத லால், தூதகாரியத்தில் நிபுணனு யிருக்கிருய்; மௌட்டிய மில்லாமையும், சோம்பாமையும், பொய்யாமையும், ஊகித் தறிதலும் தூதலக்ஷண மென்று சொன்னவற்றிற்கு நீயே வாசஸ்தானமென்று நினைக்கிருேம். ஆகையால், நீ போனுல் நம்முடைய காரியங் கைகூடும்; மூடத் தூதனை அனுப்பினுற் காரியம் கெட்டுப்போம்' என்று சொல்லி அதை அனுப்ப, அது போய் யானைகள் வரும் வழியில் ஓர் உயர்ந்த மேட் டில் உட்கார்ந்திருந்து, யூதபதி வந்தவுடனே அதைப் பார்த்து, 'அடா துஷ்ட யானையே! வெட்கத்தை விட்டு இந்த மடுவில் வந்து பலவகைப்பட்ட விளையாட்டு விளையாடுகிருய், ஆதலால் நான் எல்லாரையும் அடித் தெரிந்து விடுவேன்' என, இதைக் கேட்டு யானை 'உன் பேச்சைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன், ஆனுல் நீ யார்?' என, முயல் 'விசயதந்த ராஜனுடைய தூதன்' அவன் கட்டளையை உனக்குச் சொன்னேன், அவன் சந்திர மண்டலத்தில் இருக்கிறபடியால் சந்திரன் உன்னிடத்திற்கு என்னை அனுப்பினுன்' என, இதைக் கேட்டு இவன் வலியவ னுடைய தூதனென் றெண்ணி, அதைப் பார்த்து, சந்திரனு டைய கட்டளை என்ன?' என, அது 'நீ இங்கே வந்து நாண மில்லாமற் கிரீடைசெய்து பல முயல்களைக் கொன்ருய், ஆகி லும் நான் ஒரு தரம் பொறுத்தேன், இப்போது உனக்கு உயிர்மேல் ஆசையிருந்தால் மீண்டும் இங்கே வரவேண்டாம், என்றிப்படிச் சந்திரனுடைய கட்டளையாகி யிருக்கிறது.

அதை உனக்கு நான் சொன்னேன். இப்போது இதற்குப் பிரதியுத்தரஞ் சொன்னாற் சுவாமி திருவடிகட்கு அறிவிப் பேன்' என, யானை 'அவனிடத்திற்கு என்னை அழைத்துக் கொண்டுபோ, நான் உன் எசமானனுக்கு நமஸ்காரம் பண்ணி வேறொரு குளத்திற்குப் போவேன்' என, இதைக் கேட்டு முயல், 'நீ தனியாய் என்னோடு கூட வா, உனக்குச் சுவாமி யைக் காண்பிக்கின்றேன்' என, பிறகு இரண்டும் போகையில், ஓர் ஏரியினருகே போனதும் முயல், யானையைப் பார்த்து, 'சந் திரன் இந்தத் தண்ணீருக்குள்ளே வந்திருக்கிறான், அவனை நமஸ்கரித்துவிட்டுக் கடுகெனப் போ. இல்லாவிட்டால் அவ னுடைய சமாதிக்குப் பங்கம் வரும், அப்பொழுது அவற்கு வெகு கோபம் வரும்' என, அப்போது யானை பயந்து சந்திர விம்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போயிற்று. அது முதற் கொண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன. ஆகை யால், பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல் வந்த வினை சூரியன்முன் பனிபோல் நீங்கும். கொல்லையிற் குற்றியை யடைந்த புல், உழவர் உழுபடைக்குக் கெடுமோ? துஷ்டர்க ளுடைய கூட்டுறவு கணப்போ திருந்தாலுங் கெடுதி வரும். முன் ஒரு முயலும் ஆந்தையுஞ் சண்டை யிட்டுக் கூர்ம்பல்ல னருகே போனவுடனே இரண்டையும் அது கொன்றது அறி யீரோ?'' எனக் கேட்டுப் பறவைகள் காகத்தைப் பார்த்து, "அஃது எப்படி?'' என, காகஞ் சொல்லும்:—

## கதை 3.

"முற்காலத்தில் நான் குடியிருந்த ஒரு முதுமரப் பொந் திலிருந்த கபிஞ்சல னென்னும் குருவியும், நானும் மாலைக் காலத்திற் பல பல பேச்சுகள் பேசிக்கொண்டு சுகித்திருக்கை

யில், ஒரு நாள் அவன் வேறொரு பக்ஷியோடு கூடப்போய் மீண்டு வராமையால், நான், ஐயோ அவன் வலையிற் பட்டானோ, யாராவது கொன்றார்களோ தெரியவில்லை, எப்போதும் வேறோரிடத்தில் தங்குகிறவ னல்லவே என்றிப்படி விசனப் பட்டு வழி பார்த்துக்கொண் டிருந்தேன். மூன்றாம் நாள் அவன் பொந்தில் ஒரு முயல் வந்து நான் பல பல விதமாய்த் தடுத்துச் சொல்லியும் கேளாமல் முரட்டுத் தனமாய்க் குடி புகுந்தது. கபிஞ்சலன் எங்கேயோ சிலநாள் மனதின்படியே நெற்களைத் தின்று கொண்டிருந்து பிறகு தன்னிடத்துக்கு வந்து பார்க்கையில், தன் வீட்டில் முயல் இருக்கக்கண்டு, அதைப் பார்த்து, 'அடா சசமே, உனக்கு என் வீட்டிலிருக்கை நன்றன்று, பொட்டெனப் புறப்பட்டுப் போ' என, இதைக் கேட்டு முயல், 'அடா பேதாய்! இது உன் வீடன்று, என் வீடே; வீணாகப் பொய் சொல்லிப் பயனில்லாமல் நட்பை ஏன் இழக்கிறாய்? வாவி, கிணறு, குளம், கோயில், சத்திர மிவற்றின் சொத்துவம் அவற்றை விட்டு நீங்கின பிறகு அந் நீங்கினவனிடத்தி லிராது; மற்றும் ஒருவன் வீட்டைப் பிறனொருவன் பத்தாண்டளவும் யாவரும் அறிய அநுபவித்தால் அவ்வீடு அவனதே; இந்த விஷயத்தில் சாக்ஷியும் எழுத்தும் பிரமாணமாகா; இந் நியாயம் மனிதர்களிடத்தி லிருக்கிறது. ஆனால், பறவைகளில் எது வலிதோ அது கைக்கொள்ளும் என்று இப்படித் தர்ம நியாய மிருக்கிறதனால் வீடு எனதே' என, கபிஞ்சலன், 'நீ தர்ம சாஸ்திரத்தைக் குறித்துப் பேசுகின்றமையால் நீயும் நானுஞ் சாஸ்திரிகளிடத்திற் போய் இதைக் குறித்துக் கேட்டு, அவர்கள் யாரை இருக்கலா மென்கிறார்களோ அவர்கள் இருக்க உடன்படுவோம்' என்று சொல்லி நிச்சயித்து, இருவரும் விவாதம் பண்ணிக்

TB P31(10) N32



கொண்டு போகையில், இவ் வழக்கு எப்படி யாகிறதோ பார்க்கலாமென்று நானும் அவர்களைத் தொடர்ந்து போனேன். அங்கே கூர்ம்பல்லனென்னும் பூனை இவர்கள் பேச்சைக் கேட்டு, இவர்கள் வழக்குத் தீர்ப்புக்குப் போகிறார்கள். இவர்களை மோசம் பண்ணவேண்டு மென்று நிச்சயித்து, அந்த வழியில் ஆற்றங்கரையில் கண்ணை மூடிக்கொண்டு, சூரியனைப் பார்க்கிறதுபோல் அபிநயித்துக்கொண்டு, 'ஆ! ஆ! இந்த அசாரமான சமுசாரத்தி லுண்டாகிற இன்பங் கணத்தில் அழிந்து கனாப்போற் பொய்யாகின்றதனால் தருமத்தைவிட வேறே கதியில்லை. அறத்தை விட்டு எவன் நாள்களைக் கழிக்கிறானோ அவன் மரப்பாவையை யொத்தவன். அவனை மூச்சு விட்டுக்கொண் டிருக்கையிற்றானே பிணமென்று எண்ண வேண்டும். ஏனென்றால், எப்படித் தயிரிற் சாரம் நெய்யோ, எள்ளிற் சாரம் எண்ணெயோ அப்படிப் பிழைத்திருக்கின்றதிற் சாரம் தருமமாம். இதைத் துறந்து மிகவுஞ் சோற்றைத் தின்றுகொண்டே காலங் கழிக்கிறவர்கள் நிலச்சுமையா யிருக்கிறார்களென்று துக்கப்படுகிறேன். ஓ ஜனங்களே! தருமம் பல பல இடையூறுகளோடு கூடிக்கொண்டிருக்கிற தாகையாற் சுருக்கமாய்ச் சிறிது தருமஞ் சொல்லுகிறேன். என்னெனில், பிறருக்கு உதவி செய்வதை பொத்த புண்ணியமும், பிறரை வருத்துவதை யொத்த பாவமுமில்லை. மேலும், தனக்குத் துன்பந் தருவது பிறனுக்குத் தரும், என்றிப்படித் தர்ம ரகசியங்களைக் கேட் டுள்ளத்தில் வைக்கவேண்டும்' என, இப்படி அதன் வாக்கியத்தைக் கேட்டு முயல், 'கபிஞ்சலா! தருமஞ் சொல்லுகிறவன் ஆற்றங்கரையில் உட்கார்ந்திருக்கிறான். அவனைக் கேட்போம்' என, கபிஞ்சலன், இவன் நமக் கியல்பான பகையாளியாதலால் தூரத்திலிருந்தே சொல்லவேண்டு

183933

மென்று நிருணயித்து அவனைப் பார்த்து, 'ஓ தபோநிதியே! நீ அறமுணர்ந்தவனுகையால், எங்களிருவருடைய வழக்கைக் கேட்டுத் தரும நூற்படி நியாயஞ் சொல்லிப் பொய் சொல்லு கிறவனைக் கொல்லவேண்டும்' என, இவ் வார்த்தையைக் கேட்டுப் பூனை காதின்மேற் கையை வைத்து, 'இப்படிப்பட்ட பேச்சை மறுபடி சொல்லாதேயுங்கள். ஏனெனில் நரகத்திற் குக் காரணமாகிய இதைவிட்டு நான் அறத்தை அநுசரித் துக்கொண் டிருக்கிறேன். மேலும், கொலை செய்கிற புலி முதலானவற்றைக் கொல்லுகிறவர்களும் நரகத்திற்குப் போகி ருர்களென்று சாதுக்கள் சொல்லுகிருர்கள்; ஆகையால் மற்றவர்கள் கொலையினுல் நரகம் வருமென்பதில் ஆச் சரியமென்ன? யாக கருமத்திற் பசுவைக் கொல்லுகிற வர்கள் வேதத்திலுள்ள பொருளை யறியாதவர்கள்; அந்த விஷயத்தில் ஏழு வருடத்தின் நெல்லைக் கொண்டு வந்து ஓமம் பண்ணவேண்டுமென்று சொல்லி யிருக்கிறது; பசுக்களைக் கொன்றும் மரங்களை வெட்டியும் ஓமம் பண்ணிச் சுவர்க்கங் கிடைக்கிறதானுல் நரகத்துக்குப் போவது வேறு எச்செயல் புரிந்து? ஆதலால் இவையெல்லாம் வஞ்சகர்க ளுடைய காரியமென் றறிந்திருக்கின்றமையால் உங்களைச் சுத்தமாய்த் தின்னேன்; உங்களுக்கு வழக்கு மாத்திரந் தீர்ப் பேன். ஆனுல் நான் கிழவனுனபடியினுல் எனக்குத் தூரத் துச் சொற் கேளாது; நீங்கள் கிட்ட வந்து ஒருவர்க்கொரு வர்க் கிருக்கிற வழக்கென்னவோ அதைச் சொன்னுல் கேட்டு இம்மைக்கும் மறுமைக்கும் நலந்தருவதாகிய நடுவுநிலைமை யாய்ச் சொல்லுவேன்; ஆசையாலாயினுங் கோபத்தாலாயி னும் அநியாயத் தீர்ப்புச் சொல்லுகிறவன் நரகத்திற் போவா னுதலால், நீங்கள் என் காதினருகே வந்து உங்கள் வழக்கைத்

தெரிவியுங்கள்' என, அவை இப் பசப்பு வார்த்தையினால் அதனிடத்தில் நம்பிக்கை வைத்துக் கிட்ட வர, அவற்றைக் கைகளினால் ஒருமிக்கச் சேர்த்துப் பிடித்து வழக்கற இரண்டையுந் தின்றது. ஆதலால், "தீயோரைச் சேர்ந்தால் இப்படிப்பட்ட தீங்கு நேரிடுமென் றறிந்து செய்யத்தக்கது எதுவோ அதைச் செய்யவேண்டும்" என, அப்படிக் காகஞ் சொன்னதைப் பறவைகளெல்லாங் கேட்டு, இவன் சொன்னது நன்றென் றெண்ணி, இப்பொழுது சேகரித்த பொருள்களை யெல்லாம் இப்படியே வைத்து மற்றொருவனை அரசனாக்குவதைக் குறித்து மீண்டு மெல்லாருங் கூடுவோமென் றுறுதி செய்துகொண்டு எல்லாந் தத்தமிடத்திற்குப் போயின. அப்போது சிங்காதனத்தினருகே மனையாளோடுகூட உட்கார்ந்திருந்த கோட்டான் தன் பெட்டையைப் பார்த்து, "பெண்ணே! மங்கள ஸ்நாநமாகியும் இன்னும் ஏன் ராஜ்யாபிஷேகம் பண்ணாமலிருக்கிறார்கள்?" என, பேடு, "உன் ராஜ்யாபிஷேகத்துக்குக் காகம் இடையூறு செய்தபடியாற் பறவைகளெல்லாம் தத்தம் வீட்டுக்குப் போயின; காகம் மாத்திரம் இருக்கிறது" என, இதன் வார்த்தையைக் கேட்டுக் கோட்டான் காகத்தை நோக்கி, "அடா துஷ்டா! நான் உனக்கு என்ன செய்தேனென்று என் காரியத்தைக் கெடுத்தாய்? இதனால் இன்று முதல் உன் குலத்துக்கும், என் குலத்துக்குந் தீராப் பகை யிருக்கட்டும். ஏனெனில், வாளினால் வெட்டினாலும், பாணத்தினால் எய்தாலும் அக் காயம் ஆறிக் குணப்படும்; சொல்லின் காயம் அப்படி ஆறாது" என்று சொல்லி விட்டுத் தன் பெட்டையோடு கூடத் தன்னிடத்திற்குப் போயிற்று. பின்னர் அக் காகம் மனதில் திகிற்பட்டு, நுணலுந் தன் வாயாற் கெடுமென்பதுபோல், இந்தப் பேச்சைச் சொல்லி

நான் வீண்பகை சம்பாதித்தேன்; சமர்த்தனு யிருக்கிறவன் சபையிற் பிறரை நிந்திக்க லாகாது; மேலும், யாதொன்று செய்ய வேண்டுமோ அதை மனங் கலந்த நட்டோரை யுசாவிச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்யாமல் இப்போது சங்கடத்தில் அகப்பட்டேன் என்று இப்படிப் பச்சாத்தாபப் பட்டு அதுவுந் தன் வீட்டிற்குப் போயிற்று. அது முதற் கொண்டு கோட்டானுக்கும், நமக்கும் பகை தலைமுறை தலைமுறையாக விடாமல் தொடர்ந்து வருகிறது' என, இப்படிக் கிழமந்திரியின் மொழியைக் கேட்டு மேகவர்ண ராஜன் மறுபடியும் அதைப்பார்த்து, "ஐயா! இப்போதென்ன செய்யலாம்? என, அது பார்ப்பானிடத்தி லிருந்து ஆட்டைச் சில வஞ்சகர்கள் எப்படி வஞ்சித்துக்கொண்டு போனார்களோ அப்படியே நான் கோட்டான்களிடத்திற்குப் போய் அவர்களை வஞ்சனை பண்ணிக் கொல்லுகிறேன்" என, அதைக் கேட்டு ராஜன், 'அவர்கள் ஆட்டை எப்படிக் கொண்டு போனார்கள்? சொல்லும்' என, மந்திரி சொல்லும் :—

## கதை 4.

'ஒரு தேசத்தில் மித்திரசர்மா வென்னும் பிராமணன் மாசி மாதத்தில் யாகஞ் செய்ய வேண்டிப் பசு சம்பாதிப்பதற்காக வேறோரூர்க்குப் போய் ஒருவனைப் பசுக் கேட்க, அவன் இவன் நற்காரியத்தைக் குறித்துக் கேட்கின்றா னென்று அதற்கு உடன்பட்டு நேர்த்தியான ஒரு பெரிய ஆட்டைக் கொடுக்க வாங்கிக்கொண்டு வருகையில், அவ்வாடு இங்கு மங்கு மோடத் தொடங்கினதனால் அதைத் தோளின்மேற் போட்டுக்கொண்டு நடந்தான். அதைச் சில வஞ்சனைக்காரர்கள் தூரத்தி லிருந்து பார்த்து இப் பார்ப்பானை வஞ்சித்து

அந்தப் பசுவை வாங்கிக் கொண்டோமானால் நாமெல்லோ ரும் பசி தீர்த்துக் கொள்ளலாமென் றுலோசித்தபின், அவர்க ளில் ஒரு தூர்த்தன் வந்து, "ஓய்! நித்தியாக்கினி வளர்க் கின்ற பிராமணா! நீ சீலனாயிருந்து இப் பழிப்பான காரியத்தை ஏன் பண்ணுகிறாய் ? மிகவும் ஈனமுள்ள நாயைத் தோள்மேல் எப்படிக் கொண்டுவருகிறாய் ? நாய், கோழி , சண்டாளன், கழுதை ஆகிய இவைகளைத் தொடலாகாதென்று சாஸ்திர மிருக்கிறதே" என்று சொல்லிக் கேட்டுப் பிராமணன் கோபித் துக்கொண்டு, "நீ யாகப் பசுவை நாயென்று எப்படிச் சொல் லுகிறாய்? நீ கண் கெட்டையா என்ன?" என, தூர்த்தன், "பிராமணா! கோபித்துக் கொள்ளாதே, சுகமாய்ப்போ" என, பிறகு பிராமணன் கொஞ்ச தூரம் நடந்து போனான். மறு படி இரண்டாந் தூர்த்தன் வந்து, "ஓ அந்தணா! இக் கன்றின் மேல் உனக்கு என்ன பக்ஷமிருந்தாலும் செத்த பிறகு அதைத் தோள்மே லெடுத்துக்கொண்டு போதல் சரியன்று. ஏனெனில், செத்த மிருகங்களைத் தொட்டால் சாந்திராயணத்தையும் பஞ்சகவ்வியத்தையு மல்லாமல் அந்தத் தீட்டுப் போகாது. இப்படிப்பட்ட நிஷித்தத்தைத் தோள்மேல் ஏன் சுமந்து போகவேண்டும்?' என, அப்போது அப் பிராமணன் அப் படியே சொல்லிவிட்டுப் போகத் தொடங்கினான். உடனே மூன்றாங் கபடி எதிரிட்டு, "ஓ ஐயனே! கழுதையைத் தீண்டு கிறவனுக்குச் சசேல ஸ்நானஞ் சொல்லியிருக்க நீ அதை எப் படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?" என, அந்தணன் இந்த ஆட்டைக் குறித்து, மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கிறபடி யால் இஃது ஏதோ ஓர் இராக்ஷசனாயிருக்குமென் றெண்ணி, அதைப் பூமியில் விட்டுத் தன் வீட்டுக்குப் போனான். பின்பு அவ் வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால்,

நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன். ஆனால் நான் என்ன உபாயஞ் சொல்லுகிறேனோ அப்படியே செய். நீ சத்துரு பக்ஷத்திலிருக்கிறாயென் றென்னை நிந்தித்து வேறொன்றின் இரத்தத்தை என்மேலெல்லாம் பூசி, ஆலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின் மேற்போயிருந்தால், கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கிறானென் றெண்ணிக்கொள் வார்கள். பிறகு நான் அவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்க முதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன். அதுவரைக்கும் நீ அங்கேயே இரு. இவ்வாலோசனையே நான் முன்னமே செய்து இப்போது உனக்குச் சொன்னேன்' என்றியம்ப, அதன் உள்ளுறையைக் கேட்டு மேகவர்ணன், 'அத்தியந்தப் பிரியமான பிராணனை நீ துரும்பு போல் நினைத்தாய்' என, பிரதானி, 'ராஜா காரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும். இடர் வருங் காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்றே அரசர்கள் தான மானத்தினால் அவர்களைப் பரிபாலிக்கிறார்கள். அப்படி உதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பலனென்னை?' என்று இப்படிச் சொல்லிப் பொய்க் கலகத்துக் காரம்பித்தது. இந்த ரகசியம் இரண்டாம் பேர்க்குத் தெரியாததனால் மற்றைப் பறவைகள் அதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன், 'நீங்கள் இவனைத் தண்டிக்க வேண்டாம், இவன் பகையாளிக்கு நன்மை பண்ணுகிற துஷ்டனாகையால் இவனை நானே சிக்ஷித்துக் கோபம் ஆறுவேன்' என்று சொல்லி எழும்பி எழும்பி மூக்கு முனையால் அதைப் பொய்யாகக் குத்திச் சங்கேதப்படி ஆலமரத்தின் கீழெறிந்து, கூட்டத்தோடுகூட வேறிடத்திற்குச் சென்றது.

பிறகு பொழுதுபோனவுடனே ராஜகோட்டான் அவ்விடத்திற்கு வந்து மரத்தைச்சுற்றி முற்றுகை போட்டுக்கொண்டு காகங்களைப் பார்க்கும்போது யாதொன்றும் அங்கே இல்லாமையால் தன் கூட்டத்தைப் பார்த்து, 'காகங்கள் எவ்வழியாற் போயின? அவ்வழி உங்களுக்குத் தெரிந்திருந்தால் இப்போதே அவர்களைக் கொல்லுவோம். ஏனென்றால், பகைவர்கள் துர்க்க முதலியவற்றைச் சேர்வதற்கு முன்னேயானால் அவர்களை வெல்லலாம், பின்பு வெல்லக்கூடாது' என்று இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில், சிரஞ்சீவி மெல்லெனக் கத்தினான். அதைக் கேட்ட மாத்திரத்தில் அநேக கோட்டான்கள் போய் அதைக் கொல்லத் தொடங்கும்போது, சிரஞ்சீவி, 'நான் மேகவர்ணன் மந்திரி, என் பெயர் சிரஞ்சீவி, அக் கொடியவன் எனக்கு இப்படிப் பட்ட அவஸ்தை வரப்பண்ணினான். ஆகையால், நான் உங்கள் அரசனைச் சரணமாக அடைகிறேன்' என, இதைக் கேட்டுச் சேவகர்கள் அரிமர்த்தனனுக்குச் சொல்ல, அவன் ஆச்சரியமாய் அதனருகே போய், 'ஓ சிரஞ்சீவி! உனக்கு இந்த ஸ்திதி என் நேரிட்டது?' என, சிரஞ்சீவி கைகூப்பிக்கொண்டு, 'முன்னாள் நீர் காகங்களை அடித்தீரென்று கோபமாய் அந்தக் கொடிய மேகவர்ணன் உம்முடனே போர் செய்ய ஆயத்தப்பட, அப்போது நான், "ராஜனே! இஃது உனக்குத் தக்கதன்று, வலியவனுடனே எளியவன் போர் செய்தால் விளக்கையவிக்க விட்டில்போய் விழுகிறதுபோல் கெடுதி யுண்டாகும்; ஆதலால், அவருடனே சமாதானம் பேசி அவர்கள் கேட்பதைக் கொடுத்துப் புத்திமானானவன் உயிரைக் காப்பாற்ற வேண்டும்; பணம் எப்போதும் ஈட்டிக் கொள்ளலாம்; உயிரிழந்தாற் பெறக்கூடாது" என்றிப்படிச் சொல்ல, "என்னை நீ

பகைவர் பக்கமாய்ப் பேசுகிருு’’யென்று வைது, இந்த உபத்திரவம் பண்ணினுன். இப்போது எனக்கு உம்முடைய திருவடிகளே துணை, எனக்கு இந்தக் காயங் குணப்பட்டாற் காகங்கள் முழுதையுங் கொன்று உமக்குக் கீழ்ப்பட் டிருப்பேன்’’ என்றிப்படி அது சொல்லக்கேட்டு உலூகராஜன், குருதிக்கண்ணன், கொடுங்கண்ணன், கொள்ளிக்கண்ணன், குரூரநாசன், பிரகாரநாசன் என்னுந் தன்னுடைய ஐந்து மந்திரிகளையும் பார்த்து, ‘சத்துரு மந்திரியாகிய இவன் நமக்குக் கைவசமானுன், இவனை என்ன செய்யலாம்?’’ என, அப்போது,

குருதிக்கண்ணன்: ‘இவன் அவனுக்கு முதல் மந்திரி, கால விசேஷத்தால் அவனுக்கு இவன் பிரதிகூலமாகத் தோற்றப் பட்டான்; அவன் ஒருநாளும் இவன் வார்த்தைக்கு வேருக நடக்கிறவனல்லன். ஆதலால், இவனைத் தங்களிடத்தில் வைத்துக்கொண்டு இவன் கையாலே சத்துருவோடு சந்தி செய்யவேண்டும், இதுவே தக்கது. ஏனெனில், சாம முதலாகவுள்ள நான்குபாயங்களில் தண்டம் கடைப்பட்டது; ஆகையாலே அந்தப் பிரயோகம் கடைசியிற் பண்ணவேண்டும். சாமத்தினுற் செய்யுங் காரியம் எப்போதுங் கெடுவதில்லை; ஆகையால் அவர்களிடத்தில் தண்டத்தை ஆலோசிக்கலாகாது. சருக்கரையைத் தின்று பித்தம் போமானுற் கைப்பான மருந்தை ஏன் தின்னவேண்டும்? ஆதலாற் சாமோபாயமே என் சம்மதம், இதுவே நல்லது’ என, இதைக் கேட்ட அரிமர்த்தனன் இரண்டாம் அமைச்சனைப் பார்த்து, ‘உன் உள்ளுறை என்ன? அதைச் சொல்’ என,

கொடுங்கண்ணன்: ‘வேந்தனே! இக் காகங்கள் நமக்கியல்பான வைரிகள். ஆகையால், இவர்கள் சமாதானம் தக்கதன்று; தண்டமே தகுந்தது. வெல்லக் கூடாத பகைவர்களிருந்

தால் அவர்கட்கு விரோதமாகிய தாயாதிகளை வருவிக்கவேண்டும்; இல்லாவிட்டாற் பணங் கொடுத்தாவது, பொய்ப்பத்திரம் பிறப்பித்தாவது அவர்களுள் ஒருவர்க்கொருவர் பகை யெழுப்ப வேண்டும்; நடுவிற் புரைச லுண்டானால் நன்முத்தும் பந்தனைப்படுகிறது. ஆதலால் இதைக் குறித்து என் சொல்லைக் கேட்டுச் சுவ பக்ஷத்தை ரக்ஷித்துக்கொண்டு பர பக்ஷத்தைப் போதிக்க வேண்டும். இக் காகம் வைரியாயினுங் கொல்வது நன்றன்று. ஏனெனில், பகைவனும் ஒரு வேளை நன்மை சொல்லுகிறான். ஒரு திருடன் ஒருவனைப் பிழைப்பித்ததும், ஒரு ராக்ஷசன் இரண்டு பசுக்களைப் பிழைப்பித்ததும் அறியீரோ?' என, அரசன் அதைக் கேட்டு,'அஃது எப்படி?' என, கொடுங்கண்ணன் சொல்லும் :—

## கதை 5.

'ஒரு நகரத்திலிருந்த ஏழைப் பார்ப்பான் தனக்கு ஒருவன் கொடுத்த பசுவின் கன்றிரண்டையும், புல் முதலானவைகள் போட்டு மிகவும் பருத்துக் கொழுக்க வளர்த்தான். அக் கடாரிகளைப் பார்த்து அவற்றைக் கொண்டு போக ஒரு திருடன் தும்பெடுத்துக்கொண்டு புறப்பட்டு வரும் வழியில், கோரப் பல்லும், நீண்ட மூக்குஞ் செம்பட்ட மயிருஞ் சிவந்த கண்ணுங் கறுத்த உடம்புமாக விருந்த ஒரு ராக்ஷசனைக் கண்டு பயந்து, அவனைப் பார்த்து, "நீ யார்?" என, அவன், "நான் சத்தியவசன னென்னும் ராக்ஷசன், நீ யார்? சொல்" என, இவன் "நான் திருடன், ஒரு வறிய பிராமணன் வைத்துக்கொண்டிருக்கிற இரண்டு பசுக்களைத் திருடப் போகிறேன்' என, ராக்ஷசன், 'மித்திரா! அவ் வந்தணன் பரிசுத்தனானகையால் நானும் அவனைத் தின்பேன், பின்பு இருவர் காரியமு

மாகும்! என, இப்படிப் பேசிக்கொண்டு இருவரு மங்கே போகும்போது, அந்தணன் தூங்கிக்கொண் டிருந்தமையால் அவனைத் தின்ன இராக்ஷசன் போக, அவனைப் பார்த்துச் சோரன், "மித்திரா! நான் பசு விரண்டையுங் களவுசெய்த பிறகு நீ அவனைத்தின்" என, ராக்ஷசன், "சிநேகிதனே! பசுக் கூச்சலாற் பார்ப்பான் விழித்துக்கொண்டால் நம்முடைய காரியமெல்லாங் கெட்டுப்போம்; ஆதலால் நான் முன்னே அவனைப் புசிக்கிறேன். பின்னர் நீ அச்சமில்லாமற் கோக்களைக் கொண்டு போ" என, கள்வன், "நீ அவனைத் தின்னத் தொடங்கும் அரவத்தால் வேறொருவன் வந்தால் அவன் என்னைக் கொண்டுபோக வொட்டான்; ஆதலால், பசுக்க ளிரண்டையும் நான் கொண்டுபோன பின்பு நீ அவனைத் தின்" என்றிப்படி இருவர்க்கும் வாதம் நடக்கையில் அவ் வேதியன் விழித்துக்கொண்டான். அப்போது, கள்ளன், "ஓ பிராமணா! இவ் வரக்கன் உன்னைத் தின்பே னென்கிறான்" என, அதைக் கேட்டு இராக்கதன், "இக் கள்வன் உன் மாடுகளைக் களவாட வந்தான்" என, இப்படி இருவர் பேச்சையுங் கேட்டுப் பார்ப்பான் மெலுக்குவைப்பட்டு இஷ்ட தேவதையைத் தியானித்து இராக்ஷசனினின்றுந் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு கையிற் றடியெடுத்து வந்து கள்வனை அடித்துத் துரத்தினான். ஆதலால், மாற்றானும் ஒருகால் இதஞ் சொல்லுகிறா னென்றேன்' என, இப்படி அவனுள்ளத்தை யறிந்து அரிமர்த்தனன் கொள்ளிக்கண்ணனைப் பார்த்து, 'உன் கருத்தைச் சொல்வாய்' என,

கொள்ளிக்கண்ணன்: 'மகாராஜனே! சாமமும், பேதமும் எனக் குடன்பாடல்ல. ஏனென்றால் சமாதானத்தாற் பகைவனுக்குச் செருக்கு உண்டாகும். மற்று, உமது

பேதத்தை அவனறிந்தால் ஒருவேளை மோசமுஞ் செய்வான். ஆதலால், விவேகி கொடைபாற் பகைவனை வசம்பண்ணி அதை மேன்மேலும் பெருகச் செய்தால், பின்பு அவன் தானாகவே கைவசமாவான். மேலும், இவன் அவர்களோடு விருத்தமாய் நம்மிடத்தில் வந்தமையால் விரோதிகளிடத்தி லிருக்கிற குறைவுகளை அறிவித்து நமக்குச் சந்தோஷம் வருவிப்பான்; அதுபற்றி இவனைப் பாதுகாக்கவேண்டும் இங்ஙனஞ் செய்தால் ஒருவர்க்கொருவர் இன்சொற்களாற் காலப்போக்குஞ் சம்பவிக்கும். மேலும், நம்முடைய மர்மங்களையும் வெளிவிடான். இங்ஙனமன்றி ஒருவர்க்கொருவர் இரகசியங்களை வெளிவிட்டால் அவர்கள், வயிற்றிலிருந்த பாம்பும் புற்றிலிருந்த பாம்பும் நாசமடைந்தாற்போல், கெடுவார்கள்' என, உலூகராஜன் 'அஃது எப்படி?' என, கொள்ளிக் கண்ணன் சொல்லும்:—

## கதை 6.

'விஷ்ணுவர்மனென்னும் ஒரு மன்னனுக்கு வயிற்றில் ஒரு நோயுண்டாகி நாளுக்குநாள் உடம்பு மெலிந்து போனதனால் அவன் தேசாந்தரங்கட்குப் போய் ஒரு கோயிலி லிருக்கையில், அவ்வூரிலிருந்து அரசு செய்துகொண்டிருந்த பலியென்பவனுடைய குமாரிகளிருவரும் பலியினிடத்திற்கு வந்தபோது அவர்களிலொருத்தி அரசனை நோக்கி, "ராஜனே! வெற்றியடைவாய்" என்றாள். மற்றொருத்தி "நல்ல போஜனம் புசிப்பாய்" என, இதைக் கேட்டவுடனே அரசன் கண்கள் சிவக்க அமைச்சர்களைப் பார்த்து, "இந்தக் கெட்ட பேச்சுக்காரியை நோயாளிக்குக் கொடுத்தால் இவள் நல்ல போஜனங்களை அனுபவிப்பாள்" என, அமைச்சர்கள்

ராஜன் கட்டளையிட்டபடியே கோயிலிலிருந்த ராஜகுமார ணுகிய பிணியாளிக்கு அவளைக் கொடுத்தார்கள். பின்பு அவள் கணவனை ஈசுவரனைப்போ லெண்ணிப் பணிவிடை கள் செய்து அவனை யிட்டுக்கொண்டு மற்றொரு தேசத் துக்குப் போம்போது வழியில் ஓரிடத்திலிறங்கி, வேலைக் காரனைக்கூட அழைத்துக்கொண்டு சமையலுக்கான கடைச் சரக்குகள் வாங்கப் போனபோது வியாதியஸ்தனுகிய ராஜ குமாரன் நித்திரை போனுன். அவ்வேளையில் அங்கொரு புற்றிலிருந்த பாம்பு இராஜனருகில் வந்து பேச அவ்வொலி யைக் கேட்டு அவன் வயிற்றிலிருந்த பாம்புஞ் சப்தித்தது. அப்பொழுது இரண்டுக்கும் வாக்குவாத முண்டாக, இதற் குள்ளே அவன் பெண்டாட்டி வந்து மரத்தின் மறைவில் நின்று அவற்றின் பேச்சுக்களைக் கேட்டுக்கொண் டிருந்தாள். புற்றுப் பாம்பு வயிற்றுப் பாம்பைப் பார்த்து, "அடா துராத் மாவே! இந்த அழகுள்ள ராஜபுத்திரனை ஏன் வருத்து கிருய்?" என, வயிற்றரவு, "ஆகாரம் நிறைந்த குடத்திலிருக் கிற என்னை நீ ஏன் நிந்திக்கிருய்?" என, புற்றரவு, "துஷ்டா! கடுகு தின்ருனுல் நீ யிறப்பாய், அவன் சுகமடைவான்; ஆனுல் இது ஒருவர்க்குந் தெரியாது" என, பின்பு அவ்வயிற் றரவு, "வெந்நீரால் உனக்கும் லயம் வரும்" என, இப்படி அவ்விரண்டு இரகசியங்களைக் கேட்டு அவள் அவ்வண்ணமே செய்து அப் பாம்பைக் கொன்ருள். அதனுல் மன்னவன், நோய் தீர்ந்து தன் நகரத்திற்கு மனைவியோடுகூட வரும்போது! அந்நெறியில் அவள் தந்தையுஞ் சுற்றமும் பார்த்து இருவர்க் கும் சத்காரம் பண்ணி அவர்களை வழியனுப்ப பின்பு இரு வருந் தங்கள் தேசத்துக்குப் போய் அரசாண்டுகொண் டிருந் தார்கள். ஆகையால், பரஸ்பரம் இரகசியங்களைக் காப்பாற்ரு

விடின் இப்படி நஷ்டம் நேரிடும்' என, இதைக்கேட்டு இறைவன் குரூரநாசனைப் பார்த்து, 'உன் இஷ்டம் எது?' என,

குரூரராசன்: 'இம் மூவர் சொன்னதும் உத்தமமாகவிருக்கவில்லை. ஏனென்றால், சாம தான பேதமென்னு முபாயங்கள் வலியில்லாதவர்களைக் குறித்திருக்கின்றன. வலியுள்ளவர்கள் சத்துருக்களிடத்தில் தண்டமே செய்யவேண்டும். அதைத் துறந்து சாமமுதலாகிய தந்திரத்தை யோசிக்கின்றவனைப் பகைவர் பயந்தவனென் றெண்ணி அவன்மேல் வருவார்கள். ஆகையால், வேந்தன் தண்டத்தினலேயே பாக்கியஞ் சேகரிக்கவேண்டும். பராக்கிரம மில்லாவிடில் எது தெய்வத்தால் நேரிடுகிறதோ அதை நுகரவேண்டும். மேலும், உலகத்தில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புகிறார்கள்; அப்படி விரும்பினும் மனவூக்கத்தோடு தண்டத்தால் எதிரிகளை அவமானம் பண்ணுகிறவர்களுக்கே லக்ஷ்மி கைவசமாகிறாள். சோம்பர்கள் அருமையான பொருளைக் குறித்து லக்ஷ்மியைப் பிரார்த்திக்கிறார்கள்; ஆனல் பராக்கிரம முள்ளவனே தன் சௌரியத்தினல் லக்ஷ்மியைப் பலவிதமாக அநுபவிக்கிறான். ஆதலால், பலவான் பகைவனைக் கொல்லவேண்டும்' என, இதைக் கேட்டு அரசன் பிரகாரநாசனை நோக்கி, 'உன் மனதில் என்ன விருக்கிறது?' என,

பிரகாரநாசன்: 'மகாராஜாவே, இவன் தங்களை அடைக்கலமாக அடைந்தபடியினல் இவனைத் தலைவனாக்கி, முற்காலத்தில் இராமச்சந்திரன் விபீஷணனைத் தலைவனாக்கி இராவணாதிகளை எப்படி யழித்தானே அப்படியே சத்துருக்களைத் தாங்கள் அழிக்க வேண்டும். மேலும், சரணமடைந்தவனைக் கொல்பவன் ரௌரவ நரகத்தை யடைவானென்று சிபிச் சக்கரவர்த்தி தன் மாமிஸத்தை வேட

னுக்குக் கொடுத்துப் புறவை விடுவித்தானென்று பாரதத்திற் சொல்லி யிருக்கிறது. அப்படியே தன் பகைவன் வந்து நடுக்குறும்போது அவனுக்கு ஆதித்தியஞ் செய்வதைக் குறித்து ஒருவன் நெருப்பிற் குதித்தான்' என, இதைக் கேட்டு அரிமர்த்தனன், 'அஃது எப்படி? சொல்' என, பிரகாரநாசன் சொல்லும்:—

## கதை 7.

ஒரு வனத்தில் ஒரு வேடன் கையிற் குருவிக்கூடுங் கண்ணியுந் தடி முதலான வேட்டைக் கருவிகளுமெடுத்துக் கொண்டு திரியாநிற்கையில், அசதியிற் பெருமழை வந்து இருட்டிக்கொண்டு பிரளயகாலம் போலக் காற்றும் எழும்ப, அப்போது அவ் வனசரன் நடுக்கலெடுத்து மரத்தின் சார்பில் நின்று, "பகவானே, இந்த வேளையில் உன்னைவிட வேறொருவருங் காப்பாற்றுவாரில்லை" என, அவ் வேளையில் அம் மரத்தின்மேலிருக்கும் புறு தன் பெட்டை வரவில்லை யென்று விசனமாய், "இன்றைக்கு என் நாயகி வரவில்லை. அவளை யாராயினும் பிடித்தார்களோ என்னவோ! அவளில்லாமல் இங்கெங்கும் பாழாகத் தோற்றுகிறது. மனையாளில்லாத வீடு சுடுகாட்டைப்போ லிருக்கிறது. கற்புங் கணவனின்புறும் வகைச்செயலுமுள்ள இல்லாளை யுடையான் எவனோ அவனே பாக்கியவான்!' என் றிப்படிப் புலப்புகிறதைக் கேட்டு, அவ் வேடன் கைக்கூட்டிலகப்பட்டிருந்த பெண் புறு துக்கித்து, "முன் பிறப்பில் தீவினை செய்தவர்களுக்குப் பலவகைப்பட்ட தளையுஞ் சிறையும் நோயும் வறுமையுஞ் சம்பவிக்கின்றன. அஃதிருக்கட்டும், எச் சமயத்தில் எது நேரிடுமோ அஃதெப்போதும் பிசகுகிறதில்லை," என்று சொல்லிப் பிறகு தன்

பதியைக் குறித்து, "ஓ ஓ என் பிராண நாதா! நமது வீட்டுக்கு வந்த இவ் வேடனுக்குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி யுதவி செய்ய வேண்டும். வந்த விருந்தை யோம்பாவிட்டால் அவன் தன் பாதகத்தை இல்வாழ்வானுக்குக் கொடுத்து இல் வாழ்பவன் புண்ணியத்தைக் கொண்டு போகிறுன். ஆதலால் இவன் நம்முடைய பெண்டிரைப் பிடித்தா னென்னுந் துக்கத்தை மனதில் வையாமல் இவனை இயன்ற மாத்திரம் பூசிக்க வேண்டும்" என, இப்படிப் பெண் புருவின் வாக்கியத்தைக் கேட்டு ஆண்புரு, "வேடா! உன் வரவு நல்வர வாகுக. நீ மனதிற் சிறிதும் ஐயமில்லாமல் இதை உன் வீடாக நினைத்து வேண்டுவதைக் கேள்" என, வில்லி, "கபோதமே! என் குளிரைப போக்கடி" என, கபோதம் காட்டிலிருந்து ஒரு கொள்ளி யெடுத்துக்கொண்டு வந்து சருகுகளின்மேல் வைத்து மூட்டி, வேடனைப் பார்த்து, "நெருப்பு மூண்டெரிகிறது, இதில் நீ குளிர்காய், முன்செய்த தீவினையால் நான் பறவையா யிருக்கின்றமையால் என்னண்டை உன் பசிக்கேற்ற பதார்த்தமில்லை; ஆனல் இப்போது அநேக துன்பங்கட் கிடமாயும் பரோபகார மாகாமலு மிருக்கிற இச் சரீரத்தை வைத்துக்கொண் டிருந்து பல னென்ன? இதனல் நீ உன் ஆத்மாவைச் சந்துஷ்டி செய்" என் றிப்படிச் சொல்லிக்கொண்டே பிறருதவியின் பொருட்டு, எரிகிற அழலில் ஆனந்தத்தோடு விழ, அப்போது வேடன், "ஆ ஆ! என் பொருட்டு இஃது உடலைத் துறந்தது. மேலும், நான் தீ யொழுக்க முள்ளவன், வேறொன்றின் தசையினுற் சீவனம் பண்ணுகிறவன், பரோபகாரமும், சிறிதாயினுந் தயையும் கனவிலு மறியேன்; ஆதலால், ஊனோத்தின் றானைப் பெருக்கின பாவி, கோர நரகத்திற்குப் போவேன். இதை எனக்குத் திருஷ்டாந்தமாய் இந்தப் புரு

காண்பித்ததனால் இது முதலாகப் பசி தாகங் குளிர் வெயில் பொறுத்த லிவற்றால் உடம்பை யுலர்த்தி நான் பாவ மில்லாத வனாகக் கடவேன்'' என்று சொல்லி பச்சாத்தாபத்துடனே தன் கூடு, தடி, கண்ணி முதலான ஆயுதங்களை முறித்தெறிந்து விட்டு, அந்தப் பெண் புறாவை விட்டுவிட, அஃது உயிரிலுஞ் சிறந்த தன் நாயகன் தருமத்தின் பொருட்டு உடலைக் கொடுத்தானென் றெண்ணித் தானும் அந்த நெருப்பிற் குதித்து இறந்தவுடனே ஒரு திவ்விய ஸ்திரீயாய் அக் கணவனோடுகூடச் சொர்க்கத்துக்குப் போயிற்று. வேடனும் இரக்கத்தினாற் பரிசுத்தனாய் நெருப்பிற் றேகத்தைப் போட்டுவிட்டு நற்கதியை யடைந்தான். ஆதலால், அபயமென் றடைந்தவர்களைக் காக்க வேண்டும்' என,

அரிமர்த்தனன்: இதைக் கேட்டு, 'எனக்கும் இப்படியே அபிப்பிராய மிருக்கின்றது. இவன் சத்தியவானும் புத்திமானுமா யிருக்கின்றான்; கபடி யல்லன். இவற்றை யறியாமல் மேகவர்ணன் இவனை மான பங்கஞ் செய்தான். இவனைக் கொன்றால் நான் விசுவாச காதகனாவேன். பிரமஹத்தி, கள்ளுண்டல், களவாடல் இவற்றிற்குப் பிராயச்சித்தமுண்டு, விசுவாச காதகத்துக்கு அஃது இல்லையன்றோ? ஆகையால் இவனுக்குச் சம்மான ம்பண்ணி இவனை நமது துர்க்கத்திற்கு இட்டுக்கொண்டு போகவேண்டும்' என்று உறுதி செய்து, சிரஞ்சீவியைப் பார்த்து, 'நீ என் கோட்டையில் வந்து சுகமாயிரு; நான் உன்னைப் பாதுகாப்பேன்' என, இதைக் கேட்டுச் சிரஞ்சீவி களிப்புற்று, 'மகாராஜாவே! நான் விஸ்தரித்துச் சொல்லுவதென்ன? என் குடிப்பிறப்பு பிரபுவுக்குச் சகவாசத்தால் வரவரத் தெரியும்' என, அப்போது குரூரநாசன், 'இப்போது கோட்டான் குலமெல்லாம் ராஜன் குற்றத்தால் பாழா

கும். பிறர் குற்றங்களை அரசனுக்கு அறிவிக்க வேண்டும், அரசன் இதத்தைக் கேளாவிடில் அதற்கென்ன உபாயமிருக்கின்றது?' என்றிங்ஙனஞ் சொல்ல, அரசன் அதைக் கேளாமல் சிரஞ்சீவியைத் தன் அரணிற் கொண்டுபோய் வைக்க, பின்னர்ச் சிரஞ்சீவி நம்மைக் கொல்லவேண்டுமென்றவன் எல்லாரிலுங் கெட்டிக்காரன், மேலும் எசமானனுக்கு நன்மையே செய்பவன், மற்றவர்கள் எசமானனைப்போல மூடர்களாகையால் அவனொருவன் இல்லாவிடில் இவர்களை வெல்வது அருமையன்று என்றிப்படி மனதுக்குள் குதூகலத்துடனே ஆலோசித்துக்கொண்டிருக்கையில், அரிமர்த்தனன் காரியக்காரர்களைப் பார்த்து, 'இச் சிரஞ்சீவிக்குத் துர்க்கமெல்லாங் காட்டுங்கள்' என, சிரஞ்சீவி அப்படியே ராஜ கட்டளையின்படி எல்லாம் பார்த்து, நாம் இதற்குள் இருந்தால் நமதெண்ணம் முடியாது, பின்னும் நம்முடைய வஞ்சனைகளையும் தெரிந்துகொள்வார்கள், ஆதலால் கோட்டைத் தலைவாசலிலிருந்து மனோபீஷ்டத்தை முடிக்கவேண்டும் என்று தனக்குள்ளே தீர்மானித்து, பிறகு அரசனை நோக்கி, 'மகாராஜனே! நான் வாயசமாதலால் உள்ளே யிருக்கத் தக்கவனல்லன். உமது கடைவாசலிற் காத்திருந்து கபடமில்லாமற் சேவித்துக் காலந் தள்ளுவேன். அன்புள்ளவனும் மனதழுக்கில்லாதவனுமாகிய சேவகன் எங்கிருந்தாலுஞ் சிந்தையில்லை' என்றிவ்வண்ணஞ் சொல்லி அங்கேயே யிருந்தது.

அப்போது குரூரநாசன், 'ராஜா அமைச்சர் முதலிய நீவிரெல்லீரும் மூர்க்கர்களா யிருக்கிறீர்களென்றெண்ணுகிறேன்; முற்காலத்தில் நடந்த ஒரு கதையு மிருக்கிறது; முதலாவது மூடன் நான், இரண்டாவது மூடன் வேடன், மூன்றாவது மூடன் அரசன், நான்காவது மூடன் அமைச்சன்

என்று சொல்லிவிட்டு ஒரு பறவை பறந்து போயிற்று' என, அப்போது அவர்கள், 'அஃது எப்படி?' என, குருநாசன் சொல்லும்:—

## கதை 8.

'பொன்னாக எச்சமிடுகிற பறவை யொன்று மலையின் மேல் நெடுநாளா யிருக்கையில், அங்கே ஒரு நாள் போன வேடன் அது பொன்னாக மலவிசர்ச்சனம் பண்ணப் பார்த்து மிகவும் ஆச்சரியமாய், நான் பாலிய முதலாகத் திரிந்து வருகிற பல காடுகளிற் பார்த்த பல சாதிப் பறவைகளினும் இப்படி யொன்றைப் பார்த்ததில்லை, ஆதலால் இதை உயிருடனே பிடித்துக்கொண்டு போவோமென் றெண்ணி மரத்தில் வலை கட்ட, அப்போது அப் பறவை வழக்கப்படி வந்து சடிதியில் வலையிற் சிக்கிற்று. வேடன் அதைக் கூட்டிலடைத்துத் தன் குடிசைக்குக் கொண்டு வந்து, இப் பறவை நம்மிடத்திருப்பதை அரசனறிந்தால் இதைக் கொண்டுபோவதுமன்றி நம் முயிரையும் வாங்குவான், ஆதலால் இக் குண நிதியை அரசனுக்குக் கொடுப்போமென்று நிச்சயித்து, பறவையைத் தந்து அரசனுடனே நடந்த செய்தியை விண்ணப்பம் பண்ண, அப்போது அவன் அதை இரத்தின மிழைத்த ஒரு கூட்டில் வைக்க, அதைப் பார்த்து மந்திரி, "அசம்பாவிதமான இவ் வேடன் பேச்சைக் கேட்டு இதை ஏன் வாங்கினீர்? விட்டு விடும்" என இதைக் கேட்டு அப் பறவையை மன்னவன் விட்டவுடனே அது ராஜன் மனைச்சிகரத்தி லுட்கார்ந்து கொண்டு, முன்னே நான் மூடன், இரண்டாவது வலைகாரன், மூன்றாவது ராஜன், நான்காவது மந்திரி என்றிப்படிச் சொல்லிப் பறந்து போய்விட்டது' என்று இச் சங்கதியைச் சொல்லிப் பின் இஷ்ட மித்திரர்களைப் பார்த்து, 'இன்றை வரைக்

கும் இந்த ராஜாவின் சார்பிலிருந்தேன், இனி வேறொரு மலையைச் சார்ந்திருக்க வேண்டும். நரியானது குகையைப் பார்த்துக் கூப்பிட்டுச் சுகமடைந்தாற் போல, வருவதற்குமுன் ஆலோசிக்கிறவன் இன்பமடைவான்' என அப்போது அவைகள், 'அஃது எப்படி?' என, குரூரநாசன் சொல்லும்:—

கதை 9.

'ஒரு வனத்தில் வசித்திருந்த கரநகரனென்னுஞ் சிங்கம், ஒரு நாள் இரைக்காக நெடுநேரந் திரிந்தும் யாதொன்றுங் கிடைக்காமையினல், போது போனவுடனே ஒரு பெருங் குகையைப் பார்த்து இதிலடைகிறதற்கு யாதேனுமொரு பிராணி வரும், அதைத் தின்று பசியாறலாமென்று தனக்குள்ளே தீர்மானித்து அதில் ஒளித்துக்கொண் டிருக்கையில், அக் குகையில் வசிக்கிற அவிபுச்சனென்னும் நரி வந்து அங்கே சிங்கத்தின் காற் சுவடுகளைக் கண்டு சந்தேகித்து, சிங்கம் இதில் இருக்கிறதையு மில்லாததையுஞ் சோதித்துப் பின்பு உள்ளே புகவேண்டுமென் றெண்ணித் தூரத்தில் நின்று கொண்டு, "ஓ குகையே! குகையே! என்று இரண்டுதரங் கூவி யழைத்து, குகாய்! நீ என்னோடு பேசாமலிருக்கிறாயே என்ன? உனக்குமெனக்கும் பிரதி தினமுஞ் சம்பாஷணை நடந்துகொண்டிருந்ததே, இன்றைக்கேன் நீ பேசவில்லை? விரைவாகச் சொல், இல்லாவிட்டால் நான் மற்றோரிடத்திற்குப் போய் விடுவேன்" என்று சொல்லி மீண்டுங் கூப்பிட்டது. அப்போது சிங்கம் இக் குகை நாடோறும் பேசிக்கொண்டிருக்கும், இன்றைக்கு நமது பயத்தினல் அதனோடுபேசவில்லை, ஆனல் இதற்குப் பதிலாக நாம் உத்தரங் கொடுப்போமென் றாலோசித்து, பிரதித்தொனியினல் அருகேயிருந்த பிராணிகளெல்லாந் திடுக்கிடும்படி அந் நரியைக் கூவ, நரி, "அப்பா, நான் பிழைத்தே

னென்று வேறோரிடத்திற்கு ஓடிப்போய்விட்டது. ஆதலால் யாதொன்றையும் முன்னே யாலோசித்துச் செய்யவேண்டும்' என்று தன் மித்திரர்கட்குச் சொல்லி, அவர்களோடு குரூரநாச மந்திரி தேசாந்தரம் போயிற்று.

பின்னர்க் காக மந்திரி, இப்போழ்து கோட்டான் கூட்டத்தைக் கொல்வதற்கு வருத்தமில்லை; ஏனென்றால், விவேகமில்லாத மந்திரியையுடைய அரசன் சீக்கிரத்திற் கெடுவான்; விவேகமுள்ள மந்திரி வஞ்சனையான மித்திரர்களைப் பகைவரென் றறிந்துகொள்வான்; இப்படி யறிகிறவன் இவனிடத்தில் இப்போது ஒருவனுமில்லை; ஆதலால் நங் குலத்தின் மங்களத்தைக் குறித்து யாதாயினும் பிரயத்தனஞ் செய்ய வேண்டும் என்று மனதில் நிச்சயித்து, அன்று முதல் தினந்தினம் ஒவ்வொரு விறகு கொண்டு வந்து வழியண்டை போட்டுக் கொண்டே வர, அது போராகக் குவிந்தது. சூரியன் உதித்தவுடனே கோட்டான்களெல்லாங் குருடுகொண் டிருக்கையில் விறகுகளையுஞ் சுள்ளிகளையுங் குகையின் வழியில் கும்பலாகச் சேர்த்துவிட்டுத் தான் மெள்ள மேகவர்ணனிடத்திற்கு வந்தது. அப்போழ்து மேகவர்ணராஜன், 'என்ன செய்தி?' என, சிரஞ்சீவி, 'நான் பகைவர் குல வேரைப் பிடுங்கத்தக்க வுபாயஞ் செய்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் எரிகொள்ளி விழுக்காடு கொண்டுவந்து என் சாகையின்மேற் போட்டால் கோட்டான்களெல்லாம் இறக்கும்,' என, இதைக் கேட்டுக் காக ராஜன், 'என்ன வுபாயஞ் செய்தாய்? சொல்' என, மந்திரி, 'மகாராஜாவே! இது சொல்லத் தக்க சமயமன்று. ஏனென்றால் நான் சொல்லுகிற செய்தியைப் பகைவரறிந்து வேறோரிடத்திற்கு ஓடிப்போனால் நம்முடைய இத்தனை முயற்சியும் வீணாய்ப்போம்; மேலும், கடிதிற்

செய்யத்தக்க காரியத்தில் தாமதம் செய்யலாகாது' எனக் கேட்டுக் காகராஜன் தன் பரிவாரத்தோடு கூட எரிகொள்ளி களைக் கொண்டு வந்து உலூகங்க ளிருக்குங் குகை வழியிற் போட, அந்தப் புகையினால் அவை பயந்து கலக்கமுற்று இரைச்சலிட்டுக்கொண்டு வெளியே வர எத்தனிக்கையில் வழி இல்லாமையால், அப்போது குரூரநாசன் சொன்னதை நினைத் துக்கொண்டு, அவன் வார்த்தையைக் கேளாமைக்கும் பலன் இதுதான் இதுதான் என்று அழுகுரலோடு சொல்லிக்கொண் டிருக்கையில், நெருப்புச் சுவாலை யதிகரிக்க அவை எரிந் திறந்தன.

பின்பு மேகவர்ண ராஜன் முன் விட்ட தன் மரத்திற் குடிபோய்ச் சுகமாக ராஜ்யத்தை அனுபவித்துக்கொண்டிருக் கையில் சிரஞ்சீவியைப் பார்த்து, 'நீ பகையாளி வீட்டிலிருந்து எவ்வாறு காரியத்தை முடித்தாய்?' என, சிரஞ்சீவி, 'குரூர நாசன் தவிர மற்றவர்களெல்லாரும் மூடராகையால், அவர்கள் அவன் புத்தியைக் கேளாமல் அவனை அவமானம் பண்ணி என் னைத் தங்கள் தூர்க்கத்திற்கு இட்டுக்கொண்டு போனார்கள்; அதனால் அவன் தன் சிநேக பந்துக்களோடுகூட மறுதேயத்திற் குப் போனான். மற்றைக் கோட்டான்கள் மூடராகையால் எரிந் திறந்தார்கள். இவ்வாறே முன் ஒருகாலத்தில் சத்துரு நாசத் தின் பொருட்டு ஒரு கிருஷ்ண சர்ப்பம் தவளைகளைத் தோ ளிற் சுமந்து கெடுத்தது' என, அதைக் கேட்டுக் காகராஜன் நகைத்து, "பாம்பு தவளைகளைத் தோளிற் சுமந்து கொன்ற விதமென்ன? சொல்லும் ஐயா' என, சிரஞ்சீவி சொல்லும்:—

## கதை 10.

'ஒரு தேயத்தில் மந்தவிஷனென்னும் பாம்பு இரை கிடை யாமல் மிகவும் பசித்து ஓர் ஏரி கரையண்டை வரும்போது

அதிலே தவளைகள் நிரம்பியிருப்பதைக் கண்டு, இங்கே யாதாயினுமொரு கபடம் பண்ணினாலல்லாமல் நமக்கு இரை யகப்படாதென நிச்சயித்துக் கண்ணை விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க, அப்போது ஒரு தவளை, "பாம்பே! நீ இரை தேடும் முயற்சியை விட்டுச் சும்மா ஏன் உட்கார்ந்திருக்கிறாய்?" என, அதைக் கேட்டுச் சர்ப்பம், "அபாக்கியனாகிய எனக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கும்? ஏனெனில், இன்றைக்குப் பிரதோஷ காலத்தில் இரைக்காகத் திரிந்துகொண்டிருக்கை யில் ஒரு தவளையைப் பார்த்து அதைப் பிடிக்க, அஃது அங் கிருந்த மிகவுஞ் சற்பாத்திரனாகிய ஒரு பிராமணனண்டை யோடிப்போயிற்று. அது தெரியாமல் நான் இங்குமங்கும் பார்த்துக்கொண் டிருக்கையில் அங்கே நீராடிக்கொண்டிருந்த ஒரு பிராமணப் பிள்ளையின் காலை இதுதான் தவளை யென்று நினைத்துக் கடித்தேன். அவன் அக்கணமே இறந்தான். அப் பிள்ளையின் பிதா மிகவுந் துக்கத்தால் என்னைப் பார்த்து, 'துஷ்டப் பாம்பே, யாதொரு குற்றமுஞ் செய்யாத என் பிள் ளையைக் கடித்தபடியினால் நீ மண்டுகங்களுக்கு வாகனமாகக் கடவாய், மற்றும் அவைகளுடைய சேர்க்கையாற் சீவனமும் பண்ணக் கடவாய்' என்று இப்படிச் சபித்ததனால் நான் உங் கட்கு ஊழியஞ் செய்ய வந்தேன்" என, இங்ஙனம் அப் பாம்பின் பேச்சைக் கேட்டு அஃது எல்லாத் தவளைக்குஞ் சொல்ல, தவளைகளெல்லாம் தங்களரசனுடனேகூட வெளியே வந்து மிகவுங் களிப்புடனே மந்த விஷ சர்ப்பத்தின்மே லுட் கார்ந்தன. அஃது அவற்றிற்குப் பலவித கதிகளைக் காண்பிக் கும்போது, தவளைகள் யானை குதிரை தேர்களிலும் இவ்வாக னம் நன்றாயிருக்கிறதென்று மெச்சிச் சந்தோஷிக்க, அந்தப் பாம்பு இரண்டு மூன்று நாள் வரைக்கும் அப்படியே நடந்து,

பிறகு மந்தகதியாய்ப் போகத் தொடங்கிற்று. அப்போது அவைகள், "இன்றைக்கு ஏன் மெல்லென நடக்கிறாய்?" என, புசங்கம், "நான் இப்போது பசித்திருக்கிறதனால் நடக்கக்கூட வில்லை" என, மண்டூகராஜன், "நீ சிறு தவளையாகப் பார்த்துத் தின்றுகொண்டிரு" என, இதைக் கேட்டுச் சர்ப்பம், "எனக்கு இவ்வண்ணமே அந்தணன் சாபமிருக்கிறது, அப்படியே தாமுங் கட்டளையிட்டீர்" என்று சொல்லி நாடோறும் தவளைகளைத் தின்றுகொண் டிருக்கும்போது, அங்கே வேறோரரவு வந்து இதன் நடத்தையைப் பார்த்து, "நம்முடைய பக்ஷணங்களை நீ ஏன் சுமக்கிறாய்? இது மிகவும் விருத்தம், உனக்கு இது யோக்கியமன்று" என, அதற்கு மந்தவிஷன், "நான் இதெல்லா மறிவேன்; ஆனால் சிலநாள் என் கருத்து நிறைவேறுங் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றிவ்வாறு சொல்லிப் புன் சிரிப்புடனே பழையபடி நடந்துகொண்டிருந்தது. இப்படி எல்லா மண்டூகங்களையுந் தின்று, கடைசியில் அவற்றின் அரசனையும் பக்ஷித்தது. அதனால் எந்தச் சமயத்தில் எது செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து சத்துருக்களை வேரோடுகூட நாசம் பண்ணவேண்டும். நெருப்புத் தன் பராக்கிரமத்தினால் காடு முழுதையுந் தகிக்கிறது, ஆனால் மரவேர்கள் பூமியிலிருக்கின்றன; மிருதுத் தன்மையினால் தண்ணீருங் காற்றுஞ் செடி மரங்களை வேரோடு பிடுங்குகின்றன' என, இங்ஙனம் அதன் வாக்கியங்களைக் கேட்டு மேகவர்ணன், 'கடையானவர் இடையூறு வருமென்று பயத்தினால் காரியங்களைத் தொடங்குகிறதில்லை; இடையானவர் காரியங்களைத் துவக்கி விக்கினம் வந்தால் விட்டு விடுகிறார்கள்; ஆயிரம் இடையூறுகள் வந்தாலும் எடுத்த கருமத்தை முடிக்கிறவர்கள் தலையாயராவர். ஆதலால் நீ

வெகுவித கஷ்டப்பட்டுப் புத்தியினலே அநேக பகைவர்களைக் கொன்ருய். இது யோக்கியமாகவே யிருக்கிறது. சத்துரு, அக்கினி, ருணம் இவற்றிற் சேஷம் வைத்தால் மீண்டும் வளரு மென் றறிந்து, நீ வைரியைக் களைந்தாய். ஆயுதத்தால் ஒருவன் சாகிருன். புத்தியினல் அநேகர் ஒருமிக்கச் சாகிருர்கள்' என, ராஜன் மொழியைக் கேட்டுச் சிரஞ்சீவி 'எல்லாம் உன் பிர தாபத்தா லாயிற்று. உன்னைப்போ லிருக்கிற சத்துக்களுக்குத் தெய்வமும் விதியும் நல்ல புத்தியைக் கொடுக்கும்; அசத்துக் களுக்குத் துர்ப்புத்தியைக் கொடாநிற்கும்; இதுவல்லாமல் தடியெடுத்துக் கொண்டடிக்கிறதில்லை. கர்மத்தை யநுசரித்துக் கொண்டிருக்கிற புத்தியினுற் பயன்களை அடைகிருர்கள்' என் றிப்படிச் சொல்லக்கேட்டு, மேகவர்ணன் அம் மரத்தின்மேற் சுகமாய் அரசு செய்துகொண்டிருந்தது.

இங்ஙனம் சோமசன்மா ராஜகுமாரர்கட்குக் காக கூகை யின் கதையாகச் சந்திவிக்கிரக மென மூன்ருந் தந்திரஞ் சொன்னுன்.

---

## 2. அச்சு வித்தையின் வரலாறு.

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கல்வியைப் பரப்புவதற்குரிய சாதனங்களில் அச்சுப் புத்தகங்கள் மிகச் சிறந்தன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவருகின்றன. அவை விரித்துணர்த்தும் பொருள்களும் பலவேறு வகைப்பட்டன. அவை விரைந்து பரந்து சென்று தம் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதும், நாடு, நகரம், கிராமம், குக்கிராமம் முதலிய எல்லாப் பிரதேசங்களிலுமாம். சிறந்த நூல்கள், தாம் தோன்றியவுடன் மொழி பெயர்க்கப்பெற்று, பல அந்நிய தேசங்களிலுஞ் சென்றுலவுகின்றன. இக்காலத்தில் ஒரே நூலின் பிரதிகள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் வெளிவருதலினாலே காலமென்னும் காலன் வாயினையும் தப்பி நின்று மக்களுக்கு நிலைத்த பயனுதவத்தக்க வலிமையினை அடைகின்றன.

இங்ஙனம் கால தேசாதி நியதியைக் கூடியவரை வெற்றி கொண்டு பொதுக் கல்வியை நாடெங்கும் ஆட்சிபுரியச் செய்வது மாத்திரமேயன்றி, அறிவென்னும் தெய்வச் சுடரொளியை மேன்மேலும் பிரகாசங்கொள்ளும்படி செய்து உலகெங்கும் அதன் தேஜோமயமாக்குதற்கும் அச்சுப் புத்தகங்களே சிறந்த கருவியாய் உள்ளன. நமது மூதாதையர் கனவிலும் நினைத்திராத பிருகிருதி சாஸ்திரப் பொருண்மைகளையெல்லாம் மிக எளிதிற் சாதாரண மக்களும் அப்போதைக்கப்போது அறிந்து கொள்ளுதற்குப் புத்தகங்கள் பயன்படுகின்றன. நூதன நூதனமாய் நிருமிக்கப்படும் அற்புத யந்திர விசேடங்களையெல்லாம் அனைவரும் உடனுடன் அறிந்து பயன்படுத்திக் கொள்ளும் சௌகரியங்கள் புத்தகங்களால் வாய்த்திருக்கின்

றன. ஏகதேசத்தில் ஒருவரிருவருக்கு உரிமையாயிருக்கும் அறிவுச் செல்வத்தை அனைவரும் பகிர்ந்தனுபவிக்கும்படி புத்தகங்கள் செய்கின்றன.

இதன்மேலும் கல்வியறிவால் உண்டாம் நிலைத்த வின்பத்தை நாம் நுகரும்படி செய்வதும் புத்தகங்களேயாம். எவ்வகை நிலையிலுள்ளார்க்கும் அறிவினால் விளையும் இன்பம் போற்றத் தகுவதாகவே யுள்ளது. இந்திரிய நுகர்ச்சி எத்துணை யின்றியமையாததோ அத்துணையாக அறிவு நுகர்ச்சியும் மக்கட்கு இன்றியமையாததே. கல்வி யறிவில்லாது கேவலம் மிருகப் பிராயமாயிருப்போரும் இனிய கதைகளை வாசித்துக் கேட்டவளவில் அதன் சுவையிலே லயித்து நின்று பரவசமெய்தி யின்புற்றிருப்பர். அவர்களுக்குச் சிறிதளவேனும் கல்வியறிவிருப்பின், அறிவு நுகர்ச்சியை எத்துணை யளவாகப் போற்றுவரென்பது கூறவும் வேண்டுமோ?

ஆகவே அச்சுப் புத்தகங்கள் நமது வாழ்க்கை யின்பத்திற்குக் காரணமாய், உயிரோடு உயிராயும், அறிவோடு அறிவா' யும், உணர்வோடு உணர்வாயும் ஒன்றிக் கலந்துவிட்டன. அவைகளின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது என்று நினைக்கவும் இயலவில்லை.

இவ்வண்ணம் மக்கள் வாழுமுலகை விண்ணுலகு என்றெண்ணும்படியாக்கி அவர்களை அறிவின்பப் பெருவாரியிலே திளைக்கும்படி செய்கின்ற புத்தகங்கள் அச்சிலியன்று வெளிவரு முறையைக் கண்டுபிடித்த பேருபகாரி இன்னாரென நாம் தெரிந்துகொள்ளுதல் அவசியம். வேத காலத்தேயே உருவங்கள் பொறித்துள்ள நாணயங்கள் இருந்தனவென்று அறிகிறோம். (D. R. Bhandarkar's Lectures on

Ancient Indian Numismatics 68—69.) எனவே இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில் நாகரீகம் என்ற மணங்கூட வீசியறியாத பண்டைக் காலத்திலேயே கிறிஸ்துவப்தத்திற்கு மிக மிக முன்பு தொட்டே நமது பாரத தேசத்தில் நாணய முதலியவற்றில் உருவங்கள் முதலியன பொறிப்பதற்கு ஏற்ற அச்சுக்கருவிகள் இருந்தன. அக்கருவிகளை மேன்மேலும் நயம் பெற அமைத்துப் புத்தகம் அச்சிடும் முறையை நம் முன்னோர்கள் தெறிந்துகொண்டார்களெனக் கூறமுடியவில்லை. கிறிஸ்துவப்தம் ஆறுவது நூற்றாண்டில் சீனதேசத்தில் ஒரு வகையான அச்சுவேலை நடைபெற்று வந்தது. அத்தேசத்தில் மரப்பலகையிலே ஒவ்வொரு பக்கத்திற்கும் உரிய எழுத்துக்கள் முழுவதும் செதுக்கப் பெற்றிருந்தன. இதனால் ஒவ்வோர் அச்சுப் பலகையும் புத்தகத்தில் ஒரு பக்கத்திற்கு மட்டுமே யுதவும்; பிறிதொன்றற்கு உதவ மாட்டாது. ஆகவே புத்தகங்களைத் தற்காலத்திற் செய்வது போல் அச்சியற்ற முடியவில்லை. இப்போது ஒவ்வோர் எழுத்தும் மிகப் பலவாய்த் தனித்தனியே வார்க்கப்படுகிறது. ஒரு பக்கம் அல்லது 'பாரம்' முழுமையும் அச்சுக் கோத்து அதனை அச்சியற்றிய பின்னர், பழையபடியும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் கோத்துப் பயன் படுத்தலாம். இவ்வாறே மேன்மேலும் செய்துகொள்ளலாம். தனித்தனியாக எழுத்துக்கள் வார்க்கப்படுதலின் பயன் இதுவேயாகும். இதற்குத் தக்கபடி யமைந்த எழுத்துக்கள், 'சலனவச்சு' (Movable Type) என்று கூறப்படும்.

இவ்வகையான 'சலனவச்சு' ஜான் கூடன் போர்க் என்னும் ஜெர்மனியாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கி. பி. 1400-ல் ஜெர்மனி தேசத்திலே ரயின் நதிக்கரையிலுள்ள

மேயென்ஸ்நகரத்தில் பிறந்தவர். அந்நகரத்தில் ஏற்பட்டிருந்த உட்குழப்பத்தினால், இவரும் இவர் கட்சியாரும் நகருக்கு வெளியே பலமுறை துரத்தப்பட்டனர். முடிவில் இவர் குடும்பச் சொத்தை அரசாங்கத்தினர் அபகரித்துக் கொண்டனர். இதன்பின் இவர் தமது நகருக்குத் திரும்பும் கருத்தை அறவே யொழித்துவிட்டு, 'ஸ்ட்ராஸ் பெர்க்' என்ற நகரில் வசித்து வந்தார். அந்நகரத்து மக்களின் அன்பும் நன்மதிப்பும் பெற்று அங்கே வாழ்ந்துவரும் நாளில் அவர்கள் உதவியால் இவருடைய ஆஸ்தி இவருக்குத் திரும்பக் கிடைத்தது. இப்பொருளைப் பல விடங்களுக்குஞ் சென்று அழிவில்லாத கல்விப் பொருளை யீட்டுதற்குப் பயன்படுத்தி வந்தனர்.

ஹாலெண்டு தேசத்தில் ஹார்லெம் நகரில் இவர் இருக்கும்பொழுது ஒரு நாள் இவர் நண்பராகிய லாரென்ஸ் கோஸ்டெர், என்பவர் ஒரு மரப் பலகையிற் செதுக்கப்பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தை இவருக்குக் காண்பித்தார். அன்று முதல் அச்சு வித்தையைக் கண்டுபிடிக்கும் பெருங் காதலொன்று இவர் மனத்தில் வேரூன்றிவிட்டது. ஆண் மக்களுக்கு இயற்கையாயுள்ள பிறிதொரு பெருங்காதலும் இவரது உள்ளத்தை இப்போது கொள்ளை கொண்டது. நகர்ப்புறத்தேயுள்ள ஒரு சிங்கார வனத்திற்குச் சென்று அங்கே தம் காதலியை நினைத்துப் பாடுவதும், அவர் பெயரையும் தம் பெயரையும் மரப்பட்டைகளிற் பலமுறை எழுதிப் பார்த்து மகிழ்வதும் இவரது வழக்கமாயிருந்தன. ஒருமுறை அப்பெயர்களை ஈரமான இளம்பட்டையிற்செதுக்கி, அப்பட்டையைத் தம்மிடத்திருந்ததோற் கடுதாசியிற் சுற்றி வைத்திருந்தார். மறநாள் காதலியிடத்தில் அதனைச் சமர்ப்பிக்கவெண்ணிப் பிரித்துப் பார்த்தபோது, பசும்பட்டையிலுள்ள எழுத்துக்கள் தோற் கடுதாசி

யில் தெளிவாய்ப் படிந்திருத்தலைக் கண்டனர். இவருக்குண்டான மகிழ்ச்சி அளவிடக் கூடாததாயிருந்தது. தமது இயற்கைக் காதல் செயற்கைக் காதற்குரிய அரும்பொருளை யடைதற்கு உதவியதென்று நினைக்கும்போதெல்லாம் தமது ஒருயிரிற் பன்னூறுயிர்கள் புகுந்து இயக்குவதுபோல் ஊக்கங் கொண்டனர். பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மரப்பட்டை ரசத்திற்குப் பதிலாகக் கறுப்பு மையை அப் பலகையின்மீது தடவி அச்சியற்ற முயன்றனர். இரவும் பகலும் இத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து எத்தனையோ முறைகளைப் பரியாலோசனை செய்வதில் பலவருடங்கள் சென்றன. முடிவில் ஒவ்வோரெழுத்தையும் தனித்தனியே சிறு மரத்துண்டிற் செதுக்கி, வேண்டியபடி கோத்து அச்சியற்றுங் கருத்து இவர் மனத்தே திடீரென்று உதித்தது. இக்கருத்து தோன்றியகால முதற்கொண்டு தனித்தனியே யெழுத்துக்களைத் திருத்திய வடிவிற் செதுக்குதற்கு வெகு காலம் முயன்று அதிலே தக்க பயிற்சி பெற்றனர்.

பின்னர் ஹார்லெம் நகரத்தை விட்டு ஸ்விட்ஸெர்லாந்து சென்று மரத்துண்டில் அச்சுக்கள் செய்து வாக்கிய முறைப்படி அவற்றை நூல்களிற் கோத்து வரிவரியாயமைத்து அச்சுக்கள் விழுந்து விடாதபடி ஓரங்களில் முடிப்பிட்டுக் கட்டி ஒருபக்க முழுவதும் அச்சடித்துப் பார்த்தனர். தாம் எதிர்பார்த்தற்கு மேலாகவே இது திருப்திகரமா யிருந்தது. இங்ஙனமே பலகாலும் முயன்று அப்பியசித்து வந்தனர். தாம் மேற்கொண்டுள்ள கருத்து முற்றவேண்டுமாயின் தொழிற்சாலையொன்று அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணினர். தொழிற்சாலை இவரது அறிவாற்றலாலும் இடைவிடாத உழைப்பினாலும் மட்டும் ஸ்தாபிக்கக் கூடியதா? அதற்குப்

பொருள் வேண்டுமென்றே? பொருள் பெறும் பொருட்டுப் பல தனவந்தர்களிடஞ் சென்றனர். அவர்களிடத்தே இவர் பெற்றவை நகைப்பும் இகழ்ச்சியும் இரக்கமுமே யன்றி வேறில்லை. இவருடைய ஆகாயக் கோட்டை யெல்லாம் பொருளின்மையால் தொலைந்துவிடும் போலிருந்தது. ஆனல் அச்சியற்றும் நுண்மதியும் பேருழைப்பு முடையவர். அத்தனை யெளிதில் தோல்வியுறுவரா? சில தொழிலாளிகளோடு கூடி வைர முதலியன செதுக்கி ஆபரணஞ்செய்யும் சாலையொன்று நிறுவிப் பகல் முழுவதும் அவ்வேலையையே செய்து, இரவில் தமது ஆத்மார்த்தமான வேலையைச் செய்து வந்தனர். அச்சியற்றுந் தொழில் முழுமையுந் தாமாகவே செய்து முடிப்பது அசாத்திய மென்று தோன்றியபடியால், தமது தொழிலின் மர்மத்தைச் சிறிது சிறிதாகத் தம் கூட்டாளிகளுக்குக் கூற நேர்ந்தது. இவர் மேற்கொண்டுள்ள தொழிலின் அருமை பெருமைகளை அவர்கள் உடனே நன்குணர்ந்தனர். எனினும் அதனல் ஏற்படும் புகழும் பொருளும் இவரடையாதபடி தமதாகவே செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்து அவர்கள் மனத்தில் எழுந்தது. அச்சுத் தொழிற்குரிய இரகசியங்கள் அனைத்தையும் தாங்கள் கிரகித்துப் பொருளிலாபத்தைத் தாமே அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவருடைய கூட்டுத் தொழிலாளர்கள் இவர்க்குப் பொருள் முதலிய வுதவி செய்யமுடியாதெனக் கூறினர். தமது பெரு நோக்கம் நிறைவேறுந் தறுவாயில் உதவியை இழந்துவிட மனமின்றி அவர்களுடைய உட்கிடைக்கெல்லாம் ஒருவாறு இணங்கித் தம் வேலையில் முயன்று வந்தனர். அச்சு வேலையிற் பொருள் வருவாய் மிகுதியா யுண்டாயிற்று. அவ்வூதிய முழுமையும் கூட்டாளர்கள் தாமே யெடுத்துக்கொண்டது மாத்திரமின்றி,

இவரைக் கேவலம் கூலியாளாகக் கருதி இழிவாய் நடத்தத் தொடங்கினர். பின்னர் அச்சு வித்தை இவருக்குரியதன்றென்றும், அவ் வித்தையைக் கைக்கொண்டு அச்சுத் தொழில் இயற்றும் உரிமை இவருக்குக் கிடையாதென்றும் வழக்குத் தொடுத்தனர். இறைவனருளால் இவ்விடையூறுகளெல்லாம் ஒருவாறு நீங்கின. தாம் முழு மனத்தோடும் காதலித்து வந்த அச்சு வித்தை இவரது உரிமைப் பொருளாகவே முடிந்தது. தமது தாய் நகரான மேயென்ஸுக்குத் திரும்பி வந்தனர். பிறிதொரு காதல் வெற்றியையும் கூடென்பெர்க் இப்பொழுது அடைந்தனர். துன்பமயமாகிய இவர் வாழ்க்கையிலே சிறிது இன்பவொளியும் தோன்றலாயிற்று. நெடுங்காலமாகத் தாம் காதலித்து வந்த மாதரசியை இப்பொழுது மணந்து மகிழ்வுற்றனர். எனினும் தம்பதிகள் தமக்குரிய செல்வமாக அனுபவித்து வந்தது வறுமையேயன்றி வேறல்ல. பொருட் செல்வம் போன்றே மக்கட் செல்வமும் இவர்கட்கு இல்லாததாயிற்று.

மேயென்ஸில் மீண்டும் குழப்பம் உண்டாயிற்று. மீண்டும் கூடென்பெர்க் வெளியேற நேர்ந்தது. ஸ்விட்ஸெர்லாந்துக்கு மறுமுறையுஞ் சென்று அச்சியந்திரசாலை ஸ்தாபித்து விவிலிய நூல் முதலியவற்றை பிரசுரம் செய்தனர். மீண்டும் இவருடைய வேலையாட்கள் இவரை மோசஞ்செய்து அலட்சியமாக நடத்த மீண்டும் தமது தாய்நகருக்குத் திரும்பி வந்தனர். இத் துன்பங்களிலெல்லாம் இவருக்குத் துணையாய் நின்று மனம் சலிப்பின்றி உழைத்துவரும்படி தூண்டிக்கொண்டிருந்தவர் இவரது உத்தமபத்தினியாகிய ஆன்னெட் (Annette) அம்மாள்தான். தம் தாய் நகர்வந்ததும் ஹூஸ்டு,

ஷோபெர் என்பவர்களுடன் சேர்ந்து கிறிஸ்து மத நூல்கள் பலவற்றை அச்சியற்றி வெளியிட்டனர். துரதிருஷ்டம் இவர் காலடி வைக்குமிடமெல்லாம் தொடர்ந்து கொண்டே இருந்தது. அளவற்ற கஷ்ட நஷ்டங்கள் இவர்க்கு ஏற்பட்டன. பிரான்சு மன்னவராகிய லூயி என்பவர் இவரைச் சிறிது காலம் ஆதரித்து வந்தனர். அப்போது புதிய கூட்டாளிகள் சிலர் இவரைத் துணையாகக் கொண்டு இவர் தம் தொழிலில் முயன்று வந்தனர். இக் கூட்டாளிகளும் இவரை வஞ்சிக்க நினைந்து முடிவில் அந்நோக்கம் கைகூடா தொழிந்தார்கள். மீண்டும் தம் நகர குழப்பத்தினால் இவரும் இவருடைய மனைவியாரும் வெளியே துரத்தப்பட்டு அகதிகளாய் யாதொரு புகலிடமுமின்றி அந்நிய நாடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். இக்காலத்தில் நாஸ்ஸோ என்ற நாட்டின் அதிபதியால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்து வந்து தமது அறுபத்தொன்பதாம் வயதில் மண்ணுலகிற் புகழ் நிறுவி விண்ணுல கடைந்தனர்.

இவர் இறந்த சில வருடங்கட்குள்ளே ஐரோப்பாக் கண்டத்திற் பல நகரங்களிலும் அச்சுக்கூடங்கள் ஏற்படுத்தப் பெற்று அச்சுவித்தைப் பரவலாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 1475-ல் காக்ஸ்டன் என்பவர் வெஸ்டு மினிஸ்டரில் முதன் முதலாக அச்சுக்கூடம் ஸ்தாபித்தார்.

---

# 3. கோவலன்

## சிலம்பால் விளைந்த கதை

## I. புகார்ச் செய்தி

### 1. திருமணம்

சீர்பெறு செந்தமிழ் வழங்கும் தமிழகந் தன்னில் முப் பெரும் நாடுகள் சிறப்புற்று விளங்கின. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என்பனவாம். அவற்றுள் நடுநாயக மாய் விளங்கும் சோழ நாடு செழிப்பு மிக்கது; செல்வம் நிறைந் தது. அந்நாட்டில், குடகு மலையில் உற்பத்தியாகிப் பல வளங் களைக் கொணர்ந்து கொழிக்கும், என்றும் வற்றாத நீர்ப்பெருக் கினையுடைய பொன்னி என்னும் காவிரி நதி பொய்யாது அளித்தலால் செல்வம் மிக்க மக்கள் யாவரும் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

சூரிய குலத்தில் தோன்றியவர்களான சோழ வரசர்கள் சோழ நாட்டினை அரசியல் நெறி பிறழாது ஆண்டு வந்தனர். அச்சோழர்களின் ஆட்சிக் காலத்தில், காவிரிப்பூம் பட்டினம், உறையூர், தஞ்சை என்பன தலை நகரங்களாக விளங்கின.

காவிரிப்பூம் பட்டினம்:—காவிரி நதி கடலோடு கலக்கு மிடத்தில் அமைந்ததொரு துறைமுகப் பட்டினம். அங்கு ஜாவா, சுமித்திரா, கீரீஸ் முதலிய தேயத்தவர்களும், பாரசீகர், சீனர் முதலியோரும் வந்து வியாபாரம் செய்தனர். ஆதலின், அந்நகரில் செல்வம் மிகப் படைத்த மக்களே வசித்து வந்த னர்.

காவிரிப்பூம் பட்டினம், புகார், காகந்தி என்னும் மறு பெயர்களையுடையது. அது மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் என்னும் இரு பிரிவினை உடையது. அந்நகரில் எங்கும் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்திருக்கும். அந்தணர், அரசர், வணிகர் வீதிகள் வரிசை வரிசையாக நிறைந்து காணப்படும். முக்கட் பரமன் கோயிலும், கரிய திருமால் கோயிலும், முருகன் கோயிலும், ஜீனாலயமும், பௌத்த சந்நியாசி மடங்களும், புத்த விக்கிரங்களும் எங்கும் நிறைந்திருக்கும். கல்விக் கழகங்களும், ஆடரங்குகளும், பந்தாடு தெற்றிகளும் பூம்பொழில்களும் எங்கும் நிறைந்து காணப்படும். கலங்கரை விளக்கம் (Light house) ஓங்கிய நிலையில் கண்ணிற்கு விருந்து என விளங்கும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய காவிரிப்பூம் பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு கரிகாற் சோழன் என்பான் அரசாண்டு வந்தான். அவன் கல்வியால் நிரம்பியவன். பொறையிற் புவியை ஒப்பான். வீரத்தில் ஈடு மெடுப்பும் அற்றவன். அவன் குடிகளை ஐவகைத் துன்பங்களினின்றும் நீக்கி இன்ப வரசு நடத்தி வந்தான்.

காவிரிப்பூம் பட்டினத்தில் வசித்துவந்த வணிகர் பலர். அவர்கள் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகை மரபினர். அவருட் பெருங்குடியர் குடி தலைசிறந்து விளங்கியது. அக்குடிவழி வந்தோர் நாவாய் வருவாயும் நலமிகப் படைத்திருந்தார். செல்வத்திற் சிறந்த அக்குடியினர் நல்லொழுக்க நெறி நின்றொழுகி, அக்குடிக்குப் பெருஞ் சிறப்பை விளைவித்தனர். அத்தகைய மேம்பாடுற்று விளங்கிய பெருங்குடியர் மரபில் மாசாத்துவான் என்பான் ஒருவன் இருந்தனன். அவன் வளநிதி மிகப் படைத்தவுன்.

அவன் கற்புடை மனைவியோடு இல்லறம் நடத்தி வந்தான். அவனுக்கு அழகிற் சிறந்த ஒரு புதல்வன் இருந்தான். அவன் பெயர் கோவலன். அவன் உயர்குணங்கள் பலவும் ஒருங்கே பொருந்தப் பெற்றவன்.

அவ்வூரில் அதே குடியில் மாநாய்கன் என்னும் மற்றொரு வணிகன் இருந்தான். அவன் மிகச் செல்வம் படைத்திருந் தான். அவன் மனைவியும் கற்பு நிறைந்த பொற்புடைத் தேவி. அவர்கள் இருவரும் அன்புற்று இன்புற்று வாழ்ந்துவந்த னர். அவர்களுக்கு இலக்குமியே அனைய ஒரு பெண் குழந் தை பிறந்து வளர்ந்து வந்தது. அக்குழந்தையின் பெயர் கண்ணகி.

கோவலனும் கண்ணகியும் செல்வமாக வளர்ந்து மணப் பருவம் எய்தினர். சில பெரியோர்களின் விருப்பப்படி மாநாய் கனும் மாசாத்துவானும் ஒருமனப்பட்டுக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் மணம் செய்துவைத்தனர். மாசாத்துவான் தன் மைந்தனுக்குப் புதிய மனை கட்டுவித்து, வேண்டும் பொருள்களையும் அமைத்து அவர்களை அதிலிருந்து இல்லறம் நடத்துமாறு பணித்தனன்.

கோவலனும் கண்ணகியும் தனி மனையில் இருந்து, தான தர்மங்களைச் செய்து முறை தவறாமல் இல்லறம் நடத்தி வந்தனர். அதனைக் கண்டு இருவருடைய இருமுது குரவர் களும் இன்புற்றனர். இவ்வாறு சில ஆண்டுகள் கடந்தன.

## 2. மாதவியும் கோவலனும்

இந்திரன் தேவர்களுக்குத் தலைவன். ஆதலால் அவ னைத் தேவேந்திரன் என்பர். அவன் சபையில் உருப்பசி,

திலோத்தமை முதலிய தேவமாதர் நடம் புரிவர். ஒரு சமயம் உருப்பசி இந்திரன் சிறுவனுகிய சயந்தன்மீது ஆசை கொண்டாள். அதனுல் அவள் ஆடல் பாடல்களில் சிறிது வழுவினள். அதனை அறிந்த அகத்திய முனிவர் அவளை மண்ணிற் பிறக்கும்படி சபித்தார். அவள், மாதவி என்னும் பெயரோடு பூமியிற் பிறந்தாள். அவள் குலத்தின் வழியில் வந்த சித்திராபதி என்பவள் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தாள். அவளுக்கு ஒரு மகள் உண்டு. அவள் பெயர் மாதவி என்பது. அவள் பன்னிரண்டு வயது நிரம்பியவள். அவள் ஆடல் பாடல்களில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தாள்.

சோழன் கரிகாலன் சபையில் மாதவி முதன் முதல் தான் கற்ற ஆடல் பாடல்களை ஆடிப் பாடித் தோற்றுவித்தாள். அவள் திறமையைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தனர். கரிகாலன் அவளுக்கு ஆயிரத்தெட்டுப் பொற்கழஞ்சு பெறும் ஒரு மாலையை அளித்தான். அதனைப் பெற்றுக் கொண்டு மாதவி அரண்மனையை விட்டு வெளியே வந்தாள். கூனி என்பாள், 'அம்மாலையை ஆயிரத்தெட்டுப் பொற் கழஞ்சு கொடுத்துப் பெற்றவர் அதனை மாதவிக்குச் சூட்டி மணமகன் ஆகலாம்' என்று கூறிக்கொண்டு நின்ருள். அந்தச் சமயத்தில் அங்கிருந்த கோவலன் ஆயிரத்தெட்டுப் பொற் கழஞ்சு கொடுத்து அம்மாலையை வாங்கினுன். அதனை அவன் மாதவிக்குச் சூட்டி மணந்து கொண்டான். அன்று முதல் அவன் மாதவியோடு இன்புற்று மகிழ்ந்து வாழ்ந்து வந்தான்; தன் செல்வமெல்லாவற்றையும் அவளுக்கு அளிக்கலானுன்; கண்ணகியை முற்றிலும் மறந்தான்; வீட்டை எண்ணுது துறந்தான். சில ஆண்டுகள் இவ்வாறு சென்றன.

மாதவி கோவலனோடு வாழ்ந்து வந்தாள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மணிமேகலை என்று பெயரிட்டுக் கண்ணும் மணியுமாய் வளர்த்து வந்தனர்.

கோவலனைப் பிரிந்த கண்ணகியோ மிகத் துன்பமுற்றாள். ஆடை ஆபரணங்களை அவள் அறவே துறந்தாள். கோவலனை ஒவ்வொரு நிமிடமும் நினைந்து நினைந்து வருந்துவாள்; "என்று வருவானோ" என்று எண்ணி ஏங்குவாள்; மாதவியிடம் அவன் இன்புற்றிருத்தலை நினைத்துச் சிறிதும் கோபம் கொள்ளாள்; பிறர் பழிக்காத நிலைபற்றி ஒழுகி வந்தாள்; இல்லறத்தினின்றும் சிறிதும் வழுவாதிருந்தாள். கற்புடை மகளிர் கணவனை விட்டுப் பிரிந்திருப்பராயின் அவர்கள் படும் துன்பத்தை யார்தான் அளவிடக்கூடும்!

## 3. இந்திர விழா

தேவந்தி என்பாள் ஒரு பார்ப்பனப் பெண். அவள் கண்ணகியிடம் இளமைப் பருவந் தொட்டுத் தோழமை பூண்டவள். ஆதலின், அவள் உயிர்த் தோழி போன்று ஒழுகி வந்தாள். கண்ணகி படுந்துயரை அறிந்த தேவந்தி அவளுக்குப் பலவாறு தேறுதல் கூறிவந்தாள். ஒருநாள் மாலையில் தேவந்தியும் கண்ணகியும் பேசிக்கொண்டிருந்தனர். கண்ணகி, தான் முதல் நாள் கண்ட கனவினை அவளுக்குக் கூறி யஞ்சியவள் போன்று விளங்கினாள். அதனைக் கண்ட தேவந்தி அவளுக்குப் பல தேறுதல் மொழிகள் கூறினள்.

முன் ஒரு காலத்தில் சோழ நாட்டைத் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் அரசாண்டு வந்தான். அக்காலத்தில் மழை இல்லாமையால் நாடு வறுமை உற்றது. சோழன் பெரிதும் வருந்திப் பெரியோர்கள் சொற்படி

தேவேந்திரனுக்குச் சிறப்பாகத் திருவிழாச் செய்தான். தேவேந்திரன் மகிழ்ந்து மழை பெய்விக்க நாடு செழுமை யுற்றது. அந்நாள் முதல் காவிரிப்பூம் பட்டினத்தில் வருடந் தோறும் சோழ வரசர்களால் இந்திர விழா நடைபெற்று வந்தது. அவ்விழா ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று நடைபெறும். அந்நாள் காவிரிப்பூம் பட்டினம் தேவலோகம்போல் விளங்கும். மக்கள் அன்று இன் புற்றுத் தம்மை விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களால் அலங் கரித்துக்கொண்டு நல்விருந்து உண்டு ஆடிப்பாடி மகிழ்வர்.

மாதவியும் கோவலனும் இன்புற்று வாழ்ந்த காலத்தில் இந்திர விழாக் காலங்களில் சிறப்பாக அலங்கரித்துக்கொண்டு ஆடிப்பாடி மகிழ்வர். கண்ணகியும் தேவந்தியும் பேசிக்கொண் டிருந்த அன்று காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா சிறப் பாக நடைபெற்று வந்தது. கடைசி தினத்தில் அந்நகரிலுள் ளார் அனைவரும் காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகம் என் னும் நீராடு துறைக்குச் சென்றனர். கோவலனும் மாதவியும் நல்லாடை உடுத்து, மணிப்பூண் அணிந்து கடற்கரைக்குச் சென்றனர். அங்கு மாதவி தன் தோழியின் கரத்திலிருந்த யாழை வாங்கி மணிசெய் மோதிரம் அணிந்த விரல்களால் மீட் டினள். கோவலன் அதனை வாங்கிச் சில பாட்டுக்களை வாசித் தான். அப்பாடல்களால் கோவலன் வேறுகுறிப்புடையவனுயுள் ளான் என்று கருதிய மாதவி அந்த யாழை வாங்கித் தானும் வேறு குறிப்புள்ளவள்போல் வாசித்தாள். கோவலன் மனம் மாறியது. சரேலென அவன் அவ்விடத்தை விட்டு அகன்றான். மாதவி கோவலன் பிரிந்து சென்றதை எண்ணி வருந்தி வீடுவந்து சேர்ந்தனள். பின் ஒரு கடிதம் எழுதித் தன்

தோழியிடம் கொடுத்துக் கோவலனுக்குச் சேர்ப்பித்தனள். அம்முயற்சி பழுதாயினமை கண்டு மாதவி வருந்தினுள்.

மாதவியை விட்டுப் பிரிந்த கோவலன் நேராகக் கண்ணகியிடம் வந்தான். வந்தவன் கண்ணகியைக் கண்ணிற் காணற்கும் நாணினன். மலைபோன்ற செல்வம் அனைத்தையும் மாதவிக்கு அளித்ததை எண்ணி வருந்தினன். விரைந்து மனையுட் புகுந்து அமளிமேல் அமர்ந்தான். கண்ணகி அருகில் நின்றனள். "பிரிந்தவர் கூடினுல் பேசவேண்டுமோ" சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்திருந்தனர். கண்ணகியின் முக வாட்டத்தையும், மனக் குறையையும் கோவலன் அறிந்தான். பின் கோவலன், "என் இன்னுயிரே, கற்பின் கொழுந்தே, நான் மலைபோன்ற செல்வத்தைப் பரத்தைக் களித்து வறியனுகினேன். என் குலத்தாரைக் காணவும் என் மனம் நாணுகின்றது; எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் என் மனம் அழலிடைப்பட்ட மெழுகென உருகுகின்றது" என்று வருந்திக் கூறினுன்.

அதைக் கேட்ட கண்ணகி, கோவலன் மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லை என்பதை எண்ணி வருந்துகின்ருன் என்று நினைத்தாள். தன்னிடம் கால்களில் அணிந்துள்ள சிலம்புகளைத் தவிர வேறு நகைகள் இல்லை என்பதை அவள் உணர்ந்தாள். அதனையேனும் அளித்து அவனைச் சந்தோஷப்படுத்த எண்ணிக் கண்ணகி, கோவலனைப் பார்த்து, "என் அன்பே, வருந்த வேண்டா. என்னிடம் இன்னும் இரண்டு காற் சிலம்புகள் உள்ளன. தருகின்றேன் கொண்டு செல்க" என்று முகமலர்ச்சியோடு இனிமையாக மொழிந்தனள்.

கண்ணகியின் அமுத மொழிகளைக் கேட்ட கோவலன், "கண்ணே, மதுரைக்குச் சென்று அச்சிலம்பை விற்று அத் தொகையை முதலாகக்கொண்டு வாணிகஞ் செய்து இழந்த தனத்தைத் தேட நினைத்துள்ளேன். இன்றைய தினம் விடியற் காலம் நாம் இருவரும் புறப்பட வேண்டும்'' என்றான். அதற்கு அவளும் மனக் களிப்போடு இசைந்தனள்.

## 4. வழிச் செலவு

கோவலனும் கண்ணகியும் அன்று இரவு விடியற்காலை யில் வேற்றூர் செல்லத் தீர்மானித்தனர். கண்ணகி அன் றிரவு பிரயாணத்திற்கு வேண்டுவனவற்றைச் சித்தப் படுத் திக் கொண்டனள். இரவில் இருவரும் உண்டபின் உறங் கினர். கோவலன் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. விடியற்காலையில் இருவரும் எழுந்து பிரயாணப்பட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தின் சிறந்த மாளிகைகளை யுடைய நெடுந் தெருக்கள் பலவற்றைக் கடந்து, பல்வேறு தெய்வங் கள் கோயில்கொண்டருளும் கோயில்களுக்குச் சென்று தொழுது, மதிலையும் கடந்து ஒரு காவததூரம் சென்றனர்.

பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரைக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணங்கொண்ட கோவலன் கண்ணகிக்கு வழிநடை வருத்தம் தோன்றாதபடி பல கதைகளைக் கூறியும் பல விநோதங்களைக் காட்டியும் ஆறுதல் கூறிக்கொண்டு சென் றான். செல்லும் வழியில் கவுந்தியடிகள் என்னும் ஒரு தவ மாதைக் கண்டான். அவள் ஆருகத மதத்தினள். அத்தவ முதியோளைக் கோவலனும் கண்ணகியும் பணிந்தனர்.

கவுந்தியடிகள் கோவலனைப் பார்த்து, "செல்வ, நீ இந் நங்கையுடன் இவ்வாறு வழிநடைப்பட்டு வந்தவாறு என்?'' என்று வினவினள். கோவலன் அறியாமையால் தன் செல்

வத்தை எல்லாம் இழந்ததைக் கூறித் தான் வாணிபம் செய்து பொருளீட்ட மதுரைக்குச் செல்வதாகச் செப்பினன். அதனைக் கேட்ட கவுந்தியடிகள் அவர்கள் ஊழ்வலிக்குப் பெரிதும் வருந்தித் தானும் மதுரைக்கு உடன் வருவதாகக் கூறினள். அம்மொழி கோவலனுக்கு மன ஆறுதலை யளித்தது. பின், மூவரும் புறப்பட்டனர்.

இடைவழியில் மருத நிலக்காட்சிகள் பலவற்றை மூவரும் கண்டனர். நாளொன்றுக்கு ஒரு காவத தூரமாக நடந்து மூவரும் சீரங்கம் என்னும் திருப்பதியை யடைந்தனர். அங்குக் கவுந்தியடிகள் சாரணர்களைக் கண்டு வணங்கி அறவுரை பெற்று மூவரும் ஓடமேறிக் காவிரி யாற்றைக் கடந்து வழி நடந்து பூக்கள் மலர்ந்த ஒரு பொழிலில் தங்கினர்.

அங்கு நெறியல்லா நெறியில் ஒழுகும் ஓர் ஆடவனும் ஒரு பொதுமகளும் வந்து கோவலனையும் கண்ணகியையும் பார்த்து அவர்களைக் காமனும் இரதியும் என்று நினைத்து அவர்கள் யார் எனக் கவுந்தியடிகளைக் கேட்டனர். கவுந்தியடிகள் அவர்களின் எண்ணத்தை யறிந்து கோவலனையும் கண்ணகியையும் தம் மக்கள் என்று கூறினர். அம்மொழி கேட்ட அவ்விருவரும், "ஒரு தாய் வயிற்றிற் பிறந்தார் கணவனும் மனைவியும் ஆவதுண்டோ!" என்று எள்ளி நகையாடினர். அதனைக் கண்ட கவுந்தியடிகள் சினந்து, அவர்களை நரிகளாகச் சபித்தனர். தவ வலியுடையார் வாய்ச்சொல் தப்பாது பலிக்கும் ஆதலின் அத்தூர்த்தர் இருவரும் நரிகளாக மாறி ஊளையிட்டனர். அக்குரல் கேட்ட கோவலனும் கண்ணகியும் வந்து உற்றது அறிந்து கவுந்தியடிகளைச் சாபவிடை யருளுமாறு வேண்டினர். அவர்கள் வேண்டுகோட்கு இரங்கி ஓராண்டு உறையூர்க் காட்டகத்தே திரிந்து பின்னர்த் தம்

உருப்பெறுவர் எனச் சாபவிடை அருளினர். மூவரும் அன்றிரவு உறையூ ரடைந்து அங்குத் துயின்று மறுநாள் விடியற் காலத்தில் புறப்பட்டனர்.

மூவரும் நெடிது தூரம் நடந்து குளிர்ந்த மரங்கள் நிறைந்த ஒரு சோலையை அடைந்து அங்குத் தங்கினர். அப்போது அங்கு அவர்களிடம் ஒரு மறையவன் வந்தான். கோவலன் அவ்வந்தணனைப் பார்த்து, "அருமறை யுணர்ந்த அந்தணாள, நும் ஊர் யாது? இவ்வாறு வழிப்போந்த காரணம் என்னை?" என்று வினவினன். அதற்கு அவ்வந்தணன், "வணிகச் செம்மல், நான் குடகு மலை நாட்டு மாங்காடு என்னும் ஊரில் வாழும் மறையோன். பொன்மலைமீது நீலமேகம் படிந்தாற்போல் விளங்கும் ஆயிரமுடி யரவணையின்மீது அறிதுயில் கொள்ளும் அரங்கனைக் காணும் விழைவுடையேனாய் என் ஊரினின்றும் புறப்பட்டு வருகின்றேன். வரும் வழியில் பாண்டிய நாட்டின் வளத்தையும் சிறப்பையும் கண்டு கேட்டு மகிழ்ந்தேன். பாண்டியனின் கொடைத்திறனையும், தண்ணளியையும் நினைக்குந்தொறும் என் மனம் மிக மகிழ்கின்றது" என்று கூறினான். அதனைக் கேட்ட கோவலன், "அந்தண, அப்பாண்டியன் வசிக்கும் மதுரைக்குச் செல்லும் வழியைக் கூறுக" என்று கேட்டான்.

அம் மாங்காட்டு மறையோன் மூன்று நெறிகளைக் கூறி, ஒவ்வொரு வழியைப் பற்றியும் விரிவாக எடுத்து விளம்பினான். பின் கவுந்தியடிகளிடமும் கோவலனிடமும் விடை பெற்றுக்கொண்டு அவ்வந்தணன் தன் வழி நோக்கிச் சென்றான். மூவரும் புறப்பட்டு நடந்து சென்று ஒரு பதியை அடைந்து அற்றை நாளிரவை அங்குக் கழித்தனர்.

மற்றை நாள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு நடந்து சென்று கொடும்பாளூர் ஏரிகரையை அடைந்தனர். அங்கிருந்தும் பிரிந்த ஒரு வழியே நெடிது நடந்து சென்றனர். நெடிது தூரம் நடந்ததால் கண்ணகிக்கும், கவுந்தியடிகட்கும் நடை வருத்தமும் நீர் வேட்கையும் உண்டாயிற்று. ஆதலின் மூவரும் ஓரிடத்தே தங்கினர். கோவலன் பக்கலில் கண்டதோர் குளக்கரையை அடைந்தான். அப்போது அங்கு அக்காட்டில் உறையும் வனதெய்வம் ஒன்று மாதவியின் தோழியாகிய வசந்தமாலையைப் போன்ற வடிவம் போட்டுக்கொண்டு கோவலன்முன் வந்து நின்று, "வணிகர் திலகமே, உன் பொருட்டாக நான் காட்டில் தனியே நீண்ட தூரம் நடந்து வந்திருக்கின்றேன். மாதவி எழுதிய கடிதம் கண்டும் நீர் வாராமையால் மிகவும் வருந்தி என்மீது பழியேற்றிப் புலம்பினள். என்னைக் கடிந்து கூறினள். எனக்கு நல்வார்த்தை மொழிந்தருளுவீர்" என்று கூறிற்று.

கோவலன் சிறிதுநேரம் சிந்தித்தான். அம்மாங்காட்டு மறையோன் கூறியபடி வன தெய்வமாக இருத்தலும் கூடுமோ? என்று நினைத்தான். அவன் அந்தரி மந்திரம் உணர்ந்தவனாதலின் அதனை உருவேற்றினன். அம்மந்திரத்திற்கு அவ் வன தெய்வம் அஞ்சிற்று; தவ வலியுடைய கவுந்தியடிகள் அறிந்தால் யாது விளையுமோ என்று மலங்கிற்று; கற்பின் மிக்க கண்ணகி உணர்ந்தால் எச்சாபம் கிட்டுமோ எனக் கலங்கிற்று. ஆதலின் அத்தெய்வம் கோவலனிடம் உண்மையைக் கூறித் தான் செய்த பிழையைக் கண்ணகி, கவுந்தியடிகளிடம் கூறுதிருக்கும்படி இரந்து கேட்டு அகன்றது. கோவலன், பின், நீர் பருகிவிட்டுக் கையில் நீரும் கொண்டு கவுந்தியடிகளும் கண்ணகியும் இருந்தவிடத்தை

யடைந்தான். அவர்களும் நீர் பெருகித் தாகவிடாய் தணிந்தனர்; பின்வழி நடந்தனர்.

கதிரவன் கடுமை பொறுக்கலாற்ருது மூவரும் வருந்தினர். கானக வழியில் நெடிது தூரம் கடிது நடந்தனர். மூவரும் ஐயை கோட்டத்தை யடைந்தனர். கோவலன், "கதிரவன் ஒளியிற் கானக வழியைக் கடத்தலினும் தண்ணிய திங்கள் ஒளியில் வழி நடத்தல் நலமாகும்" எனக் கூறினன். அதற்குக் கவுந்தியடிகளும் நேர்ந்தனர். இரவு வந்தது. திங்கட் புத்தேள் வானத்தில் விரிநிலாப் பரப்பி விளங்கினன். மூவரும் இரவு முழுவதும் நடந்தனர்; விடியற்காலையில் ஒருரை யடைந்தனர். அவ்வூர்ப் புறத்தே இருந்த கோயிலில் கவுந்தியடிகளையும் கண்ணகியையும் இருத்திக் காலைக்கடன் கழிக்கும் வண்ணம் கோவலன் ஒரு குளத்தை யடைந்தான்.

மாதவியின் ஓலை ஒன்றைக் கையில் ஏந்தியவனுய்க் கௌசிகன் என்னும் அந்தணன் ஒருவன் அங்கு வந்தான். கோவலனைக் கண்டு மாதவி படுந்துயரையும், தாய் தந்தையர் படுந்துயரையும் பலபடக் கூறி அந்தணன் அவ்வோலையை அவனிடம் கொடுத்தனன். கோவலன் ஓலையை வாசித்துப் பார்த்து, அவ்வோலையே தன் பெற்றோர்க்கு விண்ணப்பிக்க வேண்டிய பொருளைக் கொண்டுள்ளது என்பது அறிந்து அதனை அந்தணனிடம் கொடுத்துத் தன் பெற்றோரிடம் அளிக்குமாறு வேண்டினன். அவர்கள் தளர்ச்சியை நீக்கும்படி கூறித் தான் வருதற்கியலாமையை விளம்பி அந்தணனை ஏகும்படி குளிர்மொழி கூறி வழி விடுத்தான்.

பின், கோவலன், கவுந்தியடிகளையும் கண்ணகியையும் அடைந்து மூவருமாகப் புறப்பட்டுப் பாணர் ஊரிற் சென்று

தங்கி இரவில் மதியப்புத்தேள் பானிலா விரித்த பின் பிர யாணமாகி வைகை யாற்றின் கரைமேலே நடந்து சென்று மதுரைத் துறையை அடைந்தனர். வையை என்னும் பொய் யாக் குலக்கொடியைத் தொழுது மூவரும் ஓடமேறி நதியைக் கடந்து நகரின் கீழ்ப்புறவாயிலில் இருந்த அருக முனிவர் இருக்கையை அடைந்து அங்குத் தங்கினர்.

## II. மதுரைச் செய்தி

### 5. அடைக்கலம் புகுதல்

தண்டமிழ் மொழியின் சங்கம் திகழ்ந்ததும், எண்டிசை வளனும் ஒருங்கே யமைந்ததும் ஆய மதுரைமா நகரம் பாண் டிய நாட்டுத் தலை நகரமாக விளங்கிற்று. அதனைத் தலை நக ராகக் கொண்டு ஆண்டு வந்த பாண்டிய மன்னர் வதிவழித் தோன்றியோராவர். தமிழ் மொழியின் சுவை காணற்கே பொருப்பரையன் மடப்பிடியும் தடாதகாதேவி எனத் தோன் றிப் பாண்டிய நாட்டை யரசுபுரிந்தனள். முருகவேள் உக்கிர குமாரனாகவும சிவபிரான் சௌந்தரமாறனாகவும் தோன்றியது அந்நன்னாட்டிலேதான்.

கன்னித் தண்டமிழ் நாட்டுத் தலைநகராகிய மதுரை மூதூர், பல கோயில்களும் மாட மாளிகைகளும் நிரம்பப் பெற்றதாதலின் கவினார் திரு நகராய் விளங்கும். அந்நகரின் மதிலை ஆழ்ந்து அகன்ற அகழி சூழ்ந்திருக்கும். சந்தனப் பொதியத் தென்மலைச் சாரலினின்றும் வீசும் தென்றல் மண முஞ் சுகமும் தரும்.

இத்தகைய சிறப்பினையுடைய நகரிலமர்ந்து நெடுஞ் செழி யன் என்னும் பாண்டியன் அரசுபுரிந்து வந்தான். அவன் மனைவி கோப்பெருந்தேவி என்பாள் பொற்புடைக் கற்பின்

கொழுந்து. நெடுஞ்செழியன் எவ்வாற்றானும் குடிகளுக்கு இன்னல் இடுக்கண் நேராதபடி பரிபாலித்து வந்தான். அவன் ஆட்சியில் குடிகள் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

அருகப்பள்ளியில் தங்கிய கோவலன் கவுந்தியடிகளின் நல்லுரை கேட்டுப் பின் நகர் வளம் காண்பான் கருதி மதுரைக்குட் சென்றான். மதுரையின் பெருந்தெருக்கள் பலவும் கண்டு மகிழ்பூத்த கோவலன் மீண்டும் கவுந்தியடிகளை யடைந்து கண்டவற்றைக் கூறி இன்புற்றிருந்தான்.

அச்சமயத்தில், காவிரிப்பூம் பட்டினத்திற்கு அருகிலுள்ள தலைச்செங்காட்டுப் பார்ப்பான் மாடலன் என்பான் அங்கு வந்திருந்தனன். அந்தணனைக் கோவலன் முன்னமே அறிவானாதலின் சென்று அவனடி பணிந்தனன்.

அந்தணன் வணிகச் செம்மலைக் கண்டு வருந்தி, "மாதவி மகள் மணிமேகலைக்குப் பெயரிட்டு மங்கலங் கொண்டாடிய நாளன்று நின்பால் தானம் பெற வந்தான் ஒருவனை மதயானை வாயினின்றும் காப்பாற்றிய தீரனே! மனைவி, பாவம் செய்தாள் என்று துறந்து கங்கையாடச்சென்ற மறையவனையும், ஓலைகொண்டு தெருத் தெருவாய் அலைந்த அவன் மனைவியையும், பாவந் தொலைதற்குரிய தானங்களைச் செய்து ஒன்று கூட்டி வாழச்செய்து அவர்கள் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் அளித்த வள்ளால்! கற்புடையாள் ஒருத்தியை அறநெறி வழுவினள் என்று குற்றங் கூறித் திரிந்த ஒருவனை அவ்வூர்ச் சதுக்க பூதத்தின் கைப்பாசம் இழுத்துச் செல்ல, அவன் தாய் தந்தையர் வருந்தி முறையிட, அவர்கட்கு வேண்டும் பொருளளித்துத் துக்கம் துடைத்த வணிகர் திலகமே! இத்தகைய நன்மைகளைப் புரிந்த நீ துன்புறல் என்னையோ? முன்செய்த வினை தானோ?" என்று கூறினன். அது

கேட்ட கோவலன், "அருமறை யுணர்ந்த அந்தண! நேற்றிரவு விடியலில் நான் ஒரு கனவு கண்டேன். அது ஒரு தீக்கனு. விடியற்காலத்தில் கண்ட கனவாதலின் பலித்து விடுமோ என அஞ்சுகின்றேன். கண்ணகி நடுங்குதுயர் எய்த, நான் உடுத்திருந்த ஆடை பிறராற் கவரப்பட்டது. அப்பால் நான் பன்றியின்மேல் ஏறலானேன். பின்னர் நானும் கண்ணகியும் நற்பேறு பெற்றோம். மாதவி மகள் மணிமேகலையைப் புத்தருக்களித்தாள். இதுதான் நான் கண்ட கனு" என்று உளைந்து கூறினான்.

அது சமயம் கவுந்தியடிகளும், "கோவல, இவ்வறப் பள்ளியிருக்கை துறவிகட் குரியது; மற்றையோர்கட்குப் பொருந்தாது. நீ, நின் மனைவியோடும் நகருட் புகுவாயாயின், ஆண்டுள்ள வணிகர் பெருமக்கள் நின்னை மாசாத்துவான் மகன் என அறிந்தக்கால் சிறப்புறப் போற்றுவார்கள்" என்று கூறினார். அதுகாலை ஆரியாங்கனை என்னும் இயக்கிக்குச் சோறு படைத்து வழிபட்டு வருகின்ற மாதரி என்னும் ஆயர்குலமாது ஒருத்தி கவுந்தியடிகளைக் கண்டு பணிந்தாள்.

கவுந்தியடிகள் அடைக்கலங் காத்தலின் பெருமையை மாதரிக்கு விளங்கக் கூறினார். பின், கோவலனையும் கண்ணகியையும் சுட்டிக் காட்டி அவர்கள் பெருமையையும் எடுத்துக் கூறினார். மாதரி பொழுதுபடுமுன் கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு தன் இல்லம் சேர்ந்தாள். இல்லத்திற்குச் சென்றதும் கண்ணகியை நீராட்டி, மாதரி அவட்குத் தன் மகள் ஐயை என்பாளைக் காண்பித்து உற்ற தோழியாக வைத்துக்கொள்ளுமாறு வேண்டினள். கோவலனையும் கண்ணகியையும் ஒரு புதிய வீட்டில் இருத்தி, அதில் உணவுப்பொருள் பலவும் நிரப்பினள். கண்ணகி ஐயை

உதவியையும் பெற்று அட்டில் புக்கு அடிசில் அமைத்தாள். பின், அவள் கோவலனை நீராட்டுவித்து இலைபோட்டு இன்னடிசில் படைத்து முகமன் கூறி உபசரித்தனள். கோவலன் உண்டு இளைப்பாறியிருப்பக் கண்ணகி வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்து நின்றாள். அப்போது கோவலன் தான் முன்செய்த அடாத செயல்களை எல்லாம் கூறி வருந்தினான்.

மற்றும், அவளுக்குப் பலவாறு தேறுதல் கூறி அவள் பாதச் சிலம்புகளில் ஒன்றை விற்று வருவதாகக் கோவலன் கூறினான். கண்ணகியும் சிறிதும் மனங் கோணுதலின்றிக் காற் சிலம்புகளில் ஒன்றினைக் கழற்றிக் கொடுத்தனள். சிலம்பினைக் கைக்கொண்ட கோவலன் கண்ணகியை அரிதிற் பிரிந்து சிலம்பு விற்று வரும்பொருட்டு மதுரைமா நகருட் புகுந்தான். மனம் கண்ணகியை நோக்கிப் பின் இழுத்தது. வாணிகத்திற்குப் பொருளீட்டும் முயற்சி முன் சென்றது. செல்லுங்கால் ஓர் எருது அவனை எதிர்த்துப் பாய வந்தது. அதற்கும் அவன் தப்பிச் சென்றான். ஊழ்வலி யாரைத்தான் விட்டகலும்! அந்தோ! அவன் தீய நிமித்தக் குறிகளையும் அறியான் ஆதலின் மதுரை நகரின் கடைத்தெரு வழியே சென்றான்.

## 6. கோலைக்களம் படலம்

மதுரைத் திருநகரின் அகன்ற பெரிய கடைத் தெருவின் வழியே நூற்றுவர் பொற்கொல்லர் பின் தொடர்ந்து வர, ஒருவன் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான். அவர்கள் அனைவரும் அரசனால் அளிக்கப்பட்ட அங்கிகளை அணிந்திருந்தனர். எதிரே வந்துகொண்டிருந்த அவர்களைக் கோவலன் கண்டான். நூற்றுவர் பின் தொடர வந்து கொண்டிருந்த கம்பீரமான அத்தட்டானை அரசன்பால் பட்டமும்

பரிசும் பெற்ற தலைமைத் தட்டான் என்று எண்ணிக் கோவலன் அவனருகிற் சென்று, "ஐயா, மன்னவன் மனைவி மாண்புற அணியத்தக்க சிலம்பு ஒன்று என்னிடமுளது; அதனை விலையிட வல்லையோ" என்று வினவினன்.

அப்பொற்கொல்லன் கை கூப்பித் தொழுது, "சிறிதளவு அறிவேன்" என்றான். கோவலன் சிலம்பை எடுத்து அவன் கையிற் கொடுத்தனன். அதனை வாங்கிப் பார்த்த பொற்கொல்லன் அதன் சிறந்த வேலைப்பாடுகளை உற்று நோக்கினன். தான் முன்னர் அரண்மனையினின்றும் வஞ்சித்துக் கவர்ந்த சிலம்பினை அஃதொக்கும் என்று அவன் உணர்ந்தான். பின், அவன், கோவலனை நோக்கி, "ஐய, இச்சிலம்பின் சிறப்பினைக் காணின் இதை எம்மரசியாரன்றி மற்றெவரும் வாங்கற்கும் அணிதற்கும் உரியாரல்லர். ஆதலின், இதனை வேந்தர் பெருமானுக்குக் காண்பித்து வருகின்றேன். அதுவரை என் குடிலுக்கு அயலதான இவ்விடத்தே இருக்க" என ஓரிடத்தைக் காட்டிப் போயினன். வருவதறியாத மாசற்ற மனமுடைய வணிகர் திலகனன கோவலன், பொற்கொல்லன் காட்டிய விடத்தே யமர்ந்திருந்தனன்.

பொற்கொல்லன் மனமோ களிப்பென்னும் கடலுள் மூழ்கித் திளைத்தது. சின்னாள்முன் தான் வஞ்சித்த சிலம்பைக் கண்டுபிடிப்பதற்குள் அதனைக் காட்டிக் குற்றத்தை அயலூரான் மீதேற்றித் தப்பித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தால் இறுமாந்து அரண்மனை நோக்கி விரைந்து நடந்தான் பொற்கொல்லன்.

பாண்டியன், கோப்பெருந் தேவியின் ஊடல் தீர்ப்பான் வேண்டித் தோழிமார் புடைசூழ அந்தப்புரம் நோக்

கிச் சென்றுகொண்டிருந்தான். இடை வழியிலே பொற் கொல்லன் அரசனை யடைந்து வணங்கி, "மன்னவ, பண்டு சிலம்பு திருடிய கள்வன் எனது சிறு வீட்டின் புறத்தே வந் திருக்கின்முன்" என்முன். பண்டைத் தீவினைப் பயனுலோ தொல்வினை தொடர்ந்தமையாலோ, அந்தப் புரத்தில் அறி வைப் போக்கிய பான்மையாலோ, தேவியின் ஊடல்வினை தீர்க்கும் கருத்தினுலோ, மனவலி யிழந்து நின்ற மன்னவன், "அவனைக் கொல்ல அழைத்து வாருங்கள்" என்று ஏவ வேண்டியவன், "அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வாருங்கள்" என்று ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டான். பொற் கொல்லன் தன் எண்ணம் பலித்ததென்று அகமிக மகிழ்ந்தான்.

தடுமாற்றங் கொண்ட வேந்தன் ஏவல் கேட்ட ஏவலா ளர் பொற்கொல்லனைத் தொடர்ந்துவர, அவன் அவர்களை யழைத்துச் சென்று கோவலனைக் காட்டினுன். அவர்கள் கோவலன் உருவத் தோற்றத்தையும், முகப் பொலிவையும் கண்டு, "அவன் கள்வன் என்று சொல்லப்படுவான் அல் லன்" என்று கூறினர். பொற்கொல்லன், தன் சொற்றிற னல் கள்வர்களின் தன்மையை எல்லாம் விளங்க எடுத்துக் கூறி அவர்களுக்கு அவன் கள்வன்தான் என நிரூபிக்கலா னுன். அதற்காக அவன், பாண்டியன் தம்பி பள்ளி யறை யில் திருடன் ஒருவன் பெண்ணுருக் கொண்டு சென்று அவன் தரித்திருந்த வயிரமணிக் கோவையைக் களவாடியது மன்றித் தூணென்றைத் தானுகக் காட்டி மறைந்து சென்ற தையும் விரித்துக் கூறிக் கள்வர்களின் வல்லமையை விளக்கி னுன். அப்போது ஏவலாளருள் ஒருவன் மழைக்காலத்து நள் ளிரவு ஒன்றில் நீல உடை உடுத்த கள்வன் ஒருவனைத் தான்

கண்டு அவனை நெருங்கி வாளை உருவியதாகவும் அவன் அவ்வாளைப் பறித்துச் சென்றதாகவும் கூறினன்.

இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையில் ஏவலாளருள் ஒருவன், தறுகணன், கொடியன், அறிவில்லான் விரைந்து சென்று தன் கைவாளாலே வணிகச் செம்மலாகிய கோவலனை வெட்டி வீழ்த்தினன். குருதி வெள்ளம் பெருகிற்று. நிலமகள் பெருந்துயர் கூர்ந்தாள். கோடாத காவலன் செங்கோல் கோடியது. பண்டை வினையால் வேற்றாரில் கள்வனெனக் கூறப்பட்டுக் கோவலன் வெட்டுண்டு வீழ்ந்தான். அந்தோ! விதியினுல் விளையும் விளைவை யார் அறிவார்? ஊழிற் பெருவலியாவுள? 'எப்படியும் வினைப்பயன் உலப்பும்' என்பது உண்மை யுரைகளன்றோ?

"நண்ணும் உருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகிதன் வேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை."

## 7. கண்ணகி கற்பு

மறுநாட் காலையில் அரச மாளிகையில் காலை முரசம் கறங்கிற்று. அன்று மாதரி அரசர்க்கு நெய் அளக்கு முறை நாள். ஆதலின் அவள் தயிர் கடையும் பொருட்டுத் தாழியிடம் சென்று காண்கையில் பிரையிட்ட தாழிகளில் பால் உறையாமையைக் கண்டாள். தொழுவத்தில் காளைகள் கண்களில் நீரை வடித்தன. பசுக்கள் உடல் நடுங்க அலறின. ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடாமல் குழைந்தன. பசுக்களின் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் கட்டறுந்து வீழ்ந்தன. அவைகளை எல்லாம் கண்ட மாதரி எத்தகைய

தீங்கு நேரிடத் தோன்றும் உற்பாதங்களோ அவை என மயங்கினாள். தீங்கு நேரிடாவண்ணம் காக்கும்பொருட்டு ஆயர்குல மாதரை யழைத்துக் கண்ணகி காணக் குரவைக் கூத்தாடினள். பின், திருமாலைப் பூசித்தற்பொருட்டு நீராட, வையைக்குச் சென்றாள்.

அப்பொழுது கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்தாள். ஆய்ச்சி ஒருத்தி, அதனைக் கண்ணகிக்குக் கூற அஞ்சினளாய் நீராடிவந்த ஆயர்மகளிடம் தனித்தனியே கூறினாள். அச்செய்தி கேட்ட எல்லோரும் நெஞ்சழிந்து விம்முற்று அசையாது நின்றனர். அவ்வாறு நிற்றலைக்கண்ட கண்ணகி, தன் மனத்தில் தோற்றிய பல்வேறு தோற்றங்களால் 'கோவலருக்கு உற்றதென்னோ' எனத் தயங்கி அவளைக் கேட்டனள். ஆய்ச்சி, கண்ணகியைப் பார்த்து, "என் சொல்வேன், அந்தோ, அரசியின் சிலம்பு திருடிய கள்வன் எனக் காவலாளரால் உன் கணவன் வெட்டுண்டான்" என்றாள். அவள் அவ்வாறு கூறி வாய் மூடுமுன் கண்ணகி படிமேல் நெடிது வீழ்ந்தாள்; எழுந்தாள்; அலறினாள்; பதறினாள்; நடுநடுங்கினாள்; கைகளால் முகத்தில் அறைந்து கொண்டாள்; அரற்றினாள்; ஏங்கினாள்; அழுது புலம்பினாள். அந்தோ! கண்ணகி பட்ட துயரை யாவரே கணித்தறிய வல்லார்?

கண்ணகி, அருகில் நின்ற மகளிரை நோக்கி, "யாவரும் கேளுங்கள்" என்று கூறிச் சூரியனை நோக்கி, "காய் கதிர்ச் செல்வனே, நீ அறிய என் கணவன் கள்வனோ?" என்றாள். உடனே அசரீரியாக, "நங்காய், நின் கணவன் கள்வன் அல்லன்; அவனை இவ்வாறு செய்த இவ்வூரை எரி உண்ணும்" என ஒரு வாக்கு எழுந்தது. அனைவரும் கேட்டனர்.

கதிரவனால் இவ்வாறு கூறக்கேட்ட கண்ணகியாம் கற்பரசி, தனது மற்றொரு சிலம்பைக் கையிற்கொண்டு நகருட் புகுந்து எதிர்ப்பட்ட மகளிரை நோக்கி, "யான் ஒரு வணிகன் மனைவி. என் சிலம்பை விற்க வந்த என் கணவனை கள்வனென்று இவ்வூர் அரசன் கொன்றுவிட்டான். நான் அவர் வெட்டுண்டு கிடக்கும் இடத்திற்குச் செல்கின்றேன். அவர், நான் படுந் துன்பங் கண்டு ஒரு வார்த்தையாயினும் கூறு தொழியின் என்னைக் கள்வன் மனைவி என்று இகழுமின்'' என்று சொல்லி விரைந்து சென்றாள்.

கண்ணகி விரைந்து சென்று கோவலன் வெட்டுண்டு கிடந்த இடத்தை யடைந்தாள். வெட்டுண்ட மேனியை அவள் கண்டாள்; பதை பதைத்தாள்; இரத்தம் தோய்ந்து கிடந்த காதலன் மீது வீழ்ந்து புரண்டு அழுதாள்; அரற்றினாள். கண்ணீர் ஆறெனப் பெருகியோடிற்று; பலவாறு கூறிப் புலம்பினாள்; மார்பிறுகத் தழுவிக்கொண்டாள். அந்நிலையில் கோவலன் துயிலொழிந்து எழுந்தானைப் போன்றெழுந்து "காதலி, என்னே! நின் மதிமுகம் வாட்டமடைந்துள்ளது?'' என்று கூறித் தன் கையால் அவள் கண்ணீரை மாற்றினான். கண்ணகி ஏங்கியழுது அவனிரு பாதப்போதுகளையும் பற்றிக்கொண்டாள். கோவலன், அவ்வினையுடம்பு நீத்துத் துறக்கம் புக எழுந்து, "கண்ணகி! நீ இரு'' என்று கூறிப் போயினான்.

"ஆ! இதென்ன விஞ்சை!'' நான் என் சீற்றம் தணிய, பாண்டியனை, ஏன் என் கணவனைக் கொன்றாய் என்று கேட்பேன்'' என்று கூறிக்கொண்டே விரித்த கூந்தலும், சிதைந்த ஆடையும், கையிற் கொண்ட தனிச் சிலம்பும் புழுதி படிந்த மெய்யும், வாடிய முகமும், நீரருவிபோல்

இழியும் கண்ணீரும், வீரத் தோற்றமும் உடையவளாய்க் கண்டார் நடுங்கக் காவலன் கோயிலை நோக்கி நடந்தாள்.

பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி கோப்பெருந்தேவி தான் கண்ட கனவுகளைப்பற்றித் தோழியிடம் கூறிக்கொண்டாள். அவள், செங்கோலும், வெண்குடையும் சாயக் கண்டதாகவும், வாயிலில் தூங்கிய ஆராய்ச்சி மணி ஆரவாரித்ததாகவும், சூரியனை இருள் விழுங்கியதாகவும், இரவில் வானவில் தோன்றியதாகவும், பகலில் நக்ஷத்திரங்கள் வீழ்ந்ததாகவும் கனாக் கண்டதாகக் கூறினாள். மற்றும் அத்தகைய தீக் கனாக்களால் யாது தீங்கு நேரிடுமோ? என அஞ்சினாள். அக்கனாவை அரசனுக்கு அறிவிக்க விழைந்தாள். அவள் அரசனிருக்கும் இடம் நோக்கித் தோழியருடன் சென்றாள். அரசனை யடைந்து தான் கண்டவற்றை அவள் கூறினாள். கோப்பெருந்தேவி கூறிய தீக் கனாக்களின் திறத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

அந்நிலையில், கணவனை யிழந்தாளாய கண்ணகி,—கற்பரசி—வீரபத்தினி, காவலன் கோயில் வாயிலை யடைந்து வாயில் காப்போனை நோக்கி, "வாயிலோயே, அரசு நெறி பிழைத்தான் கோயில் வாயில் காக்கும் காவலோனே! சிலம்பொன்றைக் கையில் ஏந்திக் கணவனை யிழந்தாளாய ஒருத்தி, கடைப்புறத்தாள் என்று அறிவிப்பாயாக" எனக் கூறினள். வீர மங்கையின் தீர மொழி கேட்ட காவலாளன் வெருண்டு விரைந்து உட்புகுந்து, "மன்னவ, வாழி; அரண்மனை வாயிலில் ஓர் அணங்கு வந்துள்ளாள். அவள், கொற்றவையல்லள்; காளியல்லள்; மாற்றங் கொண்டாள் போன்ற சீற்றங் கொண்டாள்; கையிற் றனிச் சிலம்பொன் றேந்தியுள்ளாள்; கணவனை யிழந்தவளெனக் கழிறினள்;" என்றாள்.

நெடுஞ்செழியன் அது கேட்டு, "அவ்வாறாயின் அன்னாளை உட்புக விடுக" என்றான். காவலன் கண்ணகியை உட்புக விட்டான். கண்ணகி அரசனை அணுகினள்; அரசன், "நீ யார்? நீ கண்ணீர் வடித்த வண்ணம் வந்தவாறு என்னை?" என்று வினவினன். கண்ணகி செப்புகின்றாள், "காவல, செப்புவல் கேண்மோ, நான், சிபியும், மனுச்சோழனும், புறாவுக்காகவும் கன்றுக்காகவும் துலை புகுந்தும், மகனைத் தேர்க்காலில் இடறச் செய்தும் கோனெறி கோடாது அரசு புரிந்த சோழ நன்னாட்டிற் பிறந்தவள். ஆசில் சிறப்புடை மாசாத்துவன் மருகி; ஆணைப் பெருமை மாநாய்கன் மகள்; எனது காற்சிலம்பை விற்க நின் நகரியிற் புகுந்து கொலையுண்ட கோவலன் மனைவி; என் பெயர் கண்ணகி" என்று கூறி வீரா வேசங் கொண்டு நின்றாள்.

நெடுஞ்செழியன், "நங்காய், கள்வனைக் கோறல் கடுங் கோலாமோ?" என்றான். கண்ணகி மன்னனை நோக்கி, "தீர விசாரியாமல் ஒன்றினைச் செய்யலாமா; என் காற் சிலம்பின் பரல் மாணிக்கம். உன் அரண்மனைச் சிலம்பின் உள் அரியாது?" என்றாள். நெடுஞ்செழியன் அரண்மனைச் சிலம்பின் உள் அரி முத்தெனக் கூறிக் காவலனைக் கூவிக் கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். சிலம்பு கொண்டுவந்து அரசன் முன் வைக்கப்பட்டது. கண்ணகி அதனை எடுத்து உடைத்தாள். சிலம்பு வாய் விண்டது; மாணிக்கப் பரல்கள் சிதறின. அவற்றைக் கண்ட அரசன் மெய்ந் நடுக்குற்றான். செங்கோல் கோடியது. குடை கவிழ்ந்தது. ஆவி சோர்ந்தது. நெஞ்சுடைந்தது. "ஆ! கெட்டேன்! வஞ்சகனாகிய பொற்கொல்லன் சொல்லால் தீங்குற்றேன். அன்னியன் உயிரை மாய்த்த யானோ

அரசன்?'' என்று கூறிக்கொண்டே மயங்கி அரியணைமீது சாய்ந்தான்; திடீரென்று நிலத்தில் வீழ்ந்தான்; உயிர் துறந்தான்.

“மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்,
கையிற் றனிச்சிலம்பும், கண்ணீரும்,—வையக்கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகை தன் சொல், செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.''

“காவி யுகு நீருங், கையிற் றனிச் சிலம்பும்
ஆவி குடிபோன வவ்வடிவும்,—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலும், கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்.''

அயலில் இருந்த கோப்பெருந்தேவி மெய்ந்நடுங்கி, விதிர் விதிர்த்து ஆடையணிகள் குலைய அலறிக்கொண்டு கண்ணகியின் இடையணிகளில் விழுந்து தொழுதாள். கண்ணகி, “கோப்பெருந்தேவி, யான் செய்யக்கடவது ஒன்றுமில்லை. யான் யாதும் அறியேன். அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றம் என்பதும், முற்பகல் செய்தான் பிறன்கேடு, தன்கேடு பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண் என்பதும் பொய்யாமோ? என் உடல் பதறுகின்றது. உள்ளம் துடிக்கின்றது. சீற்றம் பொங்குகின்றது. என் செயக் கடவேன்—ஆ! மதுரையைச் சும்மா விடேன் - நான் பத்தினிப் பெண்டிர் பிறந்த பட்டினத்தில் பிறந்தவள். யான் கற்புடையவளாயின் இம்மதுரையையும் அழிப்பேன். என் மறக்கற்பின் திறனைக் காண்பாயாக'' என வீர மொழி பகர்ந்து தேவுமால் கொண்டாள்போல அரண்மனையினின்றும் வெளிப் போந்தாள். கோப்பெருந்தேவி, அரசன்மீது வீழ்ந்து ஆவி துறந்தாள்.

காளியோ எனக் கருதப்படும் கண்ணகி மதுரை நகருட் புகுந்து எல்லோரும் கேட்ப, "மதுரை மக்காள், நான் குற்ற மற்றவள். என் கணவனைக் கள்வன் என்று கூறிய இந்நக ரின்மீது சீற்றம் கொண்டேன்" என்று சொல்லி ஆரவாரித்து இடது மார்பிடந் தெறிந்தனள். அவ்வளவில் அங்கியங் கட வுள் அந்தணன் உருவொடு தோன்றி ஏவல் கேட்ப, கண்ணகி, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், பாலர் என்னும் இவரை நீக்கித் தீத்திறத்தார் பக்கமே பற் றுக" என்றனள். அழலும் மண்டி எரியலாயிற்று. முன் னாள் இலங்கை எரிந்துபோனாற்போல் மதுரையும் கண்ணகி கற்பால் எரிந்தது. கண்ணகி வீராவேசங்கொண்டு அங்கு மிங்கும் ஓடினள்.

அதுகாலை அல்லல் உற்று அங்குமிங்கும் அலைந்து திரி யும் வீரபத்தினி முன் மதுராபுரித் தெய்வம் தோன்றிற்று. அது கண்ணகியை நோக்கி, "கற்பிற் கணி என விளங்கும் பொற்புடை நங்காய், ஊழ்வினையால் யாவும் இவ்வாறு விளைந் தன. இவ்வினை வந்த வரலாற்றைக் கூறுவேன், கேட்டீ. இந்நகரினை யாண்ட நெடுஞ்செழியன் இதுகாறும் அரசியல் அறநெறி பிழைத்தவன் அல்லன். அன்னான் உன் கணவன் திறத்து முறை திறம்பியதையும் கூறுவேன் கேள். முன், கலிங்க தேசத்துச் சிங்க புரத்தை வசு என்பவனும், கபில புரத்தைக் குமரன் என்பவனும் அரசாண்டனர். இருவரும் தாயத்தார்கள். இருவரும் பகைமை கொண்டதால் போர் மூண்டது. இரு நகரினும் வியாபாரம் நடைபெறாது நின்றொழிந்தது. கபில புரத்தில் வசித்து வந்த சங்க மன் என்பான் தன் மனைவியோடு கரைந்துறைபவர் போல வந்து சிங்க புரத்தில் வியாபாரம் செய்தனன். அதனை

அறிந்த கோத்தொழில் பேணும் பரதன் என்பான். அவனைக் கபிலபுரத்து ஒற்றன் என்று பிடித்துக் கொன்றனன். சங்கமன் மனைவி நீலி என்பாள் கணவனை யிழந்தது ஆற்ருது, வருந்தி, மன்றும், மறுகும், சந்தும், தெருவும் திரிந்து சென்று பதினன்காம் நாள் ஒரு மலை யுச்சியை யடைந்தாள். ஆங்கு அவள், "எனக்குத் துயரம் விளைத்தோர் தாமும் வருபிறப்பில் இஃதொத்த துன்பன் எய்துவாராக" என்று சாபமிட்டு உயிர் விட்டாள். சங்கமனைக் கொன்ற பரதனே கோவலனுகப் பிறந்தான். அச்சாபம் உங்களைத் தொடர்ந்தது. ஆதலின் இத்தகைய துன்பம் உன்னைச் சூழ்ந்தது. இனி வருவதையும் கேள். இற்றைக்குப் பதினன்காம் நாள் தெய்வ வடிவோடு உன் கணவனைக் காண்பாய்" என்று கூறிற்று.

வீரபத்தினியாகிய கண்ணகி ஒருவாறு தேறினள். ஆயினும் அலமரல் அவளை விட்டு ஒழிந்திலது. "கணவனைக் காணுது, இருத்தலும், நிற்றலும், இல்லேன் ஆவேன்" என்ற வீரமொழி புகன்று கண்ணகி கையில் அணிந்த சங்க வளையல்களை உடைத்தெறிந்து விட்டு மதுரை நகரின் மேலைவாயில் வழியாகத் தனியே வந்தாள். வையைக் கரையின் வழியே மேற்றிசை நோக்கிக் கல்லும் முள்ளும், குன்றும், மலையும், மடுவும், கருதாது இரவு பகல் உணராது, நடந்து சென்று மலையாள நாட்டிலுள்ள திருச்செங்குன்று என்னும் மலையை யடைந்து ஆங்கொரு வேங்கை மர நிழலில் நின்றனள்.

கண்ணகி என்று அறியாத அக்குன்று வாழ் குறவர் அவளைப் பணிந்தனர். அன்று பதினன்காவது நாள், கோவலன் விமானத்தில் வானவர் சூழ வந்தனன். கண்ணகி

உயிரும் உள்ளமும் ஒருங்கு களிக்க விமானத்தில் கோவல ஞேடு விண்ணிற் போயினள். அக்குன்று வாழ்குறவர் இறும்பூது எய்தி அவளைத் தெய்வமெனத் தொழுது தம் குலதெய்வமெனக் கொண்டாடிக் குரவைக் கூத்தும் ஆடினர்.

கற்புக் கடம் பூண்டொழுகிய பொற்புடை நங்கை—வீரபத்தினி—கண்ணகி சேரநாட்டின் தெய்வமாயினுள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாளைத்
தெய்வந் தொழுதகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து."

---

## III. வஞ்சிச் செய்தி

### 8. பத்தினிக் கடவுளின் கோயி லெடுப்பு

சேர நன்ஞடு மலைவளம் மிகப் பெற்றது. ஆக்கள்போல் பரந்து திரியும் யானைக் கூட்டங்களை மிக்குடையது. சந்தனம், தேக்கு, அகில், அசோகு முதலிய மரங்கள் நெருங்கி அடர்ந்து வளைந்த காடுகளை உடையது. குன்றுகளும், மலைத் தொடர்களும் எங்கும் பரந்து காணப்படுவது. கான்யாறு களும், நீரருவிகளும் மலைகளினின்றும் இழிந்தோடும் காட்சி காண்பார் கண்களுக்கு நல் விருந்தாகும். சேர நன்ஞடு இயற்கையான வலிமை மிக்க மலையரணுல் சூழப்பட்டது.

இத்தகைய நாட்டிற்குத் தலைநகர் திருவஞ்சைக்களம். அத்திருநகர் பிறைமுடிதரித்த பெம்மான் இனிதெழுந்தரு ளும் திருப்பதிகள் பலவற்றுள் தலை சிறந்து விளங்குவது.

திருவஞ்சைப் பதியைத் தலைநகராகக் கொண்டு சேரன்—செங்குட்டுவன் என்பான் அரசுபுரிந்து வந்தனன். அன்னோன் இளவல் இளங்கோவடிகள் என்பார் ஆவர். அரசபாலனாயினும் இளமையிலே உலக இன்பத்தை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டொழுகி வந்தார். ஆதலின் அவரை இளங்கோவடிகள் என்று யாவரும் புகழ்ந்து கூறுவர்.

இளங்கோவடிகளே கண்ணகியின் கற்புத் திறனை நன்கு விளங்கும் இனிய செந்தமிழ் நூலாம் சிலப்பதிகாரத்தை இயற்றியவர். அவர் துறவுபூண்ட பின்னரே இந்நூலை யாத்தனர். அவராலும், அவரியற்றிய நூலாலும் தமிழ்நாடும், தமிழணங்கும் சிறப்படைதற்குக் காரணம் ஏற்பட்டது என்பதை,

"நெஞ்சை யள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்னும் புலவர் வாக்கால் அறியலாம். சிலப்பதிகாரம் என்னும் இந்நூல் தமிழணங்கின் மென் மலர்ப் பதத்தில் விளங்குறும் நல்லணி. இத்தகைய சீரிய நூலியற்றிய பெருந்தகைப் பேராசிரியர் துறவியானதன் காரணம் அறிதற்பாலதே.

சேரலாதற்கும் நற்சோணைக்கும் புதல்வராய்த் தோன்றிய செங்குட்டுவனும் இளங்கோவும் அரசர் பேரவைக்கண் தந்தையோடு அமர்ந்திருந்தனர். அக்காலை நிமித்திகன் ஒருவன் அங்கு வந்தான். அவன் அரசன் அடிபணிந்து, "மன்னவ, நின் குமரர் இருவருள் இளங்கோவிடம் அரசுரிமை பெறும் அடைவுறு மிலக்கணம் அமைந்துள்ளன" என்றான். அதனைக் கேட்டிருந்த இளங்கோ, செங்குட்டுவன் செல்லல் நீங்க, அன்றே, அப்பொழுதே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்திருந்து இளங்கோவடிகள் என யாவரும் புகழ விளங்கினர்.

சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் அரசு கட்டில் ஏறினன். செங்குட்டுவன் பகைவரைத் தன் புயவலியால் ஒடுக்கிக் குடிகளின் நன்மையொன்றையே கருதிக் கோனெறி கோடாது அரசு நடாத்தி வந்தான்.

திருவஞ்சைக்களத்திற்கு அருகில் என்றும் வற்ருது நீர் நிறைந்து, தண்ணென்று, ஆழமுடையதாய்த் தெளிந்து, மலைகளினின்றும், வெண்டுகில் விரித்தாற்போல், இழிந்தும் பள்ளத்தாக்குகளின் வழியாக வளைந்து வளைந்து பேரிரைச் சிலிட்டு ஓடியும் கண்களுக்குத் தக்க விருந்தெனத் திகழ்வது பேரியாறு. சேரன்—செங்குட்டுவன், தன் மனைவி வேண்மாளோடும், இளவல் இளங்கோவோடும் புறப்பட்டுத் தானைகள் புடைசூழ மலைவளம் காண்பான் கருதி வஞ்சியை நீங்கிச் சென்று, செழுமரங்களில் வண்டினம் பாட, மலர்கள் மணம் வீசி மலர, குயில் கூவ, மயில் ஆட, மனத்திற்கு மகிழ்ச்சியை யளிக்கும் மாண்புறு பேரி யாற்றங்கரையை யடைந்து தங்கி யிருப்பானுனன். செங்குட்டுவன் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட குன்றுவாழ் குறவர் தத்தம்மிடம் கிடைத்த மலைபடு வளனை எல்லாம் கொணர்ந்து திறைப் பொருளாக அளித்துப் பணிந்து, கண்ணகி வேங்கை மர நீழலில் விண்ணில் விமானத்தில் வந்த கோவலனேடு சென்றதைக் கூறினர்.

அது சமயம், தமிழ்ப் பயிற்சி மிக்க கூலவாணிகன் சாத்தன் என்னும் தண்டமிழ்ப் புலவன் செங்குட்டுவனை வணங்கி, "அரசே, இவ்வாறு நிகழ்ந்ததை யான் அறிந்தளவு கூறுவேன் கேள். சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங்குடியர் வழியில் மாசாத்துவானுக்கு மகனுய்த் தோன்றிய கோவலன் என்பான், அவ்வூரில் அக்குடியில் மாநாய்கன்

மகள் கண்ணகி என்பாளை மணந்து இனிது வாழ்ந்து வந்தான். ஊழ்வினைப் பயனால் அவ்வூரிலிருந்த சித்திராபதியின் மகள் மாதவி என்பாளைக் காதலித்துப் பொருள் முழுவதையும் தோற்றுப் பின், கண்ணகியோடு மதுரைக்கு வந்தான் கோவலன். அவன் அங்கு மனைவியின் காற் சிலம்பை விற்றுப் பொருள் தேட எண்ணி மதுரைக் கடைத் தெருவிற் சென்று ஒரு பொற்கொல்லனிடம் காண்பித்தனன். முன்னமே பாண்டியன் மனைவியின் சிலம்பை வஞ்சித்த அப்பொற்கொல்லன் கோவலனைத் திருடன் எனப் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கூறினன். தீவினைப் பயன் தொடர்ந்ததாதலின் பாண்டியன் ஆராய்ந்து பாராது அவனைக் கொல்லும்படி கட்டளை யிட்டனன். கோவலன் கொலையுண்டான். அவன் மனைவியாகிய கற்புடைக்கண்ணகி சீற்றங்கொண்டு பாண்டியன் அவை சென்று கோவலன் கள்வன் அன்று என நிரூபிக்கப் பாண்டியன் அரசு கட்டிலிலிருந்து நிலத்தில் வீழ்ந்து மாண்டான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் கொழுநனைத் தழுவி உயிர் துறந்தாள். பின்னும் சீற்றந் தணியாத கண்ணகி மதுரையை எரியூட்ட நின்றுடு புகுந்து அம்மலையில் வேங்கைமர நீழலில் கோவலன் இறந்த பதினான்காம் நாள் வந்து நிற்ப, அப்பொழுது விண்ணிற் கோவலன் விமானத்தில் வர, வீரபத்தினி—கண்ணகி அவனோடு துறக்கம் புக்கனள்'' என்று கூறினர். மற்றும் தண்டமிழாசான் சாத்தன், மதுரை எரியுண்ட காலைத் தான் அவ்வூரில் இருந்ததாகவும் கூறினர்.

யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த செங்குட்டுவன், வேண்மாளை நோக்கி, "தெரியிழாய்,கணவன் உயிர் துறப்ப, அது பொறுது அவன்மீது வீழ்ந்து அவனோடு மடிந்த

கோப்பெருந்தேவி சிறப்புடையவளோ? அன்றேல், கண வன் கொலையுண்டதை நினைந்து சிற்றங்கொண்டு, மதுரையை எரிக்கடவுட் களித்து நம் நாடு புகுந்து கணவனோடு யாவருங் காண விமானத்தில் விண்ணிற் போகிய சேயிழை சிறப்புடை யாளோ? கூறுதி" என்றனன்.

அதுகேட்ட வேண்மாள், "என் இன்னுயிர்த் தலைவ, கோப்பெருந்தேவி, கணவனோடு தேவருலகிற் பெருந் திரு வெய்தி வாழ்க. நமது நாட்டிற் புகுந்த தெய்வமாகிய வீரபத்தினி - கண்ணகியைக் கடவுளெனப் பரவுவோம்" என்றனள். அமைச்சரும் அவ்வாறு புரிதலே ஏற்புடைத் தாம் என்றனர். பத்தினிக்குச் சிலை செய்யக் கல்லெடுத்தற்கு இமயமே தகுதியாய மலை என்னும் முடிவை யடைந்து கங்கை நீர்ப்படை செய்வதெனவும் தீர்மானித்தனர். பின் செங் குட்டுவன் அனைவரோடும் வஞ்சிமாநகர் வந்தெய்தினன். பறையறை மாக்கள் யானைப் பிடரிமிசை முரசேற்றிச் செங் குட்டுவன் கற்கொணர இமயம் நோக்கி வடபுலம் செல்வதை அறைந்து அறிவித்தனர்.

"வடபுல ஆரிய மன்னருள் கனகன். விஜயன் என்றும் இரு வேந்தர், தமிழ் மன்னர் ஆற்றல் உணராது இகழ்ந்தனர்" என்றான். ஆண்டிருந்த ஓரந்தணன் அவ்வாறாயின் அவரை வென்று பத்தினிக் கடவுளின் படிமக் கல்லை அவர்கள் தம் தலைமீது சுமந்து வருமாறு செய்வேன்" என்று வஞ்சினங் கூறி எழுந்தான் வஞ்சிக்கோமான்.

நிமித்த நன் நூலோன் கூறிய பிரயாணத்திற்குரிய நல் லோரையும் வந்தது. வாளும் குடையும் வடதிசைப் போக்கி வஞ்சிமாலை சூடிச் சிவபெருமானை வணங்கித் திருவருள் பெற்றுப் பல்லோர் வாழ்த்தப் பத்தினிக் கடவுளின் படி

மக்கற் கொணர இமயம் நோக்கித் தானைகள் புடைசூழ எழுந்தான் சேரன் செங்குட்டுவன்.

செங்குட்டுவன் சிறப்போடு பிரயாணமாகி நீலகிரியை யடைந்தான். அக்காலை நூற்றுவர் கன்னர் அனுப்பிய திறைப் பொருளை விருப்பொடு கொண்டு செங்குட்டுவன், கங்கையைக் கடக்க நாவாய்கள் அமைக்கப் பணித்தனன். அவர்களும் அவன் கருத்திற்கு இசைந்தனர்.

பின், செங்குட்டுவன் புறப்பட்டுவடபுலம்புக்கு வட நாட்டுப் பகைபரசரின் நாட்டை முற்றுகையிட்டான். கனகனும், விஜயனும் அவர் துணையாளரும் படை திரட்டிப் போருக்கு எழுந்தனர். சேரன் சேனை சினந்தெழுந்தது. போரும் மூண்டது. இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதங்களிலும், பாரதப் போர் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும், ஆரிய மன்னனும் புரிந்த போர் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தது. கனக விஜயர் சிறைப்பட்டனர்.

பின், செங்குட்டுவன் நூற்றுவர் கன்னரால் சித்தப்படுத்திய நாவாய்களில் ஏறிக் கங்கையைக் கடந்து இமயம் எய்தினன். பத்தினிக் கடவுளின் படிமத்திற் கேற்ற சிலையும் எடுக்கப்பட்டது. அதனைக் கனக விஜயர் தலைமீது சுமந்து வரக் கங்கையாற்றை யடைந்து கங்கை நீர்ப்படை செய்தனர். பின், நாவாய்களிலேறிக் கங்கையின் தென் கரையை அடைந்து ஆரிய வரசர்கள் அமைத்த அழகிய பூஞ்சோலையில் விளங்கிய வெள்ளிடைப் பாடியில் செங்குட்டுவன் இனிது தங்கியிருந்தனன்.

அப்போது மாடல மறையோன் என்பான் அங்கு வந்து வஞ்சிக்கோமானைப் பணிந்து, கோவலன் சரிதையைக் கூறிக் கோவலன், கண்ணகி என்பாரின் தந்தையர் தம் செல்வத்

தைத் தானமாகப் பலர்க்கும் வழங்கிவிட்டுச் சமணத் துறவியாயினர் என்றும், கோவலன் தாயும், கண்ணகி தாயும் துயர் ஆற்ருது மாண்டனர் என்றும், மாதவியும் மணிமேகலையும் புத்த சமய பிக்குணியாயினர் என்றும், மாதரி அடைக்கல மிழந்ததைக் குறித்து வருந்தி நள்ளிருளில் தீக்குளித்தாள் என்றும், கவுந்தியடிகள் உயிர் நீத்தாள் என்றும் கூறினன். மற்றும் அம்மறையோன் தான் பாவந் தீரக் கங்கைப் புனல் படிய வந்ததையுங் கூறினன். "பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தானுக, கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரை உயிர்ப்பலி யளித்தான். அதனுல் நாடு செழித்தது" என்றும் அவ்வந்தணன் அறைந்தான்.

யாவும் கேட்ட சேரன் செங்குட்டுவன் அந்தணனுக்கு வேண்டுவ வளித்து மகிழ்வித்தான். பின், வேந்தன் வஞ்சி நோக்கிப் புறப்பட்டுச் சின்னுளில் திருவஞ்சைக்களம் வந்து சார்ந்தனன். வெற்றியோடு வேந்தன் வஞ்சி புகுந்ததையறிந்த மக்கள் கழிபேரின்ப மெய்தினர். கனக விஜயர் சேரன் கட்டளைப்படி பாண்டிய சோழ மன்னர்கட்குக் காட்டப்பட்டனர். மாடல மறையோனும் கங்கையாடி வஞ்சி மூதூர்க்கு வந்து மன்னனைப் பணிந்தனன். அவன் செங்குட்டுவனுக்கு யாக்கை, செல்வம், இளமை முதலியவைகளின் நிலையாமையை இனிதெடுத்துரைத்து நல்லறிவுச் சுடர் கொளுத்தி இனிச் செல்நெறிக்குத் துணையாக இராசசூய யாக மியற்றுமாறு கூறினன்.

...யோனின் நல்லுரை கேட்ட செங்குட்டுவன் ...ற விடு... ...னன். பத்தினிக் கடவுளின் படி ... செங்குன்றின்மேல் கோயிலும்

சமைக்கப்பட்டது. நன்னூளும் குறுகிற்று. ஆரிய வரசரும், கொங்கு நாட்டரசர்களும், சோழனும், பாண்டியனும், இலங்கைக் கயவாகுவும் வந்தெய்தினர். நன்னாளில் பத்தினிக் கடவுள் ஆய கண்ணகியின் படிமச்சிலையம் நாட்டப்பட்டுப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கண்ணகியின் பார்ப்பனத் தோழியான தேவந்தியும், மாதரியின் மகளான ஐயையும் திருச்செங்குன்றையடைந்து செங்குட்டுவனை வணங்கித் தாம் தாம் இன்னர் இளையர் என விளம்பி நின்றனர். இந்நிலையில், தெய்வத் திருக்கோலத்தோடு கண்ணகியை—வீரபத்தினியை—கற்புத் தெய்வத்தைக் கண்ணிற் கண்டான் வஞ்சிக் கோமான். வீரபத்தினி, யாவரும் காணக் காட்சி தந்து, "செங்குட்டுவன் நீடு வாழ்க" என யாவரும் கேட்க வாழ்த்தி மறைந்தருளினள்.

கோவலன் தாய், கண்ணகி தாய், மாதரி என்பார் மூவரும் அரட்டன் செட்டி என்பானுக்கு இரட்டைப் பெண்களாகவும், ஆடகமாடத்துச் (திருவனந்தபுரம்) சேடக்குடுமியன் என்பானுக்கு மகளாகவும் பிறந்து அப்பெருந் திருவிழாவுக்கு வந்திருந்தனர். அப்போது, தேவந்தியின்மீது பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம்பொருந்தி அவன் கைக்கொண்டிருந்த கரக நீரை அம்மூவர்மீதும் தெளிக்கும்படி மாடல மறையோனுக்குக் கூற, அவனும் தெளித்தனன். தெளித்ததும் மூவரும் முற்பிறப்புணர்ந்து வருந்தியழுதனர். அப்பொழுது அரட்டன் செட்டிக்குக் கோவலன் தாயும் கண்ணகி தாயும் இரட்டைப் பெண்களாகவும் சேடக்குடுமியனுக்கு, மாதரி மகளாகவும்பிறந்தமை யார்க்கும் விளங்கிற்று.

யாவும் கேட்ட சேரன் செங்குட்டுவன்
ளுக்குப் பெருஞ் சிறப்போடு

பணித்தான். பத்தினிக் கடவுளுக்கு நித்தமும் பூசை புரியத் தேவந்தியை நியமித்தான். அக்காலை ஆரிய மன்னரும், கனக விஜயரும் கொங்கு நாட்டு மன்னரும், மாளுவ மன்னரும், இலங்கைக் கயவாகுவும், பத்தினிக் கடவுளைப் பணிந்து தத்தம் நாட்டினும் எழுந்தருளி அருள் புரியுமாறு இறைஞ்சி நின்றனர். "அங்ஙனமே யாகுக' என்று வீரபத்தினி—கண்ணகி தெய்வ வடிவோடு தோன்றி வர மருளினள்.

பின், சேரன், செங்குட்டுவன், மாடல மறையோனோடும் மற்ற மறையவரோடும் இராசசூய யாகத்தின் பொருட்டு யாக சாலை புகுந்தான்.

ஆரியவரசரும், பிறரும் தத்தம் நாட்டை யடைந்து பத்தினிக் கடவுளுக்கு ஆலயம் சமைத்துப் பத்தினிக் கடவுளின் படிமம் செய்து பிரதிட்டித்துப் பெருவிழா வெடுத்தனர். அவர்கள் நாடுகளும் மழைவளம் மிகுந்து மாண் பொருள் பெருகி மங்கலம் பெற்று மேம்பாடுற்றன. மக்களும் மகிழ்ந்து வாழ்ந்தனர்.

இப்பெரும் பீடுடை மெய்ச் சரிதம் ஒப்புடை மாப் பெரும் புகழ் படைத்த சேர சோழ பாண்டி நாடுகளில் நிகழ்ந்தது. ஆதலின் மூவேந்தரையும் ஒப்பக் கருதும் ஒரு போது நோக்குடைய இளங்கோவடிகளே இயற்றுதற்கு உரியார் என உணர்ந்து கூலவாணிகன் சாத்தன் என்னும் புலவர் பெருமான் இளங்கோவடிகளை வேண்டிக் கொண்டார். அவர் வேண்டு கோட்கு இணங்கி இளங்கோவடிகள், சோழ, பாண்டிய நாடுகளில் நிகழ்ந்த செய்திகளை அப்புலவர் பெருமான் வாயாற் ...வர் சேர நாட்டில் நிகழ்ந்ததைத் தாம் நேரில் ...னத்தமைக் ...ச் சிலம்பு காரணமாக நிகழ்ந்த ...ப் பெயர் அமைத்து

இயற்றியருளினர். இந்நூலில், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றமாகும் என்பதும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் போற்றுவர் என்பதும், ஊழ்வினை பெருவலியுடையதாதலின் உறுத்து வந்தூட்டும் என்பதும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கூலவாணிகன் சாத்தன் மணிமேகலை துறவு பூண்டதை "மணிமேகலைத் துறவு" என்னும் பெயர் புனைந்து நூல் இயற்றியருளினர். சிலப்பதிகாரத்தைச் சாத்தனும், மணிமேகலைத் துறவை இளங்கோவடிகளும் படிக்கக் கேட்டனர்.

இருபெரும் புலவர்களும் தாம் தாம் இயற்றிய 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலைத் துறவு' என்னும் இருநூல்களையும் தமிழணங்கிற்குப் பாதச் சிலம்பாகவும், இடை பெறு மணிமேகலையாகவும் என்றும் அழியா எழிலுறு அணிகளாக அணிவித்துப் பேரும் புகழும் எய்தினர்.

Copies can be had of from :—

Messrs. S. M. JAGANATHAM,

Book-seller, NAGERCOIL.

S. T. REDDIAR & SONS,

Printers, Publishers, Book-sellers etc.,

TRIVANDRAM.